www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 131 செப். 25- ஒக். 08 , 1997 விலை 10.00 ரூபா

# ஜயசிக்குறு : அழிவை நோக்கி !

ஃபாதரினதும் கதி



## திருமலை சந்தை : அரசின் சண்டித்தனம்!

## வெள்ளவத்தை : இடிக்கப்பட்ட தமிழ் வீடு!



ஏ.ஆர். ரகுமானின் :

## வந்தே மாதரம்

## வாண்டே மாற்றம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

**ஆசிரியர் குழு**
பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
**ஆசிரியர்**
**சரிநிகர்**
**4, ஐயரத்ன வழி,**
**திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு - 05.**

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தில் பிரதி செய்தோ அனுப்பி வைக்கவும்.

## மந்திராலோசனை!

புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணியின் தலைவர் ஸ்ரீமணி அத்துலத்முதலி உட்படக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் மக்கள் ஐக்கிய முன்னணியின் (எம்.ஈ.பி.) தலைவர் தினேஷ் குணவர்தன உட்பட அதன் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கடந்த சில தினங்களுக்கு முன்பு விஷேட பேச்சுவார்த்தையொன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ மணியின் வீட்டில் இரண்டரை மணி நேரமளவில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அரசின் அரசியல் தீர்வுத் திட்டத்துடனும் அரசியலமைப்புத் திட்டத்திருத்தத்துடனும் தொடர்பான விடயங்கள் அங்கு விஷேட பேச்சுவார்த்தைக்குள்ளானதாக இரு கட்சிகளதும் தகவல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றன.

## பணம் பாதாளம் வரை பாயும்!



தொழில்துறை வட்டாரங்களில் பிரபல்யமான ஒரு புள்ளி ஹரி ஜயவர்தன.

பிரேமதாச ஆட்சிக்காலத்தில் அவர் லங்கா மில்க் பூட்ஸ் (லக்ஸ் பிறே) நிறுவனத்தை தனியார் மயமாக்கல் திட்டத்தின் கீழ் வாங்கினார்.

வெகுவிரைவிலேயே அந்த நிறுவனம் கிட்டத்தட்ட மூடுவிழா நிலையைக் கண்டது.

இலங்கை வடிசாலைக் கூட்டுத்தாபனத்தையும் இவ்வாறே அவர் வாங்கினார்.

இதுமட்டுமல்லாமல், பல லாபகரமான நிறுவனங்களை இவர் வாங்கித் தள்ளினார்.

அண்மையில் 'ஸ்டாசன்' நிறுவனத்தில் வருமானவரி அதிகாரிகள் புகுந்து பலகோடி ரூபா பெறுமதியான ஜவுளி வகைகளை குறைத்துக் கணக்குக்காட்டி இறக்குமதித் தீர்வைக்கு 'பெப்பே' காட்டியது என்ற குற்றச்சாட்டின் பேரில் சோதனை செய்தார்கள். பல பொதிகளையும் கண்டுபிடித்தார்கள்.

இந்த நிறுவனமும் ஹரி ஜயவர்தனவுக்கு சொந்தமானது! அவர் இந்தச் சோனை தொடர்பாக ஜனாதிபதியிடம் நேரடியாகவே முறையிட்டும் உள்ளார். எப்படியோ இந்த விசாரணைகள் அரசியல் தலையீட்டால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை இவருக்குச் சொந்தமான ஸ்ராசன் எக்ஸ்போர்ட்ஸ் ,லிமிடெட் மற்றும் ஸ்ராசன் பூட்ஸ் நிறுவனம் ஆகியவையும் வரி இறக்குமதித் தீர்வை என்பவற்றில் பெப்பே காட்டியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் கிடைத்த தகவலொன்றின்படி டுலிப் இன்ரநஷனல் நிறுவனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பதனிடப்பட்ட இறைச்சிக்கான இறக்குமதித் தீர்வையில் 43 மில்லியன் ரூபாய் வரை செலுத்தப்படாமலிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. அதுவும் இத் தீர்வை ஒரு இறக்குமதியின் போதான தீர்வை மட்டுமே என்றும் இன்னும் பெருமளவு பணம் கட்டப்படாமலிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. ஒரு காலத்தில் ஐ.தே.கவிற்கு சார்பான பெரிய வர்த்தகப்புள்ளியாகக் கருதப்பட்டவர் இவர். இப்போது அரச சார்பு 'எயார் லங்கா' நிறுவனத்தின் தலைவராக உள்ளார்!

அதிகாரம் யார் கைக்குப் போனால் என்ன அனுபவிக்க என்று சிலர் பிறந்து தான் இருக்கிறார்கள். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் திருவள்ளுவர்.

'தோன்றில் பணத்துடன் தோன்றுக' என்று அவர் பாடியிருக்க வேண்டும்.

அரசதிகாரம் துப்பாக்கி குழலிலிருந்து பிறக்கலாம். ஆனால் அதுவும் பணத்தின் முன்னால் தலை குனிந்துவிடும் என்பது இலங்கையின் இன்றைய யதார்த்தம்.

## அற்புதங்களின் காலம்!

ஜே. ஆர்.ஜயவர்தன காலிமுகத்திடலில் இருந்த பாராளுமன்றத்தை, கோட்டேக்கு மாற்றினார். 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்பார்களே அந்த மாதிரி ஒரு வேலை அது என்று அப்போது ஐ.தே.க வட்டாரங்கள் புகழ்ந்தன.

இந்தப் பாராளுமன்றத்தை உல்லாச விடுதியாக தாம் மாற்றுவோம் என்றும், இது ஒரு முட்டாள் தனமான வேலை என்றும் அப்போது எதிரணியில் இருந்த ஸ்ரீ.ல.சு.க. சொன்னது.

காலிவீதியில் இருக்கும் தனது 'பணிமனை'யை பத்தரமுல்லைக்கு மாற்றும் முயற்சியில் இறங்கினார் ஜனாதிபதி. பெருமளவு எதிர்ப்புக் கிளம்பியதுடன், இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது. பல பொது மக்களது வீடுகள் உடைக்கப்படும் என்ற காரணம் காட்டியே அப்பிரதேச வாசிகள் இதை எதிர்த்தனர்.

நீதிமன்றத்தில் அந்த முயற்சியில் ஜனாதிபதிக்கு அவ்வளவு நாட்டமில்லையென்று அரசதரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்தார்கள். அதுவும் ஜனாதிபதி நாட்டிலில்லாத ஒரு நேரத்தில்.

அப்படியானால், இந்த மாளிகைக் கட்டும் திட்டம் யாருடையது?

ஒருவேளை ஜனாதிபதிக்கு மாளிகை கட்டித்தரவேணும் என்று பொதுமக்களே தீர்மானத்தைத் தீட்டியிருப்பார்களோ? இருக்கலாம். இந்த பொ.ஐ.மு. அரசாங்கத்தில் எந்த அற்புதம்தான் நடக்க வாய்ப்பில்லை!

## ரசவாத அரசாங்கம்!

மட்டக்குளிய காக்கைத்தீவில் அரச வீடமைப்பு அதிகாரசபையினரால் தொடர்மாடித்தொடர் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்தத் தொடர் மாடித் தொடரில், வீடுகளை வாங்க விரும்புகிறவர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து அங்கலாய்ப்புடன் ஓடிய நமது மகா சனங்களுக்கு காத்திருந்தது ஏமாற்றம்தான்.
காரணம் அதன் விலை.

ஒரு வீட்டின் விலை 32 லட்ச ரூபா என்றார்கள் அவர்கள். விசாரிக்கப் போனவர்களுக்கு ஒரு சந்தேகம். தாம் தான் மாறி ஜோன் கீல்ஸ் வீடமைப்புத் திட்டத்திற்கோ அல்லது வஜிரா வீடமைப்பு திட்டத்திற்கோ வந்து விட்டோமோ என்று.

ஆனால், விசாரித்ததில் அது வீடமைப்பு அதிகாரசபையால் கட்டப்படுவது தான் என்று தெரிந்தது.

32 லட்ச ரூபா கொடுத்து வீடு வாங்க வசதி உள்ளவர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்க எதற்காக வீடமைப்பு அதிகாரசபை முயல வேண்டும்? அதற்குத்தான் எத்தனையோ தனியார் நிறுவனங்கள் இருக்கின்றனவே என்று அங்கலாய்த்தார்கள் அவர்கள்.

'என்ன இருந்தாலும் அவர்தான் மனிதன்' என்றார் ஒருவர்.

'யார்'

''பிரேமதாச தான்... அவராலை தான் இண்டைக்கு எங்களைப் போல் ஆக்களுக்கும் வீடென்று ஒன்று கிடைத்தது''

பிரேமதாசவைக் கூட நல்லவனாக்கிய பெருமை இந்த அரசாங்கத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது.

ரசவாதத்தில் இதற்கு நிகர் இதுதான் போங்கள்!

## வெளிநாட்டு பயணத்தை நிறுத்து! ஜனாதிபதி உத்தரவு!

பொது ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகளது அமைச்சர்களோ, பா.உ.க்களோ தமது அனுமதியின்றி வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளக் கூடாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க உத்தரவிட்டுள்ளார்.

தனிப்பட்ட பயணங்களுக்கும் கூடவே இத்தடை உத்தரவு பொருந்தும் எனவும், இது தொடர்பாக ஜனாதிபதி தனது கையொப்பத்துடன் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்றஉறுப்பினர்களுக்குக் கடந்த இரு வாரங்களுக்கு முன் அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளுங் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்திலும் இம் முடிவு பற்றி ஜனாதிபதி தெரியப் படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இவ்வுத்தரவு பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சில உறுப்பினர்களின் வெறுப்புக்குள்ளாகியுள்ளதாக அறியக் கிடைக்கிறது.

தாம் இவ்வுத்தரவை ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென லங்கா சம சமாஜக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட பா.உ. வாசுதேவ நாணக்கார தெரிவிக்கிறார்.

பொதுப்பணியொன்றுக்காகத் தாம் இங்கிலாந்து உட்படப் பல நாடுகளுக்குப் பயணஞ் செய்யவுள்ளதாகதாகவும், ஆனால் அதற்காக ஜனாதிபதியினதோ அல்லது ஆளுங் கட்சியினதோ பிரதான கொறடாவிடமிருந்தோ அனுமதி பெறப் போவதில்லையெனவும் அவர் கூறினார்.

தாம் தமது பா.உ.பதவிக்கு உரியதான ஆலோசனைகளையும், உத்தரவுகளையும் லங்கா சம சமாஜக்கட்சியின் பொதுச்செயலாளரிடமிருந்து மட்டுமே பெற்றுக் கொள்வதனால் ஜனாதிபதியின் உத்தரவை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதே சமயம் அரசின் அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் செய்யும் வெளிநாட்டு உத்தியோக பூர்வப் பயணங்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசனைகள் அடங்கிய விஷேட சுற்றறிக்கையொன்று ஜனாதிபதி செயலகத்தினால் அனைத்து அமைச்சுச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொ.ஐ.மு. அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக இவ்வாறான முடிவொன்று எடுக்கப்பட்டிருந்தாலும் பின்பு காலப்போக்கில் அநேகமானோர் அது தொடர்பாக அக்கறையின்றி நினைத்தபடி வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக அரசு புதிதாக இவ்வாறான நடவடிக்கையொன்றை எடுத்துள்ளதாக ஆளும் கட்சியின் உள்ளகத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஜனாதிபதிக்கோ அல்லது ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுக்கோ அறிவிக்காது வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட அமைச்சரொருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஜனாதிபதியின் கடும் கண்டனத்துக்குள்ளனதாகவும் அத்தகவல் வட்டாரம் மேலும் தெரிவிக்கிறது.

அமைச்சர்களினதும், பிரதியமைச்சர்களினதும் வெளிநாட்டுப் பயணங்கள் ஒழுங்கு செய்யப்படும் போது முதலில் வெளிநாட்டு அமைச்சுக்கு அறிவித்து அதனூடாகக் கிடைக்கும் ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு வெளிநாடுகளில் அமைந்துள்ள அனைத்து இலங்கைத் தூதரகங்களுக்கும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புலிகளுடன் பேசு! வாகரை மக்கள்!

இராணுவக் கட்டுப்பாடற்ற படுவான் கரைப்பிரதேசத்தில் கடந்த 15ம்திகதி மாபெரும் மக்கள் பேரணி நடத்தப்பட்டது. பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு பிரதேச மக்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் ஆண்கள், பெண்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், சமாதான விரும்பிகள் என ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இப்பேரணி போரதீவு, முனைத்தீவு, தாந்தாமலை, ஆயித்தியமலை, பழுகாமம், முதலைக்குடா, முனைக்காடு, அம்பிளாந்துறை, கடுக்காமுனை, கன்னங்குடா, கரவெட்டி ஆகிய இடங்களில் இருந்து காலை 8மணியளவில் ஆம்பித்து நண்பகல் ஒரு மணியளவில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுரர் ஆலயத்தை வந்தடைந்தது. இப்பேரணியில் கலந்துகொள்வதற்கு வேறு கிராம மக்களும் வாகனங்களில் வந்து சேர்ந்தனர். பதாதைகளை ஏந்தியவாறு கோசங்கள் முழங்க ஊர்வலம் நகர்ந்த வேளையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லகஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் கொடும்பாவிகள் ஊர்வலத்தோடு இழுத்துவரப்பட்டு கொக்கட்டிச் சோலை சந்தியில் வைத்து எரியூட்டப்பட்டது. ''மாணவர்கள் நாங்கள்; எதிர்காலத்தின் தூண்கள்'', ''பாடசாலைகளில் குண்டு போட்டு எம்மை அழிக்காதே'', ''பேனா ஏந்தும் கரங்களில் ஆயுதம் ஏந்த வையாதே'', ''சிங்கள மாணவர்களுக்கு ஒரு நீதி, தமிழ் மாணவர்களுக்கு ஒரு நீதியா?'' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் கோசங்கள் எழுப்பியவாறு மாணவர்கள் பேரணியின் முன்னால் செல்ல ''சந்திரிகாவே தமிழ் மண்ணில் இருந்து சிங்களப் படைகளை வெளியேற்று'', 'எங்கள் மண்ணில் எங்களை நிம்மதியாக வாழவிடு', 'தமிழர் தாயகமான வடக்கு கிழக்குப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து', 'தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசு', 'அப்பாவிப் பொதுமக்களைக் குண்டு போட்டு அழிக்காதே', 'சர்வதேசமே நாங்கள் படும்துயரைக் கண்திறந்து பார்' என்ற கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிக் கொண்டு மக்கள் பின்னால் செல்ல பேரணி தான் தோன்றீசுரர் ஆலயத்தை வந்தடைந்தது. பிரதேச ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனக்கூட்டத்தில் இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை மிகுந்த ஆவேசத்துடன் தங்களது உரைகளில் வெளிப்படுத்தினர். இதேவேளை இக்கூட்டத்தில் வைத்து இரண்டு லட்சம் மக்கள் கையொப்பமிட்ட மகஜர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி அலன் கொலினிடம் பிரதேச மக்கள் ஒன்றியத்தினால் கையளிக்கப்பட்டது. இந்த மகஜரின் பல்வேறுபட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

1. கடந்த 40வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறை ஆட்சியை நடத்தி எங்கள் சுயநிர்ணய உரிமையை பறித்து எங்கள் மண்ணிலே எங்களைக் கொன்று குவிக்கும் இன ஒழிப்பு யுத்தத்தை நடத்தி வரும் ஸ்ரீலங்கா அரசே யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசி அமைதியை ஏற்படுத்த வேண்டும்.

2. வடகிழக்கில் இராணுவக் கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில் அர்த்தமற்ற முறையில் வீசப்படும் எறிகணைத் தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

3. நாங்கள் எங்களுடைய தாயகமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழுகின்றோம். எங்கள் தாயகத்தில் சிங்களவர்களை குடியேற்றாதே, எங்களை எங்கள் தாயக மண்ணில் நிம்மதியாக வாழவிடு, தமிழர்களை அழிக்க நினைப்பது மனிதாபிமானமுமல்ல, ஜனநாயக ரீதியான செயலுமல்ல. எனவே தமிழ் மக்களை நிம்மதியாக வாழ வாழவிடு.

4. வன்னிப்பரப்பில் நடந்து கொண்டிருக்கும் அர்த்தமற்ற யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் செத்து, மடிந்து நிர்க்கதியான நிலையில் அகதிகளாக உணவு, உறையுள், மருத்துவம் இன்றி திண்டாடுகின்றார்கள். இக்கொடிய யுத்தத்தை நிறுத்தி அப்பாவி மக்களுக்கு உணவையும், மருந்தையும் அனுப்பும்படி அரசாங்கத்தைக் கோருகிறோம்.

5. தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்ற இன ஒழிப்பு நடவடிக்கையை சர்வதேசம் மௌனியாக பார்த்துக் கொண்டிக்கின்றது. உலகத்தில் தமிழர் என்றொரு இனம் வாழக்கூடாது என்ற நியதியா? தமிழ் கலாசார பண்பாடுகள், படையினரால் மாசுபடுத்தப்படுகின்றன. தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகின்றனர். இவ்வாறான நிலைகளில் எல்லாம், ஏனைய நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படும் போது அதனைத் தடுக்க குரல் கொடுக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கூட எங்கள் நாட்டில் நிகழும் இன ஒழிப்பு நடவடிக்கைகளைப் பார்த்து மௌனமாக இருப்பது ஏன்? சிங்கள அரசின் அர்த்தமற்ற இனப் போரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் விடுதலைப் புலிகளுடன் நியாயமானமுறையில் இதய சுத்தியுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தும்படியும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் அந்தமகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மதன்

## புல் டோசர் அரசாங்கம்!

ஐ. தே.கவை ஒரு தூசு என்று நினைக்க வைக்கிற விதத்தில் இந்த அரசாங்கம் நடந்து வருகிறது என்பதற்கு உதாரணங்கள் எத்தனையோ சொல்லலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட மிஞ்சிய ஒன்று என்பதற்கு ஒரு உதாரணம் தான் அண்மையில் வெள்ளவத்தை கிரகரிஸ் அவனியூவில் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்று சந்தேகிக்கப்படும் தமிழர் ஒருவரது வீட்டை புல்டோசர் கொண்டு இடித்தசம்பவமாகும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் வெறும் வடக்கு கிழக்கில் மட்டும் வீடுகளும், கட்டிடங்களும் புல்டோசர்களால் தரைமட்டமாக்கப்படவில்லை. கொழும்பிலும் அவை நடக்கத் தொடங்கி விட்டன. இந்த வீடு இடிக்கப்பட்டதுக்கு முன்பும் கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டிப் பகுதிகளில் விடுதிகளும், வீடுகளும் இவ்வாறு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

## புத்திஜீவிகள் வெளியேற்றம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த தமிழ்ப் புத்திஜீவிகளில் பாரிய எண்ணிக்கையினர் வட பகுதியைக் கைவிட்டுச் சென்றுள்ளனர் என யாழ் குடாநாட்டுக்குப் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரி தளபதி மேஜர் ஜெனரல் பீ.ஏ.கருணாதிலக தெரிவிக்கிறார்.

சடந்த சில தினங்களுக்கு முன்பு யாழ் சென்றிருந்த தொடர்பூகவியலாளர்கள் சிலரைச் சந்தித்த சந்தர்ப்பத்திலேயே அவர் இக்கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இன்று குடாநாட்டில் உள்ள சிவில் திணைக்களம் குறிப்பிட்டளவு தூரம் நலிவடைந்து போயுள்ளது. அதனால் அரசின் செயற்பாடுகளும் நலிவடைந்துள்ளன.

இங்கிருந்த புத்திஜீவிகள் கொழும்புக்குச் சென்று தங்கியுள்ளனர். அவர்கள் திரும்ப இங்கு வர தயங்குகின்றனர். அதிகமான வைத்தியர்கள் அரச திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரே யாழ்ப்பாணம் வர விரும்பாதவர்களாவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் கராணமாக யாழ்ப்பாணத்தில் மக்களின் வாழ்வைச் சுமூக நிலைமைக்குக் கொண்டு வருவது சாத்தியமற்றிருப்பதாக யாழ்ப்பாணத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இனவாத லொத்தர்!




பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதான கூட்டுக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினுள் சில வருடங்களுக்கு முன்பு "ஹெல உருமய" (சிங்களப்பாரம்பரியம் அல்லது உரிமை) என்ற பெயரில் இனவாதத்தைப் பிரதான அடிப்படையாகக் கொண்ட குழுவொன்று இயங்கி வந்தது என்பதும் அக்குழுவில்பல முன்னணி இனவாதிகள் அங்கம் வகித்தனர் என்பதும் தெரிந்ததே.

இப்போது பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சினால் வெளியிடப்படும் "செவன" சுரண்டல் லொத்தர் சீட்டொன்று "ஹெல உருமய" என்ற பெயரில் வெளியிடப்பட்டு அமோக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

## அவர்களுக்கு தெரியாதாம்!

பொலிஸ் அதிகாரிகள் சிலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பாவித்து நபர்களைக் கைது செய்வதை மீள ஆரம்பித்துள்ளதால் அவ்வாறான நிலைமையொன்றுக்கு இடமளிக்க வேண்டாமென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவிடமும், மின்சக்தி எரிபொருள், அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தையிடமும் கோரியுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது எச்சந்தர்ப்பத்தில் என்பது தொடர்பாகச் சில பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவூட்டப்படவில்லையெனவும், அவர்கள் நினைத்தபடி செயற்படுவதன் காரணமாக மக்களினால் அரசு மீது கடுங் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டள்ளதாகவும் அப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேசமயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பாவித்து சில பொலிஸ் அதிகாரிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலரைக் கைது செய்து தாக்கியுள்ளதால் அது தொடர்பாக விஷேட கவனம் கொள்ளுமாறு பெலியத்த தேர்தல் தொகுதியின் பிரதேச சடை உறுப்பினர்கள் 13 பேர் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவிடம் கடித மூலம் கோரியுள்ளனர். இக்கடிதத்தின் பிரதியொன்று மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டக்களப்பு மாவட்டம் கடந்த பலவருடங்களாக யுத்த சூழ் நிலைகளினால், பல்வேறுபட்ட அழிவுகளையும், இன்னல்களையும் அனுபவித்து வந்த வேளையில் விஷ சாராயத்தின் விபரீதம் இன்று பலரது கவனத்தையும் தன்பால் ஈர்த்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் உத்தியோக பூர்வ அறிக்கைகளின்படி இறந்தவர்களின் எண்ணிக்கை 63 ஆகும். ஆனால் மொத்தமாக இறந்தவர்களின் எண்ணிக்கை 70க்குமேலாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. வீடுகளில் இறந்தவர்களின் கணிப்பீடுகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பவில்லை.

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் 600பேர் வரையில் விஷ சாராயம் அருந்தியமையால், சிகிச்சை பெற்றிருக்கின்றனர். இதில் 110க்கு மேற்பட்ட பெண்களும், சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் 50பேர் வரையில் கண்பார்வையை முற்றாக இழந்துள்ளனர். வேறு சிலர் சிறு சிறு நோய்களால் பாதிக்கப்பட்டும் இருக்கின்றனர்.

24 உத்தரவு பெற்ற மதுச்சாலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. விஷ சாராய விவகாரத்தில் மாட்டிக்கொண்டது, ஐந்து மதுபான விற்பனை நிலையங்களாகும். இந்த ஐந்து நிலையங்களுக்கும் விநியோகஸ்தரும், நடத்துனருமான, புஞ்சியப்பு ராமகிருஷ்ணன் என்ற கேரள மாநிலத்தைச் சேர்ந்தவரே விஷ சாராய கலப்படத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படுகிறார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி கொழும்பு தனியார் கம்பனியான AEF கம்பனியின் உற்பத்தி செய்த சாராயத்திலேயே மனித பாவனைக்கு உதவாத மீதைல் அற்க்கோல் கூடிய (பழைய, அழுகிய பழங்களையும், இரும்பு, செப்பு கம்பிகளையும், பாவனைக்கு உதவாத காட்டு காய்களையும் காய்ச்சி வடித்த சாராயம்) விஷ சாரா்யம் கலக்கப்பட்டிருக்கிறது. விஷம் கலக்கப்பட்ட சாராயப் போத்தலுக்கு மூன்று வருடங்களுக்கு முன் AEF கம்பனியினரால் பாவிக்கப்பட்ட லேபல் (தற்போது பாவனையில் இல்லை) ஒட்டப்பட்டிருந்தது.

AEF கம்பனி சாராயப்போத்தல் லேபலுக்கும், இதற்கும் நிறைய வித்தியாசம் இருப்பதை காண முடிகின்றது. இதே போல் மூடியும் வித்தியாசமாக இருந்தது.

இவைகளை நகரில் விற்றால் மாட்டி விடக் கூடும் என்ற பயத்தினால்தான், கூடியளவு சாராயத்தை படுவான்கரை மக்கள் பயன்படுத்தும் எருவில் மதுபான விற்பனை நிலையத்திற்கு அனுப்பியிருக்கின்றார்கள்.

எருவில் மதுபான விற்பனை நிலையத்தை சோதனை செய்த போது AEF கம்பனியின் பழைய லேபல் ஒட்டப்பட்ட 208 நஞ்சு கலந்த சாராயப் போத்தல்களும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றுப்போத்தல்களும், மூடிகளும் கைப்பற்றப்பட்டு இருக்கின்றது. உண்மையில் எருவில் மதுபான விற்பனை நிலையத்துக்கான அனுமதிப்பத்திரம் ஒகஸ்ட் 31ம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது. ஆனால், செப்டம்பர் 1,ம் 2ம், 3ம் திகதி வரை விற்பனையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இதில் எந்தளவுக்கு மதுவரித்திணைக்களமும், காவல் திணைக்களமும் அவதானமாக இருந்திருக்கின்றது என்பது கேள்விக்குரியதே.

இறந்தவர்களில் 90%மானவர்கள் எருவில் வீற்பனை நிலையத்தில் மதுபானம் அருந்தியவர்கள் தான். மதுவரித்திணைக்களமும், காவல் திணைக்களமும் கடமையுணர்வுடன் செயற்பட்டிருந்தால், காலாவதியான அனுமதிப் பத்திரத்துடன் மூன்று நாட்கள் வியாபாரம்-செய்ததை தடுத்து இருக்கலாம். இதனால் இந்த மூன்று நாட்களிலும் நச்சுச் சாரயம் விற்பதை தடை செய்வது மட்டுமல்லாது, இதைக் குடித்து மரணத்தைத் தழுவியவர்கள் தொகையையும் குறைத்திருக்கலாம்.

இந்த நிலையில் மதுவரித்திணைக்களமும், காவல் திணைக்களமும் இதற்கு பதில் சொல்லியேயாக வேண்டும். ஆயிரக்கணக்கில் வாங்கிக் கொண்டு பாராமுகமாய் இருப்பதன் பிரதிபலன் தான் இது என்பது யாருக்கும் புரியாததல்ல.

பலரின் மரணத்துக்குக் காரணமாயிருந்த நச்சுச் சாராயம் தெமட்டகொடையில் உற்பத்தி செய்யப்பட்டு, மாத்தளையில் முஹம்மட் சாஹிட் என்பவருக்குச் சொந்தமான கடைக்கு கொண்டு வரப்பட்ட பின்பே இலங்கையின் பல பாகங்களுக்கும் விநியோகிக் கப்படுகின்றது.



மாததளையில் இருநது தான கடநத மாதம் 28ம் திகதி இந்த் நச்சுச் சாராயம் மட்டக்களப்பு கோட்ட முனை ரெஸ்ட் ஓரியன்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

வி. கங்காதரன் என்பவருக்குச் சொந்தமான இந்த மதுபானச் சாலையை கடந்த பல வருடங்களாக இராமகிருஷ்ணனே நடத்தி வருகின்றார். இவரின் உத்தரவுப் படியே ரஞ்சன், பிரதீப் ஆகிய இருவரும் இந்த நச்சுச் சாராயத்தை எடுத்து வந்திருக்கிறாகள.

இவர்கள் இருவரும்தான் வழமையாக கொழும்பில் இருந்து இராமகிருஷ்ண்னனுக்கு சாராயம் கொண்டு வருபவர்கள். இதனால் இதனைக் கொண்டு வந்து சேர்ப்பதில் இவர்களுக்கு பெரும் சிரமங்கள் எதுவும் இருக்கவில்லை. வழமைக்கு மாறாக, ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் இரு பியர் போத்தல்கள் கொடுத்து வந்திருக்கிறார்கள். இராமகிருஷ்ணனின் திட்டப்படி கோட்டை முனை மதுசாலைக்கு சரக்கு வந்து சேர்ந்ததால், 29ம்திகதி இரவு கலப்பட வேலைகள் ஆரம்பித்திருக்கிறது.

தர்மசேன என்பவரே இந்தக் கலப்பட வேலைகளைச் செய்துள்ளார். இவர் 40 போத்தல் வரை கலந்ததுடன் மயக்கமடைந்திருக்கிறார். உடனே இவருக்கு ஏனையவர்கள் முதலுதவி அளித்து மயக்கம் தெளிநதவுடன் தொடர்ந்து அவரும் ரஞ்சன், சாமி என்பவர்களும் சேர்ந்து மூக்கிலும் வாயிலும் துணியைக் கட்டிக்கொண்டு மேலும் 80 போத்தல்கள் வரை கலந்திருக்கிறார்கள்.

இந்தப் போத்தல்களுக்கான மூடிகளும், மூடி அடைக்கும் இயந்திரமும், தெமட்டக்கொடையில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இயந்திரமும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

முதன் முதலில் சென்றல் ஹோட்டலிலும், கோட்டைமுனை மதுச்சாலையிலும மது அருநதயவாகளே இறந்துள்ளனர். இதை அறிந்தவுடன் இரண்டு மது விற்பனையாளர்களும் போத்தல்களையெல்லாம் உடைத்து சாராயத்தை மலசல கூட குழியினுள் ஊற்றி விட்டார்கள். இதனால் நச்சு சாராயங்களை இங்கிருந்து பொலிசாரினால் கைப்பற்ற முடியாமல் போய்விட்டதாகத் தெரிகிறது.

| | |
|---|---|
| நச்சுசாரயம அருந்தியதாக சிகிச்சைப்பெற்றவர்கள் | 600 |
| இறந்தவர்கள் (உ.பூ.அறிக்கையின்படி - | 63 |
| கண்பார்வை அற்றவர்கள் | 05 |

இது இவ்வாறிருக்க கோட்டை முனை, எருவில் மதுசாலைகள் மதுவரித்திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்படாது உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட விற்பனை நிலையங்களாகும். வணக்கஸ் தலங்களும், பாடசாலைகளும் 500 யாருக்குள் இருப்பதனாலேயே இதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்க மறுக்கப்பட்டது.

ஆனால், மனித உரிமை மீறலின் கீழ் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## நச்சுச் சாராய விற்பனையில் சம்பந்தப்பட்ட மது விற்பனை நிலையங்கள்

| மதுபான விற்பனை நிலையம் | உரிமையாளர்கள் | விநியோகிப்பவர் | தற்போது நடத்துபவர்கள் |
|---|---|---|---|
| 1 கோட்டைமுனை றெஸ்ற் ஓறியன்ற் | வி. கங்காதரன் | பி.ராமகிருஷ்ணன் | பி.ராமகிருஷ்ணன் |
| 2. புதுக்குடியிருப்பு வெளிநாட்டு குடிவகை வி. நிலையம் | திருமதி.ஆர்.பி. கனகரத்தினம் | பி.ராமகிருஷ்ணன் | பி.ராமகிருஷ்ணன் |
| 3. சென்றல் ஹோட்டல் | திருமதி.ஆர்.பி.கனகரத்தினம் | பி.ராமகிருஷ்ணன் | பி.ராமகிருஷ்ணன் |
| 4. எருவில் எப்.எல்.ஆர். வி.நி. | சி. வி.ரேப்பிள் | பி.ராமகிருஷ்ணன் | ஆர். பிறேமானந்தா (ராமகிருஷ்ணனின் புதல்வர்) |
| 5. கோணவார் | | பி.ராமகிருஷ்ணன் | பி.ராமகிருஷ்ணன் |

கலப்படம் செய்யப்பட்ட மீதைல் அற்கோல் ஒரு மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அளவு 10-15 மில்லி கிராம் ஆகும். 100 மீ.லீ. இரத்தத்திற்கு 10 மி.லீ. மீதைல் அற்கோல் ஒரு மனிதனின் உடம்பில் இருக்குமானால், கண்பார்வையிழந்து உடன் மரணிக்கக் கூடிய சாத்தியமும் இருக்கின்றது.

சிலவேளைகளில் உடம்பில் வேறு நோய்கள் இருப்பின் இதை விடக் குறைந்த அளவு அற்கோலிலும் ஒரு மனிதன் மரணிக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. இறந்தவர்களின் உடல் பரிசோதனை செய்யப்பட்ட போது அளவுக்கு அதிகமான எதனோல் - எதைல் அற்கோல் என்பனவும் காணப் பட்டன.

எது எவ்வாறிருப்பினும், இந்த மனித உயிர்களைக் காவு கொண்ட சாராயம் அரச அங்கீகாரம் பெற்ற மதுபான நிலையங்களில் விற்கப்பட்ட சாராயத்திலேயே இக்கலப்படம் நடந்திருக்கின்றது ஆனால் இது பற்றி அரசாங்கமோ, ஜனாதிபதியோ வாய்மூடி மௌனிகளாக இருந்து விட்டனர்.




இது போன்ற ஒரு சம்பவம் தென்னிலங்கையில் நடந்திருந்தால், இன்றைக்கு எத்தனை ஆணைக்குழு, விசாரணைக்குழு, நிவாரணம், புனர்வாழ்வு என பல தடபுடல்கள் நடந்தேறியிருக்கும்.

பாதிக்கப்பட்ட அனைவரும் த்மிழர்கள். இவர்கள் குண்டு போட்டு அழிக்கப்பட வேண்டியவர்கள் தானே...., கொஞ்சம் முந்தி நச்சு கலந்து அழிந்திருக்கிறார்கள். இதில் நமக்கு என்ன பங்கு? நமக்கு லாபம் தானே என அரசு மௌனமாக இருந்து விட்டது போலும்... பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதில் முந்தியடித்து நிற்கும் தமிழ் அரசியல் தலைவர்களும் இதில் அதிகம் அழுத்தம் செலுத்தாமல் இருந்து விட்டார்க்ள். தங்களின் சிபாரிசின் பேரில் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட மதுசாலைகளும் இதனுள் இருக்கிறதே என்ற அச்சம் காரணமாக இருக்கலாம்.

கலப்பட சாராய சாம்ராஜ்யத்தின் தந்தை ராமகிருஷ்ணன், பிரதான கலவையாளர் ரஞ்சன், எஸ். வடிவேல், வே. கங்காதரன், நித்தியானந்தன், நடேசராஜா, முஹம்மட் சாஹிட் ஆகிய முக்கிய ஏழு சந்தேக நபர்களும் மட்டக்களப்பு நீதிபதி விஸ்வநாதனால் பிணை மறுக்கப்பட்டு தற்போது மட்டக் களப்பு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறையில் வைக்கப் பட்டிருக்கும் சந்தேகநபர்களை ஒரு நாளைக்கு ஒரு தடவை ஒருவர் வீதமே பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. ஆனால் சிறைச்சாலை நிர்வாகம் ராமகிருஷ்ணனை பார்வையிட வருவோரை எந்நேரமும் அனுமதிக்கின்றது. அது மட்டுமன்றி ராமகிருஷ்ணனுக்கும் ஏனைய சந்தேகநபர்களுக்கும் விஷேட வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவர்களை பிணையில் விடுவிப்பதற்கும், நச்சுச் சாராய விடயத்தை மூடிமறைப்பதற்கும் மட்டக்களப்பின் பிரபல வழக்கறிஞர் மூவர் மூலம் பல லட்ச ரூபாயுடன் மதுவரித்திணைக்கள உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் வரை தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

நூற்றுக் கணக்கான மக்களைக் கொன்றொழித்து, பலரை வாழ்க்கை பூராவும் நோயாளியாக்கிய, நீண்ட காலமாய் இயங்கிவரும் ராமகிருஷ்ண சாராய சாம்ராஜ்யத்தினை அம்பலப்படுத்திய சாராய விடயத்தில் மட்டும் மௌன விரதம் பூண்டுள்ள மட்டக்களப்பு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் கலைந்து எழுவார்களா?

ஆனாலும் இந்த சதி வலையின் உண்மை நிலைமை எந்தளவுக்கு வெளிச்சத்துக்கு வரும்? இதனால் பாதிக்கப்படடவர்களுக்கும், இறந்தவர்களுக்குமான நிவாரணங்களும் எந்தவகையில் கைக்கு கிட்டும் என்பது கேள்விக்குரியதே?

கீழ் மட்டங்களிலும் நச்சுச் சாராய கலப்படம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் விதம் பலரது விசனத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. நச்சுச் சாராய கலப்பட விற்பனையில் சம்பந்தப்பட்ட இரு விற்பனை நிலையங்கள் அண்மையில் ஓய்வுபெற்ற தமிழ் பொலிஸ் உயரதிகாரி ஒருவரின் மனைவியின் பெயரில் இருப்பதாலும், இராமகிருஷ்ணனுக்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வரையுள்ள அரச உயரதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினர் வரையுள்ள செல்வாக்கும், உண்மை நிலைமைகள் எந்தளவுக்கு வெளிவர அனுமதிக்கும் என்பதும் கேள்விக்குரியதே? ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூடக்குதிரைக்கு சறுக்கினதாம் சாட்டு!

தீர்வுப் பொதியில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் இந்த நாட்டின் ஒற்றையாட்சித் தன்மைக்கும், சிங்கள மக்களுக்கும் எவ்வளவு ஆபத்தானவை என்பதை மக்களுக்கு விளக்குவதற்கான உடனடிப் பிரச்சார ஒழுங்குகளை மேற்கொள்வதன் மூலம் இப்பொதியை அவர்கள் நிராகரிக்கச் செய்ய வேண்டும்.

★ சிங்கள மக்களுக்கும் மற்றும் சமூகங்களுக்கும் பல ஆபத்தான பின்விளைவுகளைத் தரக்கூடியதும், பௌத்த மதத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதும், நாட்டைப் பிளவுபடுத்தக் கூடியதுமான இந்த புதிய சட்டவரைவைப் பாராளுமன்றத்தில் நிராகரிக்கும்படி தமது பிரதிநிதிகளிடம் வற்புறுத்துமாறு மக்களுக்கு அறைகூவல் விடுக்க வேண்டும்.

★ ஸ்ரீலங்கா எப்போதும் ஒரு ஒற்றையாட்சி அமைப்பாகவே இருந்து வந்தது என்பதை உறுதி செய்வதுடன் அதை எக்காலமும் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

★ ஸ்ரீலங்கா அதன் முழு நிலப்பரப்பிலும் இந்நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளுக்கும் சொந்தமானது என்றும், அதில் எந்த ஒரு பகுதியும் ஒரு இன சமூகத்திற்கோ, மொழிச்சமூகத் திற்கோ பிரத்தியேகமான வதிவிடமாக, விஷேடமாக அங்கீகரிக்கப் படமாட்டாது என்றும் பிரகனப் படுத்தப்பட வேண்டும்.


★இந்த நாடு இன அடிப்படையில் அரசியல் காரணங்களுக்காகவோ, வேறெதற்குமாகவோ பிரிக்கப படாதிருப்பதை உறுதிப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ இன்றைய அரசியலமைப்பு சட்டத்திலுள்ள 157வது சரத்துக் கூறுவது போன்று, எந்த ஒரு நபரோ, ஸ்தாபனமோ தனிநாடொன்றை ஸ்ரீலங்காவினுள் உருவாக்குவதைத் தூண்டும் நடவடிக்கையை தடைசெய்யும் சட்டச் சரத்து எந்தவொரு எதிர்கால சட்டத் திருத்தங்களிலும் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

★ எந்தவொரு அதிகாரப் பரவலாக்கலும்,

1. ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பை பாதுகாப்பதாகவும்,
2. சட்டமும் ஒழுங்கும், பொலிஸ், அரச காணி, துறைமுகங்கள், விமான நிலையங்கள், எல்லா அகழ்வாய்வுப் பிரதேசங்கள், நீதிபரிபாலனம் ஆகிய துறைகளில் அரசாங்கம் தன் முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டதாகவும் அமைதல் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் எந்த அரசியல் கட்சியாலும் தீர்மானிக்கப் பட்ட தீர்மானங்கள் அல்ல. 'தேசிய ஒருங்கிணைப்புக் கூட்டுக் கமிட்டி' என்ற நாடெங்குமுள்ள பல்வேறு சிங்கள அமைப்புகளின் தலைமைக்கமிட்டிக்கு அண்மையில் வெளியிடப்பட்ட சிங்கள கமிசனது இடைக்கால அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தான் இவை. கடந்த டிசமபர் மாதம் இக்கமிட்டியால் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.டபிள்யூ. வல்பிற்ற தலைமையில் உருவாக்கப்பட்ட சிங்களக் கமிசன் தனது விசாரணையின் பின் வெளியிட்டிருக்கும் இடைக்கால அறிக்கையே இது. இலங்கை அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்பு திருத்தத்தை எதிர்க்கும் முகமாக வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கையின் முன்னுரையிலேயே இதுபற்றித் தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது. அரசாங்கம் இவ்வருட வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்பாக அரசியலமைப்புத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதால், தேசிய கூட்டுக் கமிட்டி இதற்கெதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப் பாகவே இவ்வறிக்கை வெளியிடப் பட்டிருப்பதாகக் கூறுகிறது.




இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்படவிருக்கும் தீர்வுப்பொதி இலங்கையின் 2500ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றிற்கு வந்துள்ள மிகப்பெரிய அச்சுறுத்தலாகும் என்று குறிப்பிடும் இந்த இடைக்கால அறிக்கை அதை நிராகரிப்பதற்கான தனது காரணங் களையும் தந்துள்ளது. ஆக, அது குறிப்பிடும் காரணங்களில் சில இவைதான்:

★ இந்தப் பொதி குறிப்பிடும் சமஷ்டி' ஆட்சிமுறை இன்று உலகில் எங்குமே காணப்படாத ஒரு விசித்திரமாக இருக்கிறது.

★ இது இலங்கையின் பிற எட்டோ ஒன்பது பகுதிகள் மீது எத்தகைய கட்டுப்பாடுகளையும் கொண்டிராத ஒரு அரசையே கொண்டு வர முயற்சிக்கிறது. இந்தப்பகுதிகள் பிராந்தியப் பட்டியலில் குறிப் பிட்டபடி 46 விடயங்களில் இவை ஒவ்வொன்றும் முழு அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

★ இதிலுள்ள மிகவும் ஆபத்தான விடயம் என்னவென்றால், பிரேரிக் கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணசபை, அது தமிழர்களை பெரும்பான்மையாகக்கொண்ட ஒரு சபையாக இருப்பதுடன், அதற்கு நிலம், சட்டம், ஒழுங்கு, பொலிஸ் என பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது தான். இதனால் இது வெறுமனே வரதராஜப்பெருமாளைப்போல தனி நாட்டுப் பிரகடனம் செய்வதுடன் மட்டுமல்லாமல், அதைப்பாதுகாக்க தனது சொந்தப் பொலிஸ் படையையும் கொண்டிருக்கும். மேலும் இது சில நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறும் வாய்ப்பும் இருக்கிறது. அப்படியெல்லாம் நடக்காது என்று இதிலுள்ள 2வது சரத்து குறிப்பிட்ட போதும், அது வெறும் சட்டவார்த்தையாகவே இருக்க முடியும். நாம் யதார்த்த நிலையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

★ தமிழ் அரசியல்வாதிகளுக்கு 1949லிருந்தே இந்த தனியரசு அமைக்கும் நோக்கம் இருந்தது. ஆங்கிலத்தில் 'பெடரல்பாட்டி' என்று இருந்த போதும் தமிழரசுக்கட்சி என்றே அவர்கள் தமிழில் அதை அழைத்தார்கள். இது தான் பிறகு வரதராஜப்பெருமாளை தனி நாட்டுப் பிரகடனம் செய்ய வைத்தது!

★சக்தி வாய்ந்த வடக்கு கிழக்கு மாகாணசபை தனது பொலிஸ் படைகளைக் கொண்டு ஒரு இராணுவத்தை கட்டுவதற்கு எந்தத் தடையும் இருக்கப் போவதில்லை. இந்த அரசியலமைப்புச் சட்டத்தை வெறும் காகிதமாக உதறிவிட்டு அவர்கள் சுதந்திரப் பிரகடனம் செய்யலாம்...

★இதன் விளைவு என்னவென்றால், இந்த நாட்டின் இறைமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக தமது இன்னுயிரை தியாகம் செய்த ஆயுதப் படையையும் பொலிசையும் சேர்ந்த எமது வீரநாயகர்களது தியாகம் வெறும் பயனற்ற ஒன்றாகிப் போவது தான்.

ஆயினும், அதிர்ஷ்டவசமாக, அரசியல்வாதிகளது இத்தகைய செயல் பாட்டுக்கு மத்தியிலும், அரசாங்கம், மக்களது ஆதரவு இன்றி நடைமுறைப்படுத்த முடியாது என்பது எமக்கு ஆறுதல் தருகின்றது. இதைப்புரிந்து கொண்டுதான் இந்த அரசாங்கம் ''சமாதான ஊர்தி'' என்ற நிகழ்ச்சியை நடாத்துவதன் மூலமாக, இந்த சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதே சமாதானத் திற்கு வழி என்று கூறுகிறது!

★ஆனால் இந்தப்பொதியால் சமாதானததைக்கொண்டு வர முடியாது. இதை செய்ய ஒரே வழி புலிகளை வெற்றி கொள்வதே. சமாதானத்தை உடைத்த அவர்களை தோல்வியுறச் செய்வதன் மூலமே சாத்தியம். ஆனால் அவர்களே இந்தப் .பொதியை நிராகரித்து விட்டார்கள்...

சிங்களக் கமிசன், அது தனது பெயருக்கேற்ற விதத்தில் தனது கடமையைச் செய்திருக்கிறது. சமாதானப் பொதியை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு முடிந்தளவு தடையைப் போடுவது தான் அதன் நோக்கம்.

ஆனால், என்ன பரிதாபம் இது?

எந்தப்பொதி, இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு எந்தத்தீர்வையும் வழங்காது என்று பொதுவாக அனைத்து தமிழ்க் கட்சிகளுமே சொல்லிய பின்பும் கூட, இவ்வளவு சிரமப்பட்டு சிங்களக் கமிசன் இந்த அறிக்கையை தயாரித்திருக் கிறது.

ஆக, இதன் மூலம் விளங்குவது ஒன்றுதான்:

ஐந்து ஊர் கேட்ட பாண்டவர்க

→20

## சிங்க(ள)த் தேசியம்

எட்டியாந்தோட்டையில் ஒரு பிள்ளையார் கோவில். கட்டிட வேலைகள் முடிந்து, புதிதாக அங்கு விழாவெடுக்கப்பட்டது அண்மையில்.
அப்பிரதேசத்திலுள்ள அனைத்து இனமக்களதும் ஆதரவுடன் கட்டப்பட்ட இக்கோவில் விழாவில் பெரிய பிரச்சினை ஒன்றை உருவாக்கி விட்டது அங்கிருந்த சிலை.
சிங்கமொன்றின்மீது காலூன்றியபடி நிற்கும் ஒரு உருவத்தின் சிலையே பிரச்சினையை உருவாக்கிய சிலையாகும்.
இதுமாதிரி சிலைகள் நாடுபூராவும் உள்ள இந்துக்கோவில்களில் எல்லாம் சாதாரணமாகக் காணப்படும் சிலைதான். அப்படியிருக்க இந்தச் சிலை தொடர்பாக மட்டும் பிரச்சினை வரக்காரணம் என்ன?
காரணம் இதுதான்; அந்தக் கோவிலுக்கு அருகாமையில் உள்ள பௌத்த விகாரை ஒன்றின் தலைமைக்குருவுக்கு, இந்தச்சிலை சிங்கள மக்களை அவமதிக்கும் அவர்களது உணர்வுகளை புண்படுத்தும் ஒன்றாகப் பட்டுவிட்டது.
இதற்கு, இக்கருத்தைக்கூறுபவர்கள் சொல்லும் காரணம் மிகவும் புதுமையானது.
அதுதான், சிங்கம் இலங்கையின தேசியக்கொடியில் இருக்கும் ஒன்று என்பதால், அதன் மீது காலை வைத்து நசுக்கியபடி இருக்கும் சிலை சிங்கள மக்களைப் புண்படுத்தி விடுமாம்!
இதில் உள்ள இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அந்தச் சிங்கம் வேதனையால் துடிப்பது போல் இருப்பதுவும், அதன் மீது காலை வைத்திருக்கும் உருவம் பிரபாகரனைப் போல இருக்கிறது என்ற அவர்களது கண்டுபிடிப்பும்தான்.
இந்தக் கருத்தாளர்களின் பேதமையை சுட்டிக்காட்டி யுக்திய பத்திரிகை கடந்தவார இதழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தது.
கொழும்பிலுள்ள இந்து ஆலயங்களுக்கு வரும் பல சிங்கள பக்தர்களுக்கு இது ஒன்றும் புதிய சிலை அல்ல. அப்படியானால் துர்க்கா தேவிகூட ஒரு பெண்புலியாக அர்த்தப்பட்டிருப்பாள்.
நல்லவேளை, இத்தகைய புத்திபேதலித்தவர்கள் தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு போகவில்லை.
போகிறபோக்கில், இவர்கள் அங்கு போனால் தேசியக் கொடியிலிருக்கும் மிருகம் கூட்டில் இருப்பதா என்று கூட்டைத் திறந்து விட்டாலும் விட்டிருப்பார்கள்.
பக்கத்திலே உள்ள கூட்டிலிருக்கும் புலிக்கு என்ன நடக்கும் என்று சொல்லவா வேண்டும்? கூட்டுக்குள் வைத்தே அடித்துக்கொன்றாலும் கொன்றிருப்பார்கள்!
வாழ்க சிங்க(ள)த் தேசியம்!

## நக்கினர் நிலை

ஈரோஸ்காரர்கள் எதிர்பாராத ஒரு அடியை, அவர்களுக்கு கொடுத்திருக் கிறது இந்திய உளவுப்படை.
ஊட்டி வளர்த்தவனே எட்டி உதைத்த கதையாய்ப் போக அதிர்ந்து போயிருக்கிறார்கள் அவர்கள்!
இந்திய அந்நிய செலவாணிச்சட்டத்திற்கு மாறாக வெளிநாட்டு நோட்டுக்களை கடத்தினார் என்று குற்றம் சாட்டி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஒருவரைப் பிடித்தார்கள் இந்திய சுங்க அதிகாரிகள். கிட்டத்தட்ட இந்திய ரூபாயில் 50லட்ச ரூபா வெளிநாட்டுக் காசுகளுடன்.
பிடிபட்டவர் யார் என்று அப்போது சுங்க அதிகாரிகளுக்கு தெரியாது.
பிடிபட்டவர்கள் தான் ஒரு றோவின் கையாள் என்ற உண்மையை சொல்லியும் பார்த்தார். அவர்கள் விடுவதாக இல்லை. றோ அதிகாரிகளும் பாராமுகமாக இருந்து விட்டார்கள். விளைவு? இன்று ஈரோஸ் தலைவர் சங்கர் ராஜி சென்னை மத்திய சிறையில் விளக்கமறியலில் வைக்கப்

பட்டிருக்கிறார்.
ஐயோ பாவம். அவரை விட்டுவிடுங்கள் கடந்த 23 வருடங்களாக நாம் உங்கள் பூமியில் எந்த சட்டவிரோத செயலும் செய்யவில்லை. உங்கள் சட்டத்துக்கோ, உபசாரத்துக்கோ நாம் அபசாரம் செய்வில்லை. அவர் தவறுசெய்தால் மன்னித்து விடுங்கள்' என்று அழுதழுது மன்றாடி, இந்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறார் சுதாமாஸ்டர்.
1983 இலிருந்து இந்திய உளவுப்பிரிவின் (Raw) விசுவாசமிக்க தொண்டனாக கடமையாற்றி முடியுமானளவுக்கு தமிழ் மக்களின் உரிமைப் போரை இந்தியா தமது அரசியலுக்கு பயன்படுத்த உழைத்து வந்தவர் சங்கர் ராஜி கைநிறையக் காசும் வசதிகளும் அவருக்கும், அவரது இயக்கத்திற்கும் அவரது இந்தக் கடமைக்குப் பரிசாக கிடைத்தபோதும், அவர் இந்தியாவுக்கு ஆற்றிய 'சேவை'க்கு இவை கொஞ்சமும் போதுமானவையல்ல.
அப்படிப்பட்ட ஒரு விசுவாசமிக்க தொண்டனைக் காப்பாற்ற முடியாதென்று இப்போது றோ கைவிரித்துவிட்டது.
சங்கர் ராஜி எவ்வளவோ பேருடன் தொடர்பு கொண்டு கெஞ்சியும் றோ அசையவில்லை. பாவம், அவர் சிறைக்குள் இருந்தபடி தனக்காக ஒரு சட்டத்தரணியை வைத்து நீதிமன்றத்தில் வாதாடவேண்டிய நிலை.
இந்திய அரசு எவ்வளவு நன்றியுள்ள ஒரு அரசாங்கமாக இருக்கும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்!
தன் காரியம் முடிந்தால் யாரையும் அது தூக்கி வீசத் தயங்காது என்பதை தெளிவாகவே அது உணர்த்திவிட்டது.
சமாதானப்படையாக வந்து தமிழ் மக்களை சமாதி கட்டிய படை என்ற பெயருடன் இந்தியப்படை திரும்பிப் போனபின்னும் புத்திவராத பலர் இன்னமும் இங்கு இருக்கிறார்கள்.
இந்தியாவின் கடைக்கண் கருணை இல்லாவிட்டால் தமிழர்களே அழிந்தார்கள் என்பது போல், அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியாவிடம் அடைவு வைத்த தமிழ்க் கட்சிகளும் இங்கு இருக்கின்றன.
தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைக் காட்டிக் கொடுத்தாவது தம் வயிற்றுப் பிழைப்பை நடாத்த விரும்புபவர்களுக்கு இதுமட்டுமல்ல, இதுக்கு மேலேயும் கூட நடக்கலாம்!
நக்கினார் நாவை மட்டும் இழப்பதில்லை; வாழ்வையும் தான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்...02

எனது முதல் அத்தியாயம் வந்ததும் நிறையப்பேர் என்னிடம் ரெலிபோன் செய்தும், நேரடியாகவும் சில கேள்விகளைக் கேட்டனர். அதாவது, ஏன் இந்தத் தொடரை ஆரம்பித்தீர்கள்? இதனூடாக எதை வாசகர்களுக்கு விளங்க வைக்க முயல்கிறீர்கள் என்று.

ஈழம், தமிழ் ஈழம் என்ற தீர்மானங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கங்கள் இன்று வரையும் கண்ட முன்னேற்றம் என்ன என்றால், பல்லாயிரம் உயிர்களைக் காவுகொடுத்து பலரை ஐரோப்பிய குடிமக்களாக்கியதுடன் இன்னும் சிலரை கொழும்பு வாசிகளாக்கி குளிரூட்டப்பட்ட அறைகள், ஹில்டன் ஹோட்டல் சாப்பாடு என பணக்கார வியாபாரிகளாக்கியது தான் மிச்சம். இன்று வரை கண்ட பலன் ஏதுமில்லை.

இதற்கிடையில் இந்தக் கொழும்பு வாசிகளும், ஐரோப்பிய குடியேற்றக்காரர்களும் தங்கள் இருப்பை பலப்படுத்திக்கொள்ள அடிக்கடி ஊர்காவற்படை, ஜிகாத் என எங்களையும் கொஞ்சம் உசுப்பி விட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்குகின்றனர் இந்த வேடிக்கை விநோதக்காரர்களுக்கு பதிலளிக்கவே இக் கட்டுரைத் தொடர்.

மேலும் களத்தில் நிற்கும் சந்திரிகா அரசுக்கும், தளத்தில் நிற்கும் மறவன் பிரபாகரனுக்கும் நாம் என்றும் தலை வணங்குவோம். சரியோ தவறோ இது கொள்கைச் சண்டை. அதை விட்டு விட்டு இங்கு கொள்ளைச் சண்டை போட்டுக் கொண்டு எங்களையும் குளிர்காயப் பாவிப்பது. இவ்வாறு பாவித்ததால் ஏற்பட்ட விளைவுகளை ஆணிவேரில் இருந்து குருத்தோலை வரை பாமர/ புத்திஜீவிகளுக்கு புரிய வைப்பதே எனது நோக்கம்.

**எச்சரிக்கைகள்:**

எனது முதல் அத்தியாயத்தை பார்த்து விட்டு,

- ஒரு கொழும்புவாசி தனது அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர்களுக்கு ரெலிபோன் செய்து 'என்ன, மவ்சூக் கட்டுரை எழுதுகின்றார். நீங்கள் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்' என எச்சரித்துள்ளார்.
- இன்னொரு தொண்டரடிப் பொடியன், இலக்கியத் தாரகை, கிழக்கின் மணிக்கூடு வீடு வரை வந்து 'நீர் என்ன கட்டுரை எழுதுவது? உமக்கு என்ன உரிமை இருக்கின்றது கட்டுரை எழுத? எங்கள் பலம் என்ன தெரியுமா?' எனக் கனைத்து விட்டுச் சென்றது.
- கிழக்கு மாகாண ஒவ்வொரு இளைஞனினதும் அழிவுக்குக் காரணமான ஒரு குணம்குடிமஸ்தான் என்னைச் சந்தித்து 'தோழர் கட்டுரை எழுதுவது சரி. என் பெயரைப் போட்டு எனது தற்போதைய கௌரவத்தை கெடுத்துவிடாதீர்கள்' என்றார். ஆம் அடுத்த வாரத்தில் இருந்து இவருக்கு கொழும்பில் வீடு கிடைத்துவிடும் ஜாலி.
- ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'தோழர் எழுதுங்கள். ஆனால் பூதம் கிளம்பி விடுமோ தெரியாது' என்றார்.
- கிழக்கு மாகாண இளைஞர்கள் 'ஒட்டு மொத்தமாக எழுது மச்சான். ஆனால் அதற்கிடையில் உன்னைத்தட்டினாலும் தட்டுவார்கள். அதனால் விடயங்களை திகதி வாரியாக நோட்பண்ணி எங்களிடம் ஒரு பிரதி தந்து விடு. ஏதும் அசம்பாவிதங்கள் நடந்தால் தொடருவோம்' என்றனர்.
- ஒரு முரட்டுக்குரல் டெலிபோனில் 'என்ன மிஸ்டர் மவ்சூக் ஆயுளை குறைத்துக்கொள்ளும் ஐடியாவா?' எனக் கேட்டது.
- முஸ்லிம் இளைஞர்கள் சிலர் ஓடிவந்து 'என்ன, எங்கள் பெயர்களும் வருமா'' எனக் கேட்டனர்.

***அலியார் மவ்சூக்***

வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்...-02

# மட்டு.சிறையுடைப்புக்கான துப்பாக்கிகளைத் திரட்டியது எப்படி?

### முன்னாள் ஜிகாத் அமைப்பாளர் எழுதுகிறார்

1983 ஜூலைக் கலவரம். கிட்டத்தட்ட நாடேபற்றி எரிகின்றது. வானொலிகள் ஒட்டுமொத்தமாக சோககீதங்கள் இசைத்துக் கொண்டிருக்கின்றன. நாடு பூராவும் போக்குவரத்துத் தடைப்படுகின்றது. இக்காலகட்டத்தில் குன்சி குலசேகரம் என்ற ஒரு இடைக் காட்டுச் சிங்கம் என்னுடன் நிற்கின்றது. இவருடன் கொழும்பு வர்த்தக வங்கியில் (கொமர்ஷல் பேங்க்) வேலை செய்த ஒரு இளைஞரும் நின்றார். ஒரு நாள் இவர்கள் இருவருடனும் செங்கலடி வங்கிக் கொள்ளை சம்பந்தமாக கைதாகி விடுதலையாகி இருந்தவரும், முன்னாள் பொத்துவில் எம்.பி., எம்.சி. கனகரத்தினம் அவர்களின் புதல்வருமான ரஞ்சன் கனகரத்தினம் அவர்களை சந்திக்க பொத்துவில் போனோம். அங்கிருந்து நாம் நால்வருமாக ''உல்லை'' உல்லாசப் பிரயாணிகள் வாசஸ்தலம் சென்றோம். அங்கு முன்னாள் வடகிழக்கு மாகாண சபை நிதியமைச்சரான கிருபாகரன் Sun Rice Resturant என்ற பெயரில் ஒரு கொட்டகை அமைத்திருந்தார்.

இங்கு நாம் சென்றதன் நோக்கம் ரஞ்சன் கனகரத்தினத்தை எமக்கு ஆதரவாளராக மாற்றவே. இவர் ஒரு புலி ஆதரவாளர். செங்கலடி வங்கிக் கொள்ளையில் பிடிபட்டதும் இவருக்காக வாதாட புலித் தலைமை எவ்வித கரிசனையும் எடுக்காததால் வேறு ஏதாவது இயக்கத்தில் இணையும் மனநிலையில் இவரிருந்தார்.

நாம் இவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது வானொலிச் செய்தியில் '53 தமிழ் இளைஞர்கள் பனாகொடை, மகஸின் சிறைகளில் கொலை செய்யப்பட்டதால், ஏனைய கைதிகளை மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றி உள்ளதாக' செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. (இத்தாலிய விமான மொன்றை தனி ஒரு ஆளாக நின்று கடத்திய சேபால ஏக்கநாயக்கா என்ற சிங்கள இளைஞரின் தலைமையில் இக்கொலைகள் நிகழ்த்தப்பட்டு பௌத்த மதத்துக்கு சேறு பூசப்பட்டது.)

வானொலிச் செய்தியைக் கேட்டதும் அருகில் நின்ற குன்சி குலசேகரத்திடம் ''மட்டக்களப்பு சிறையை உடைத்து தோழர்களை மீட்கலாமே'' என்றேன். அவர் உடனடியாக 'அது முடியாது. சிரமமான காரியம்' என்றார். ஆனால் அடுத்த நாள் காலை எனக்குக் கூடச் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ போய்விட்டார். ஐந்தாறு நாட்களில் மீண்டும் வந்த இவர் மட்டக்களப்பு சிறையை உடைக்க தீர்மானித்ததாகவும், ஆனால் எமது இயக்கத்திடம் ஆயுதம் இல்லாததால் கைவிட்டுள்ளதாகவும் சொன்னார். ஆனால் இவா சென்று மூன்றாம் நாளே ...குப் பல தகவல்கள் கிடைத்தன. அதாவது மட்டக்களப்பு சிறையை உடைத்து கைதிகளை மீட்க ஈ.பி.ஆர்.எல்.எப், யாழ் தலைமை புளொட், ரெலோ, தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைகளிடம் உதவி கேட்டதாகவும், ஆனால் அவர்கள் ஒட்டுமொத்தமாக கைவிரித்து விட்டதாகவும் தெரியவந்தது.

கிழக்கில் இதுவரை நாம் எந்தவொரு தாக்குதல்களையும் நிகழ்த்தவில்லை. அவ்வாறு நிகழ்த்தி ஏதாவது நடக்கக் கூடாது. நடந்து விட்டால் அனைத்து நடவடிக்கைகளுமே பிசுபிசுத்துவிடும் என்று எமது இயக்கத்துக்கு மறுப்பு தெரிவித்த ஏனைய இயக்கங்கள்; அடுத்த நாளே தங்கள் தானைத் தளபதிகளை மட்டக்களப்புக்கு அனுப்பி தாமே தனியாக சிறையுடைத்து சாதனை புரிய ஏற்பாடுகள் செய்தன. இதில் புளொட் அமைப்பும், ஒன்பதே ஒன்பது இளைஞர்களை அங்கத்தவராகவும், தம்பாபிள்ளை மகேஸ்வரனைத் தலைவராகவும் கொண்ட ''டெரா'' (Tera) என்ற ஒரு ''லெட்டர்ஹெட்'' இயக்கமும் முழுமூச்சாக இறங்கின.

லண்டனில் உயர்கல்வி கற்றுக் கொண்டிருந்த தம்பாபிள்ளை மகேஸ்வரன் என்ற இவர் ஈழப் போராட்டத்தால் கவரப்பட்டு பல இயக்கங்களில் செயல்பட்டு; பின் பிடிபட்டு பனாகொடை சிறையில் இருந்து சிறையதிகாரிகளுக்கு பணம் கொடுத்து தப்பியோடி, பேலியகொடையில் மீண்டும் பிடிபட்டு மீண்டும் மட்டக்களப்பு சிறையில் இருந்து தப்பி காத்தான்குடி வங்கிக் கொள்ளையை (3 ¾ கோடி) சித்தார்த்தன் குழுவினருடன் நடாத்தி தற்போது இந்தியா, பிரான்ஸ், லண்டன், ஜேர்மன் என வியாபாரத்தைப் பரப்பி குடியும் குடித்தனமுமாக இருக்கும் ஒரு 'தூய ஈழவிடுதலைப் போராளி'. அன்று காத்தான்குடி வங்கிக் கொள்ளைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி இன்று கஞ்சிக்கும் வழியில்லாமல் மட்டக்களப்பு சந்தைச் சதுக்கத்தில் பொன்னாங்காணி கீரை விற்கும் எம்மவன் எட்டப்பன் துரோகி) விடயத்துக்கு வருவோம்.

ஐந்தாறு நாளில் வந்த குன்சியிடம் ஆயுதம் இருந்தால் செய்யலாமா என்றேன். ஆம் என்றார். அப்படி ஆயுதம் சேகரித்தால் உங்களிடம் உள்ள லெபனான்பயிற்சி பெற்றவர்கள் ஆதரவு தருவார்களா என்றேன். ஆம், உதவுவார்கள். ஆனால் எவ்வாறு ஆயுதம் சேகரிக்கப் போகிறீர்கள் என்றார். சிறிது நேரத்தில் போய் விட்டார்.

நான் அன்றே உடனடியாக தம்பிலுவில், திருக்கோயில் பகுதிகளில் பொதுமக்களிடம் உள்ள உத்தரவுப்பத்திரத்துடனான துப்பாக்கிகளைக் கொள்ளையிடுவதென முடிவு செய்தேன். உடனடியாக எனது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு தம்பிலுவில் போய் சின்னப் பொடியன் (நாகேஷ்), கந்தசாமி ஆகியோரை சந்தித்து இன்றிரவு குறைந்தது 15 துப்பாக்கிகளையாவது இப்பகுதியிலிருந்து திரட்டவேண்டும். யார் யாரிடம் லைசன்ஸ் துப்பாக்கிகள் உள்ளன என்ற விபரங்களைத் திரட்டுங்கள் என்றேன். சொல்லிவிட்டு அக்கரைப்பற்று வந்து கருணாநிதி, கண்ணன், வாசீகன், முகமட்ராபி ஆகியோரை அழைத்து இன்றிரவு தம்பிலுவில் சென்று துப்பாக்கிகள் திரட்டவேண்டியுள்ளது என்றேன். அப்படியானால் நம்மிடமும் ஆயுதங்கள் இருக்க வேண்டுமே என்றனர் பயப்படவேண்டாம். நான் ஆயுதங்களுடன் வருகின்றேன் என்றேன்.

நான் அடிக்கடி யாழ் போய் வருவதாலும், யாழ் தோழர்கள் பலருடன் நேரடியாக பேச்சுக்களில் ஈடுபடுவதாலும் கிழக்கு மாகாண ஈ.பி.ஆர்.எல்.எப் இளைஞர்கள் என்னில் நிறைய நம்பிக்கை வைத்திருந்தனர். என்னிடம் ஒரு ஆயுதக் கிடங்கே இருக்குமென எதிர்பார்த்தனர். நான் ஒரு முஸ்லிம் இளைஞராக இருந்து கொண்டு தமிழ் ஈழத்துக்காக பாடுபடுவதை பார்த்து ஈரோஸ், ரெலோ, புளொட் இளைஞர்கள் மட்டுமல்லாது த.வி. கூட்டணி அபிமானிகளும், ஆதரவாளர்களும் கூட என்னை வீட்டுக்கு அழைத்துச் சாப்பாடு போடுவார்கள்.

நான் ஏதோ பெரிய ஆயுதங்களுடன் வருவேன் என நம்பிக் கொண்டு இப்பகுதி இளைஞர்கள் தயாராகினர். வீட்டுக்கு வந்த நான் பெரிய 'சுடுதண்ணீர் போத்தல்'' (Flask) ஒன்றை எடுத்து அதன் வெளிப் பாகத்தை வீசிவிட்டு வெள்ளிமுலாம் பூசப்பட்ட உட்பாகத்தை எடுத்து அதனுள் மணல் போட்டு நிரப்பி இரண்டு வயர் துண்டுகளை வெளியே தெரியக் கூடியதாகப் பொருத்திக் கொண்டு இரவு 7 மணி போல் முகமட்ராபியையும் அழைத்துக் கொண்டு தம்பிலுவில் சென்றேன். நான் போய் இறங்கியவுடன் எங்கே ஆயுதம் என்றனர். வெள்ளிமுலாம் பளபளக்க காட்சியளித்த சுடுநீர் போத்தலைக் காட்டினேன். நண்பர்கள் திகைத்தனர்; என்ன இது என்றனர்.

இது ஒரு சக்தி வாய்ந்த குண்டு. யாராவது நம்மை நெருங்குவார்களானால் நான் இதை வெடிக்கச் செய்வேன். இது வெடித்தால் சுமார் 5 சதுர மைல் பரப்பு சாம்பலாகிவிடும் என்றேன். மூக்கில் விரல் வைக்காத குறையாகத் திகைத்தனர். புறப்படுவோம் என்றனர். அன்றிரவு 9மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை வீடுவீடாகச் சென்று 16 துப்பாக்கிகளைக் கொள்ளையிட்டோம்.

முதலாவது துப்பாக்கியை அக்கரைப்பற்று மக்கள் வங்கியில் கடமை புரியும் ஒருவரின் வீட்டிலும் இறுதித் துப்பாக்கியை கதிரமலை மாஸ்டர் வீட்டிலும் கொள்ளையிட்டோம்.

''ஐயா நாங்கள் தனித்தமிழ் ஈழத்துக்காக போராடும் குழுக்களைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு ஒரு அவசரத்தேவைக்காக உங்களிடம் உள்ள துப்பாக்கி தேவைப் படுகிறது. தயவு செய்து உங்கள் துப்பாக்கியைத் தாருங்கள். எங்கள் வேலைகள் முடிந்ததும் நிச்சயம் திருப்பித் தருவோம். நீங்கள் துப்பாக்கியை தராத பட்சத்தில் நாம் வீட்டினுள் புகுந்து எடுக்க வேண்டியிருக்கும்''

எல்லாவீடுகளிலும் இதே வசனங்களைத் தான் பேசினேன். வீடுகளுக்குள் நுழையும் போது காலில் போட்டிருந்த செருப்பைக் கூட கழட்டி விட்டுத் தான் உள்ளே நுழைந்தோம். ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள், பிள்ளைகள். சிறுவர்கள், தாய்மார்கள், குய்யோ, முறையோ என ஓலமிட்டனர். அனைவரிடமும் நாங்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல என்பதைப் புரியும் வரை புரிய வைத்து அவர்கள் கையினாலேயே துப்பாக்கிகளை வாங்கிக் கொண்டோம். சிலபேர் சாமியறை (பூஜையறை) யினுள் துப்பாக்கிகளை வைத்திருந்தனர். எக்காரணம் கொண்டும் பூஜையறைக்குள் நுழைய முடியாது. நீங்களே எடுத்துத் தாருங்கள் என வாதிட்டு துப்பாக்கிகளைப் பெற்றோம்

இறுதியாக கதிரமலை மாஸ்டர் வீட்டில் அவரது காலில் விழுந்து பூஜையறையில் இருந்த துப்பாக்கியைத் தருவித்தோம். நாங்கள் அவரிடம் நடந்து கொண்ட நாகரீகங்களைப்பார்த்து விட்டு திரும்பிய எங்களை கூப்பிட்டு S.G. -14 தோட்டா பதினாறும், கட்டுத் தோட்டா எட்டும் தந்து இறுதியில் டீ சாப்பீடுகின்றீர்களா தம்பிகளே எனவும் கேட்டார். அவரது வீட்டுச் செம்புக் குடங்களில் தண்ணீர் வாங்கிக் குடித்து விட்டுத் திரும்பினோம்.

தம்பிலுவைச் சேர்ந்த ''தம்பியப்பா'' என்பவர் எனது முகத்தில் கூட இரண்டு குத்துக்களை விட்டார். அதையும் பொறுத்துக்கொண்டுதான் துப்பாக்கிகளைப் பெற்றோம். ஆனால் பிற்காலத்தில் லெனினிஸம், மார்க்சிசம், ஸ்டாலினிஸம், மாவோயிஷம், பிரபாகரனிஸம் ஆகியவற்றை பரப்பவந்த தோழர்கள் எம் வீட்டுக்குள் புகுந்து எம்மினப் பெண்களின் தாலிகளை அறுத்து... அதை விடுங்கள் தாலி இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்படாத விடயம். ஆனால் எமது பள்ளிவாசலுக்குள் புகுந்து நாம் உயிரிலும் மேலாக மதிக்கும் ''குர் ஆன்''களை கிழித்து எரித்து எம் இதயங்களைக் கசக்கியதை நினைக்கும் போது ?

**(தொடருவேன்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*தமிழ் தேசியம் குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் - அரசியலாளர்களாலும்,புத்தி ஜீவிகளாலும் முன் வைக்கப்பட்டு வருகின்றது. சரிநிகரிலும் இது தொடர்பான கருத்தாடல்கள் இடம் பெற்றிருந்தன.*
*பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம்' சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலின் போது தமிழ்தேசியம் குறித்த தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்திருந்தார். அதனை சரிநிகர் வாசகர்களுக்காகக் கீழே தருகின்றோம்.*
*(ஆ-ர்)*

***தமிழ் மொழிக்கு நெருக்கடி நேரும்போதெல்லாம் தமிழ் என்ற கருத்து நிலையில் தன் நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு காலத்துக்குக் காலம் அது தன்னைக் காப்பாற்றி வந்துள்ளது என்று கூறினீர்கள். அது எந்த வாழும் மொழிக்கும், சமயத்திற்கும், பொதுவாக எந்தக் கலாசாரக் கூறுகளுக்கும் உரிய அம்சம் அல்லவா? உதாரணமாக, இலங்கையில் மட்டுமே வாழும் சிங்கள மொழிக்கு இன்னும் கூடுதலாக அது பொருந்தும் அல்லவா? தென்னிந்தியப் படை எடுப்புக்கள், தமிழுக்கு இருந்த இலக்கிய செல்வம், தமிழுக்கு அரசவட்டத்தில் இருந்த சிறப்பிடம், ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட விளைவுகள், குறிப்பாக ஆங்கில ஆதிக்கம் இவற்றி லிருந்து அது தன் மொழியைக் காப்பாற்றியுள்ளது. இது உயிர்ப்புடைய மொழிக்கும், சமயத்துக்கும் கலாசாரத்திற்கும் உரிய வாழுவதற்கான உள்ளு ணர்வு (Survival Instinct) அல்லவா? அது அதன் ஜீனியஸ் அல்லவா? உதாரணமாக, இந்தியாவில் இந்து சமயம் புத்த சமயத்தின் பிரசாரத்திலிருந்தும் இஸ்லாம் சமயத்தின் நெருக்கடியில் இருந்தும் தன்னைக் காப்பாற்றி வந்துள்ளது. இப்படி இருக்கையில் இன்றைய கால கட்டத்தில் தமிழுக்குரிய தனிச் சிறப்பாக மட்டும் அதை எடுத்துச் சிலாகித்துப் பேசுவது தமிழ்த் தேசியத்துக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கும் முயற்சி அல்லவா? அது றிவைவலிசத்தின் (Revivalism) ஓர் அம்சம் அல்லவா?***

நான் சொல்லுவன நீங்கள் கேட்பவற்றுக்கான பதிற்குறிகளாக (Responses) அமையுமே தவிர வினா - விடை என்ற வகையில் ஒன்றுக்கு ஒன்று என்ற முறையில்அமையாது. இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் தமிழுக்கே உரிய தமிழ் மொழி பற்றிய உணர்வு எனப்படுவது அதற்குரிய சிறப்பான அம்சம் என்று சொல்லிவிட முடியாது. அதற்கு ஒரு நல்ல உதாரணமாகப் பிரெஞ்சு மொழியைச் சொல்லலாம். எல்லாக் காலங்களிலும் மொழியைத் தனித்துவத்தின் குறியீடாகப் பேணுகிற ஒரு மரபு உண்டு. அந்தக் கருத்திலே தான் நான் சொல்லுகிறேன். அவ்வாறு தங்களுடைய தனித்துவத்தை, மொழியை, மொழிக் குறியீடு பற்றிப் பேணுகிற தன்மையை நிச்சயமாகத் தமிழ் நாட்டிலும் காணலாம் அதை நான் சிலாகித்துச் சொல்லவில்லை. அதனைப் பெருமை என்றும் சொல்லவில்லை. ஆனால் இந்தப் பண்பு காணப்படுகிறது என்பது உண்மை. இந்தப் பண்பு காணப்படுகிறதன் காரணமாக அது எந்தெந்தக் காலங்களில் நெருக்கடிகள் வருகின்றனவோ அந்தக் காலங்களில் தன்னை அறியாமல் இந்தப் பண்பு மேலோங்கி நின்றிருக்கின்றது. இது ஒரு முக்கியமான விசயம். எந்தெந்தக் காலங்களில் தமிழ் மொழிக்கு அல்லது தமிழைப் பேசுகின்ற வர்களின் இருப்புக்குச் சவால் வருகின்றதோ அந்தச் சவாலை மொழியுடன் இணைத்துப் பார்க்கின்ற தன்மை ஒன்று காணப்படுகின்றது. இது தமிழ் மொழி இந்திய உப கண்டத்தில் வகிக்கும் இடத்தின் அடியாக வருகின்றது. பொதுவாக இந்தியப் பண்பாடு என்று சொல்லப்படுகின்ற ஒரு பண்பாடானது வட மொழியை மூலமொழியாகக் கொண்டு இயங்குகின்ற பொழுது அது பிரதேசப் பண்பாடுகளுக்கு அவற்றின் முக்கியத்துவத்துக்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்துகின்றது.

இந்திய அமைப்பில் நீங்கள் ஒன்றை அவதானிக்கலாம். பிரதேசத்துக்குள்ள கலாசாரத்துக்கும் இந்தியா முழுவதுக்கும் உள்ள கலாசாரத்துக்கும் இடையில் ஒரு ஊடாட்டம் உண்டு. சமஸ்கிருதப் பண்பாட்டை முற்று முழுதாக உள்வாங்கி விடக்கூடாது என்ற நிலையில் இந்தப் பிரதேசப் பண்பாடு காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் மாத்திரமல்ல வங்காளத்திலும், மகாராஷ்டிரத்திலும் இப்படிக் காணப்படுகிறது. ஆனால், நான் சொல்ல வருகின்றதென்னவென்றால், தமிழில் இந்தப் பண்பு காணப்படுகின்றது. அதனை நாங்கள் அவதானிக்க வேண்டும். பதிவு செய்ய வேண்டும். ஏனென்றால் மதரீதியாக வேறுபடுகின்ற போது, இட ரீதியாக வேறுபடுகின்ற போது, மொழி ரீதியான ஒருமைப்பாட்டை முன்னிறுத்துகிற ஒரு தன்மை தமிழ் இலக்கி யத்தில் விசேடமாகக் காணப்படுகின்றது என்ற அவதானிப்பையே நான் சொல்ல வருகின்றேன். இந்த அவதானிப்பில் நான் சொல்ல விருமபுவது தமிழ் மொழிக்கு நெருக்கடியான உணர்வுகள் ஏற்படுகின்ற பொழுது மொழி ஒருமைப்பாடு வற்புறுத்தப்படுகின்றது. சமண, பௌத்த கால கட்டத்திலும், அல்லது சங்க இலக்கிய கால கட்டத்திலும், அல்லது சங்க இலக்கிய கால கட்டத்திற்குள் பிற பண்பாடுகள் உள் நுழையும் போதும், அல்லது பிறகாலத்தில் விஜய நகர கால கட்டத்தில் தெலுங்குப் பண்பாட்டின் வருகை காணப்பட்ட போதும் அல்லது இலங்கையில் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் தாக்கம் ஏற்பட்ட போதும் தமிழை ஒரு தனிக் குறியீடாகப் பயன்படுத்துகிற ஒரு தன்மை காணப்பட்டிருக்கின்றது. இதற்கு மேலே தர ரீதியாக (Qualitatively) நல்லதா, கெட்டதா என்று பார்க்கிற பொழுது தான் சில விசயங்களைச் சிந்திக்க வேண்டும். அதாவது தமிழ்ப் பிரக்ஞை திணிக்கப்படுகின்ற பொழுது தான் இந்த உணர்வே ஏற்படு கின்றது. அப்போது தமிழர்கள் என்கின்ற உணர்வு என்பதற்கு வேறு வகையான அர்த்தம் உண்டு. அப்போது நாங்கள் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பேசிய ஜேர்மனிய தேசியம் அல்ல நாங்கள் இப்பொழுது பேசுவது. அப்படி இருக்கவும் முடியாது. அப்படி இருக்குமாயின் அந்தத் தேசியம் என்ற கருதுகோளே மிக மோசமானது. தேசியம் எப்பொழுது ஆபத்தான விடயமாக மாறும் என்று சொன்னால் அது மற்றைய இனங்களு டைய பிரக்ஞையை அல்லது மக்களுடைய உணர்வுகளுக்குச் சவாலாக மாறும் போது தான். ஆனபடியால் இந்தத் தேசியம் என்ற சொல்லுக்கு எனன வரைவிலக்கணம் கொடுப்பது என்பது மிக முக்கியமானது. நாங்கள் நஷனலிசம் என்பதை வைத்துக் கொண்டு தான் தேசியம் என்று எடுக்கிறோம். நேஷன் என்ற சொல்லில் இருந்து தான் நஷனலிசம் என்ற சொல் வரும் என்று சொன்னால் நேஷன் என்ற கோட்பாடு சம்பந்தமாகத் தெளிவு வேண்டும். இன்றைக்கு உலகில் பல நேஷன்கள் இருக்கின்றன. ஐரோப்பாவில் கட்டி வளர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நேஷன் ஸ்ரேற்றின் அடிப்படையாக வந்தது அது. ஒரு பிரதேசத்தை ஒரு நேஷனாகக் கருதுகின்ற தன்மை. அது இங்கிலிஷ், ஃபிரெஞ், ஸ்பானிஷ், இது ஐரோப்பாவின் வரலாறு. இது ஆசியாவிற்கும், ஆபிரிக்காவிற்கும் பொருந்தாது என்பதனை இந்த நேஷன் ஸ்ரேற்றின் தன்மையில் காணுகின்றோம். மூன்றாவது உலக நாடுகளிலிருந்து ஏற்பட்ட பல்வேறு வகையான போராட்டங்களில் இருந்து அல்லது அவற்றினூடாக நாங்கள் கண்டு கொண்ட முக்கியமான படிப்பினை இந்த நேஷன் ஸ்ரேற் என்ற கருதுகோளை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே. நஷனலிசம் என்பது நேஷன் ஸ்ரேற் அடியாக வருகின்ற கோட்பாடு என்றால் அதை மீளச் சிந்திக்க வேண்டும் என்ற



> **"மேலிருந்து திணிக்கப்படுகின்ற அரச அதிகாரமே தமிழ் பிரக்ஞைக்கு ஓர் அரசியல் வடிவத்தைக் கொடுக்கின்றது."**
> —பேராசிரியர். சிவத்தம்பி

(தமிழ் பேசும் மக்கள் என்ற சொல் ஓரளவு சமஷ்டிக் கட்சியினால் இலங்கையில் உருவாக்கப் பட்டது என்றாலும் கூட அதற்கு ஒரு நீண்ட வரலாறு இருப்பது போல எனக்குப் படுகின்றது. ''தமிழ் கூறும் நல்லுலகம்'' என்று தொல்காப்பியம் சொல்வதற்கும் தமிழ் பேசும் மக்கள் என்று சொல்வதற்கும் இடையில் ஒரு மொழி வழித்தொடர்பு இருக்கிறது என்று தெரிந்து சொல்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் இருப்பது போலப் படுகின்றது) அந்தப் பிரக்ஞை அரசியலில், சமூகத்தில், பண்பாட்டில் தெரிய வரும். அதன் அரசியல் ரீதியான வடிவத்தைத் தமிழ்த் தேசியம் என்று சொல்கிறோம் என்று நான் கருதுகின்றேன். இதில் ஒரு பிரதானமான கேள்வி என்னவென்றால் தேசியவாதம் என்று பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரண்டாவது உலக யுத்தம் தொடங்கும் வரையில் இருந்த அந்தத் தேசிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் இந்தத் தேசியத்தை, உணர்வை, பிரக்ஞையைப் பார்க்கப் போகிறோமா? அல்லது மூன்றாவது நாடுகளின் எழுச்சியோடு இரண்டாவது உலக யுத்தத்தின் பின் ஏற்பட்ட தளை நீக்க உணர்வோடு (Liberation) கொலொனியலிசத் திற்குப் பின் வந்த (Post - colonialism) அரசியல் தனித்துவப் பிரக்ஞையைக் கருதுகிறோமா என்பதில் தெளிவு இருக்க வேண்டும். கொலோனியலிச அனுபவத்திற்கு உட்பட்ட நாடுகள் அல்லது உட்பட்ட மக்கள் தங்கள் தங்களுடைய விடுதலை அல்லது தளை நீக்கப் போராட்டங்களில் ஈடுபடும் போது நஷனலி சம் அவசியம் இருக்கிறது என விசுவாசமாக நம்புகின்றேன். ஆனபடியால் நாங்கள்

வேறொரு சொல் இல்லாதபடியால், நஷனலிசம் என்பதைத் தேசியம் என்று சொல்லுகிறோம். இங்கு நாங்கள் தமிழ்த் தேசியம் என்று சொல்கிற பொழுது அல்லது எந்த ஒரு தேசியம் என்று சொல்லுகிற போதும் (உதாரணமாக வங்காளி, மகாராஷ்டிரம் என்ற தேசியங்களை எடுத்துக் கொள்கிற போதும்) அந்த மக்கள் தங்கள் தனித்துவத்தை உணர்தல் என்ற வரையறை இருக்கின்றது. தங்கள் தனித்துவத்தைப் பேணுவதற்கான உணர்வு இருக்கின்ற வரையில் அது தேசியமாக இருக்கும். ஆனால் அந்த மக்களுடைய, மக்கள் கூட்டத்தினருடைய சுதந்திரத்திற்கோ அவர்களுடைய பிரக்ஞைகட்கோ எதிராக மாறுவார்களேயானால் அது முக்கியமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயம். அதற்கு நாங்கள் தேசியம் என்ற அடிப்படையில் வக்காலத்து வாங்க முடியாது என்று நான் கருதுகிறேன். சரி, தமிழ் பற்றிய பிரக்ஞை தமிழ்த் தேசியவாதத்துக்கு இட்டுச் செல்ல முடியாதா? என்று நீங்கள் கேட்கிற கேள்வி ஒரு ஆழமான கேள்வி ஏனென்றால் நீங்கள் தேசியம் என்று எதைக் கருதுகிறீர்கள்? சியோனிசம் மாதிரி எங்களுக்குத் தமிழ்த் தேசியம் இருக்கிறதா? அல்லது ஜேர்மனிய நெஷனலிசம் மாதிரி எங்களுக்கு தமிழ்த் தேசியம் இருக்கிறதா? அப்படியான தேசியம் இருந்தால் அது பிழை. அதேவேளை தமிழ் மக்கள் தங்களுடைய இனத்தனித்துவத்தைப் பற்றிக் கொண்டிருக்கின்ற பிரக்ஞையின் அரசியல் வெளிப்பாட்டை நாங்கள் எவ்வாறு விவரிப்பது? அதற்கு என்ன சொல்லைப்பயன் படுத்தலாம் என்ற கேள்வியும் எழுகின்றது. திருப்பிச் சொல்கின்றேன். தமிழ் மக்கள் தாங்கள் யார் என்று சொல்லப்படுகின்ற பிரக்ஞையின் அரசியல் வெளிப்பாட்டுக்கு என்ன பெயர் கொடுக்கப் போகின்றோம். அது நஷனலிசம் என்றால் தேசியம் என்று சொல்லலாம், மொழி பெயர்ப்பு என்ற படியால். அந்த நஷனலிசம் நான் நினைக்கவில்லை யாருக்கும் எதிரானதென்று. எப்போது பிரச்சினை வரும் என்றால் இன்னொரு தேசியத்துக்கு, இன்னொரு மக்கள் குரலின் பிரக்ஞைக்கு எதிராகச் செயல்படும் போது தான்.

***நீங்கள் சொல்வதன் அடிப்படையில் அல்லது வரைமுறையில் நோக்கும் போது எங்களுடைய தமிழ்த் தேசியம் என்பது அதை மீறிச் சென்று விட்டது என்று தான் தோன்றுகிறது. ஏனென்றால் இன்னொரு மக்கள் குழுமத்தின் இருப்புக்குச் சவாலாக எங்களுடைய தேசியம் தோற்றம் பெற்று விட்டிருக்கின்றது. உதாரணமாக முஸ்லிம் மக்களின் வெளியேற்றத்தைக் கூறுகின்றேன்***

நல்லது, முஸ்லிம் மக்களின் விடயம் சம்பந்தமாக நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அது பற்றிய ஒரு மீள் சிந்திப்பு நடைபெறுவது எல்லோருக்கும் தெரியும். அது துரதிருஷ்டவசமாக நடந்த சம்பவம். முஸ்லிம் மக்களின் எதிர்காலமும் தமிழ் மக்களோடு இணைந்த எதிர்காலம் தான் என்கின்ற விடயம் இப்பொழுது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

***ஆரம்பத்தில் முஸ்லிம்களை வெளியேற்றும் காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் அதிதீவிரம் கொண்டிருந்தது என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் தானே?***

அந்தச் செயலைச் சரி என்று நான் என்றும் சொன்ன தில்லை. ஆனால் நாம் இப்பொழுது பேசும் தமிழ்த் தேசியம் என்ற உணர்வு சரியான முறையில் செயற்படுகின்ற காரணத்தால் தான் இன்னும் முஸ்லிம் மக்களை எங்களிடம் இருந்து பிரிக்க முடியாமல் இருக்கின்றது என்பதையும் பார்க்க வேண்டும். அதாவது முஸ்லிம் மக்களுக்குச் செய்யப்பட்டது பிழை என்பதை எடுத்துக் கூறுகிற அளவுக்கும், அதை ஏற்றுக்கொள்கிற அளவுக்கும் தமிழ்த் தேசியம் சுயவிமர்சனம் செய்துள்ளதனை நீங்கள் பார்க்க வேண்டும். சில வேளைகளில் ஒரு காலகட்டத்தின் நடவடிக்கை பற்றி அல்லது அரசியல் நடவடிக்கை பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால் அதை ஒரு நிரந்தர கொள்கையாக்க முடியாமல் இருக்கின்றது. நிரந்தரமான நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் இருக்கின்றது. இன்று நாம் அது தவறு, துரதிருஷ்டவசமானது என்று சொல்கிறோமல்லவா, அதுவே தமிழ்த் தேசியம் என்று சொல்கின்ற உணர்வின் உண்மையான தன்மையைக் காட்டுகின்றது. அது இன்னும் தன்னு டைய அளவை மீறக் கூடியதல்ல, அளவை மீறினால் பிழை. அதை நான் ஒத்துக் கொள்கி றேன். அந்த அளவை மீறுகிற பொழுது அதற்குப் பெயர் தேசியம் அல்ல. அதற்கு ஆங்கிலத்தில் இன்னொரு பெயர் இருக்கின் றது றேசிசம் (Racism). நான் நம்பவில்லை; இன்றைய தமிழ்த் தேசியப் போராட்டங்கள் பற்றிய இந்த வாத விவாதங்களில் எவராவது தமிழ் றேசிசம் என்ற சொல்லைப் பயன் படுத்துகிறதாக இல்லை. அதை நீங்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். தற்செயலாகத் தானும் ஒரு தமிழ் றேசிசம் வரும் என்று சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால் இந்தத் தமிழ்ப் பிரக்ஞைக்கு அதனுடைய அரசியல் வடிவத்துக்கு நீங்கள் என்ன பெயர் கொடுக்கப் போகிறீர்கள்? அதற்கு வேறு சொல் கண்டு பிடித்திருந்தால் சரி. ஆனால், இந்த உணர்வு ஒன்று வந்திருக்கின்றது. அதைத் தான் நான் சொல்ல வருகிறேன். அது இல்லையென்று சொல்ல முடியாது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நாம் காணுகிற ஒரு அம்சம் என்கிற அந்தக் கருத்தைத் தான் நான் சொல்ல வருகிறேன். அது ஒவ்வொரு மொழிக்கும் இருக்கிறது. சிங்களத்துக்கும் உண்டு. பிரெஞ்சுக்கும் உண்டு. ஆங்கில மேலாதிக்கம் 16ம் நூற்றாண்டுக்குப் பின் படிப்படியாக வருகின்ற காலங்களில் எல்லாம் ஐரோப்பாவினுடைய முக்கிய பண்பாட்டுக்கு ஊறுவராத வகையில் தன்னுடைய தனித்துவத்தைப்

→19

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி....

**அவ்வாறாயின் நவீனத்துவம் எங்களுக்கு நவீனமானதல்ல என்கிறீர்களா?**

அதன் இயல்புகள், ஆசிய, ஆபிரிக்க கலைகளில் இருந்ததுதான். ஆனால் நவீனத்துவம் தான் இவற்றை உள்வாங்கித் திட்டமானவடிவம் ஒன்றைக் கொடுத்தது. எங்களிடம் ஏற்கெனவே நவீனத்துவம் இருந்தது என்று வாதிடும் உயர்ந்த தேசாபிமானிகளில் ஒருவன் நானல்ல. அந்தவாதம் உண்மையும் அல்ல. இன்றைய நவீன விஞ்ஞானத்தின் பெரும்பாலான கோட்பாடுகள் ஏற்கெனவே பல கிராமத்தவர்களாலும் விவசாயிகளாலும் பயன்படுத்தப்பட்டு வந்தவை தான். ஆனால் மேற்கத்தேய விஞ்ஞானிகள் தான் இந்த இயற்கை அவதானிப்புகளை ஒரு சூத்திரத்தினுள் கொண்டு வந்தார்கள். இதனால் இதை யாரும் அறிந்து கொள்ளவும் எதிர்பார்க்க முடியாத சூழ்நிலைகளில் பயன்படுத்தவும் ஏதுவாகிறது. இதைப் போலத்தான் மேற்கத்தேய ஓவியர்கள் இதை ஒரு வாய்ப்பாட்டினுள் போட்டு நவீனத்துவத்தைக் கட்டியமைத்தார்கள்.

நவீனத்துவம் ஓர் பெரிய பொதுமைப்படுத்தல். அதற்குள் பல கூறுகளும் எதிர்வாதங்களும் இருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இது இயல்பு காரணமாக இனமையப்பாட்டைக் (Ethno Centric) கொண்டிருக்க வில்லை. இது அடிப்படையில் கொள்கை, அழகியல் ரீதிகளில் ஆசிய, ஆபிரிக்க பெறுமானங்களை அண்டி உருவாக்கப்பட்டுளளது. இதனால் மேற்கத்தேய நாகரீகத்தில் முதற்தடவையாக சர்வதேச கலைமுறைமை ஒன்று தோன்றியது. ஏனெனில் அது சர்வதேச கூறுகளால் ஆக்கப்பட்டது. இது விக்ரோறிய மெய்ப்பண்பு வாதத்திற்கோ, கிரேக்க கலைக்கோ இல்லாத இயல்பு. ஆரம்பத்தில் நவீனத்துவம் எம்மிடம் வந்த போது அதை அன்னியமாக பார்த்த நாங்கள் திடீர் என்று அதில் எம்மைக் காண்கிறோம்.

கையாள்கை உத்தி அழகியலின் ஓர் பகுதியாக நவீன ஓவியம் கருதுகிறது. சீகிரியாவிலும் இதைத்தான் காண்கிறீர்கள். அங்கு தூரிகையின் கையாள்கை அடையாளங்கள் மறைக்கப்படவில்லை. ஆனால், மொனாலீசாவில் இது மறைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் உபயோகிக்கப்பட்ட நிறத்தின் அல்லது ஊடகத்தின் இயல்பே மொனாலிசாவில் இல்லை. ஆனால் நவீன ஓவியம் தூரிகை அடையாளம், ஊடக இயல்பு, நிறத்தின் இயல்பு, தட்டையான கன்வஸ் எல்லாவற்றிற்கும் முக்கியம் தருகிறது.

நான் இலங்கையில் அல்லது இந்தியாவில் உள்ள விமர்சனமான நவீனத்துவம், காலனித்துவத்திற்கு துணை போனது என்பதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். அது வரலாற்று பூர்வமாக உண்மையானதல்ல.

இலங்கையில் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நவீன ஓவியத்தைப்பார்த்து அது பாரம்பரியமானதோ அல்லது ஆசிய மரபு சார்ந்ததோ இல்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். நான் அவர்களிடம் திரும்ப கேட்பது என்ன வென்றால், உங்கள் வாழ்க்கையிலோ, உணவு உடையணியும் பழக்க வழக்கத்திலோ, கல்வி முறையிலோ எதிர்பார்க்காத ஒன்றை ஏன் ஓவியத்தில் மட்டும் எதிர்பார்க்கிறீர்கள்? என்பதாகும்.


நவீனத்துவம் முறை தவறிப் பிறந்தது தான் (Bastard). இது முற்றிலும் மேலைத்தேசத்திற்குரியதல்ல. எண்ணங்களின் கலப்பு என்பது பிரச்சினைக்குரிய விடயமல்ல. இதிலிருந்து விலகி ஓவியத்தை பார்க்க முடியாது. நீங்கள் சமகால முறை தவறிப்பிறந்தது என்று சொன்னால் பிறகு முழு ஆசியாவும் அப்படித்தான். முழு உலகும் அப்படித்தான். என்னைப் பொறுத்தவரையில் “முறை தவறிப் பிறந்தவனாய்” (Bastard) இருப்பது என்பது நல்ல விஷயம்.

இலங்கையின் முதற் சந்ததி நவீன ஓவியர்கள், இந்த மொழியை தன்வயப்படுத்தினார்கள் அல்லது ஆசியமயப்படுத்தினார்கள். ஆனால் அவர்கள் நவீனத்துவத்தை Body of Knowledge ஆக, ஒரு போதும் கருதியதில்லை. அவர்களுக்கு இது ஒரு அதிசய பாணி முறை (Stylistic Adventure). இவர்களின் படைப்புகள் அபூர்வமானவையல்ல. இவர்களின் காலம் முதலாம் உலகப்போருக்குப் பிந்திய இரண்டாம் உலகப்போரை அண்மிக்கின்ற காலம். கியூப்பிசத்திற்கு அப்போ முப்பது வயதுகள்.

“

மனித துன்பங்கள் வியாபாரப் பண்டமாற்றுப் பொருளாக ஆசியாவில் மாறி வருகிறது. இது ஜனநாயக சூழலில் நடைபெறத்தக்க ஒன்று. இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள், ஜனரஞ்சக கலாசாரம் ஏன்: எனது படைப்புகள் கூட மனித துன்பத்தில்தான் வாழ்கின்றன. இவை எல்லாம் எமது சமூகத்தை மாற்றத்திற்குள்ளாக்குகின்றன

”



**”அதிகாரபூர்வமற்ற முறையிலும், பக்கச்சார்பற்ற விதத்திலும் விடயத்தையும், காலத்தையும் பதிவு செய்வதுதான் கலை ”**

**–ஜெகத் வீரசிங்க**

பின் மனப்பதிவு வாதம் அதைவிடப் பழையது. தூஷாம் (M. Duchamp) பெரிய புரட்சி நடாத்தியிருந்த காலம். இவை இந்த முதற் சந்ததியினரைப் பாதிக்கவில்லை. இவர்களை பாதித்தது எல்லாம் பின்மனப்பதிவு வாதம். அதிலும் கொகேயின் (Gauguin) போன்றவர்களின் படைப்புகள் கியூப்பிசத்திலும் பகுப்பாராய்ச்சி கியூப்பிசம் (Analytical Cubism) அல்ல. பல்பொருளாக்கமான அல்லது இணைப்பாக்கமான (Synthetical) கியூப்பிசம் தான் அவர்களைப் பாதித்தன. இவை அடிப்படையில் பாணி வேறுபாடுகள், பகுப்பாய்வு சம்பந்தமானவை அல்ல. மூன்றாம் சந்ததியினரே பகுப்பாய்வு முயற்சிகளில் இறங்குகின்றனர்.

முதல் சந்ததி என்று கூறுவது ஒரு மிகப்பெரிய பொதுமைப்படுத்தல். 43 குழுவில் இருந்தவர்களால் அழகிய இலங்கை சித்திரிக்கப் பட்டது. எங்கள் நிலவுருக்கள் கோயில்கள், ஆண்கள், பெண்கள்... முதல் தடவையாக அப்போது தான் ஆண் அழகு என்ற விடயம் இலங்கைக் கலைக்குள் வருகிறது. அவர்கள் இலங்கை அனுபவத்தின் அனைத்து நிலைகளையும் சிறைப்பிடிக்க முயற்சி செய்துள்ளார்கள். அக்காலத்தில் அதற்கான தேவையும் முக்கியத்துவமும் இருந்தது.

பறங்கியராக செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த ஜோச் கீற் போன்றவர்கள் தங்கள் மதம் உட்பட அனைத்தையும் துறந்து முழு கீழைத்தேயர்களானார்கள். இது சமூகத்திலிருந்து கொண்டான காலனித்துவத்திற்கு எதிரான வெளிப்பாடு. உண்மையில் காலனித்துவ எதிர்ப்பின் மையத்தில் அவர்கள் இருந்தார்கள்.

இலங்கையில் கவலைக்கிடமான விடயம் தேசியவாதிகள் இதனை உணாந்து கொள்ளாமைதான். சிங்கள தேசியவாதிகள் 43 குழுவையும் அவர்கள் ஓவியங்களையும் மேற்கத்தேயத்தனமானவை என்று விமர்சித்தார்கள். உண்மையை உணரும் திறன் இந்த தேசியவாதிகளிடம் இல்லாதிருந்ததே உண்மை.

இறுதியில் ஆங்கில அறிவு கொண்ட பணம் படைத்தவர்கள் 43 குழுவின் தனிப்பார்வையாளர்களாக வருவது வரலாற்றில் ஒரு முரண்நகை (Irony).

**இரண்டாம் சந்ததியினரின் செயற்பாடுகள் எவ்வாறிருந்தன?**

இவர்கள் தங்களுக்கு கிடைத்ததை எவ்வித கேள்விகளுக்கும் உள்ளாக்கவில்லை. இலங்கையில் இவர்களின் பெரும்பகுதி, இதுவும் ஓவியம் இது காலனித்துவத்திற்கு துணை போகவில்லை என்று நிலை நாட்டுவதிலும், தேசியவாதிகளுக்கெதிராக சண்டை போடுவதிலுமே கழிந்தது. இரண்டாம் சந்ததியினர் தமது முதல் சந்ததியினரைப்போல ஆற்றலும், ஆளுமையும், கற்பனைத் திறனும் கொண்டு விளங்கவில்லை. இவர்கள் சோம்பேறித்தனமானவர்கள் முன்னுக்கு செய்யப்பட்டதை அப்படியே பின்பற்றினார்கள். ஆனால் தனிப்பட்ட சிலர் புறநடைகளாய் இருந்தார்கள். இதனால் 60களிலும் 70களிலும் எந்த ஓவிய இயக்கமும் இலங்கையில் இருந்ததேயில்லை. ஆனால் இந்த நிலைமை இந்தியாவில் இருக்கவில்லை. இந்தக் காலப்பகுதியில் அமெரிக்க, ஜப்பானிய அரூப ஓவியங்களும், Action ஓவியங்களும் இலங்கைக்கு வருகின்றன. அரசாங்க கொள்கைகள் காரணமாய் இலங்கை உளவியல் ரீதியில் இக்காலப்பகுதியில் தனிமைப்படுத்தப்படுகிறது. இதன் விளைவுகளை ஓவியத்திலும் சங்கீதத்திலும் அவற்றின் தரங்கள் இறங்குவதில் இருந்து அவதானிக்க முடிகிறது. நவீனத்துவத்தில் எங்கள் ஆதரவாளனான இந்தியாவின் தொடர்பை நாங்கள் இக்கால பகுதியில் இழக்கிறோம்.

எமது அபூர்வ தேசியவாதிகளின் 'மரபுக்கு திரும்பல் என்ற கூப்பாடு உண்மையில் காலனித்துவ எண்ணத்திற்கு துணை போகிற ஓர் முயற்சி. பிரித்தானியர்கள் விரும்பியதும் அதைத்தான். அவர்களும் சென்னை ஓவியக் கல்லூரியின் அந்நாளைய முதல்வரான கவல் போன்றவர்களும் நாங்கள் இன்னும் பழைய முறையில் விவசாயம் செய்து கொண்டு அஜந்தாவையும், சீகிரியாவையும் அப்படியே வரைந்து கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

சுதந்திரத்துக்கு பிந்திப் பிறந்த எங்களைப போன்றவர்கள் வாழ்வின் ஒரு கணப்பொழுதைத் தன்னும் காலனித்துவத்தின் கீழ் கழிக்கவில்லை. எனவே எமகது எமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கப்பால் இருந்து காலனித்துவத்தை நோக்கமுடியும். எனவே எமக்கு வேண்டாதவைகளை விலகக முடியும. எனவே சுதந்திரத்திற்கு பின் பிறந்த மூனறாம் சந்ததிக்கு அதற்கு முன் பிறந்தவர்களுக்குள்ளது போன்ற தனிப்பட்ட பிரச்சினைகள் ஏதுமில்லை. எனவே ஓவியத்தை ஒரு Body of Knowledge ஆக, முன்னெடுத்துச் செல்ல இவர்களால் முடிகிறது. இப்போ நாங்கள் ஆசிய நவீனத்துவத்தை உருவாக்குகிறோம். நாங்கள் எமது அனுபவங்களையும் மேற்கத்தேய அனுபவங்களையும் கேள்விக்குள்ளாக்குகிறோம். இதிலிருந்து பாடம் கற்றுக்கொள்கிறோம். சில சந்தர்ப்பங்களில் இவற்றுக்கு சவாலும் விடுகிறோம். இதனால் தான் பயனுறுநிலை இணைப்புக்கலை (Installation Art) பிரசித்தம் அடைந்து வருகிறது. இதை அவுஸ்திரேலியாவில் உள்ள ஆசிய சமூகத்தினரிடம் சீனா, ஜப்பான், இந்தியா முதலிய இடங்களிலும் நோக்கமுடிகிறது. இது ஒரு வகையில் எமது சொந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்துகின்ற முயற்சியும் கூட.

**ஆசிய நவீனத்துவம், முன்னேற்றகரமான வெளிப்பாட்டு முயற்சிகள் என பல விடயங்களை நீங்கள் பரவலாக பேசிவருகிறீர்கள். ஒரு மந்தமான இரண்டாம் சந்ததியில் இருந்து முன்னேற்றகரமான மூன்றாம் சந்ததியினருக்கிடையிலான மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது?**

நாங்கள் மிகவும் சிக்கலானதும் பல தளபபரிமாணமுளளதுமான ஒரு விடயம் பற்றிப் பேசுகிறோம். மேற்கில் இருந்து நாங்கள் ஓவியத்தை மட்டும் பெற்றுக்கொள்ளவில்லை. ஜனநாயகத்தையும், தொழிநுட்பத்தையும் கூடப்பெற்றுக்கொண்டோம். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஞ்ஞானம் எமது அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கும் என்றும், தொழிநுட்பம் எமது நாளாந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் என்றும், ஜனநாயகம் அரசியற்சிக்கல்களைத் தீர்க்கும் என்றும் நம்பினோம். ஆனால் இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றி பெறவில்லை. விஞ்ஞானமும், தொழிநுட்பமும், ஜனநாயகமும், நவீன தொடர்பாடலும் ஓர் உலக கிரமத்தை உருவாக்கும் என்றோம். தொடர்பாடலின் அடிப்படையில் இது நிகழ்ந்திருந்தாலும், கலாசாரத்தின் அடிப்படையில் இது நிகழவில்லை. உலகம் ஒரு போதும் ஒற்றைக் கலாசாரத்தில் இராது. அது சிறிய துண்டுகளாக சிதறியே இருக்கும். ஆனால இவற்றுக்கிடையிலும் சமூகத்தின் வாழ்வும் வளர்ச்சியும் ஏதோ ஒரு வழியில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே நவீனத்துவத்தின் உயரிய எண்ணங்கள் அதன் அடித்தளத்தை இழக்கத் தொடங்கியுள்ளன. இதை நாங்கள் ஆசியாவிலும் உணர்கிறோம். நாங்கள் இவை அனைத்தையும் மீள் ஆய்வு செய்கிறோம். கேள்விக்குள்ளாக்குகிறோம். மீள் கண்டுபிடிக்கிறோம். எமது பாரம்பரிய மருத்துவம் நவீன வடிவில் மீண்டும் வந்துவிட்டது. எமது ஆயுர்வேத வைத்தியர்கள் Stethoscope உடன் உலாவுகிறார்கள். இவை எல்லாம் ஆசிய வெளிப்பாடுகள். தொழிநுட்பம் ஜனநாயகப்பட்டு வருகிறது. எமது சமுதாயங்களில் வளங்கள் சமனாகப் பங்கிடப்படவில்லை. இது சாதி அட்க்குமுறைமையுடன் தொடர்புற்றிருந்தது. ஆனால் மேற்கத்தேய ஜனநாயகத்தால் இந்து மதத்தின் சில விஷயங்கள் தவிர்ந்த பிறவனைத்தும் எல்லாருக்கும் எட்டத்தக்கதாகியுள்ளது. மக்கள் விரும்புகிற எதையும் வாங்கலாம், கேட்கலாம், அறியலாம். இனி தணிக்கை சாத்தியமாகாது. எண்ணங்களின் ஓட்டத்தையும், பாய்ச்சலையும் கட்டுப்படுத்துகின்ற சக்தி அரசுகளுக்கு அற்றுப் போய் விட்டது. எமது கிராமங்களைப் பிடுங்கி நகரததினுள்ளும் தொழிற்சாலைகளினுள்ளும் போட்டுள்ளோம். எண்ணற்ற பிரச்சினைகளுடன் எங்கள் நகரங்களும் வளர்கின்றன. பெப்சி, கொக்கா கோலா விளம்பரங்கள், தனியார் தொலைக்காட்சிகள்..., இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். எண்ணங்களின் மாற்றீடு வீதம் அதிகமாய் உள்ளது. இன்னும் சில விஷயங்களில் பின்தங்கி இருக்கும் நாம் சிலவற்றில் முன்னேற்றகரமாய் உள்ளோம். சில விஷயங்களை அப்படியே பேணுகிற அதே வேளை சிலவற்றை மாற்றத்திற்குள்ளாக்கியும் வருகிறோம்.

மனித துன்பங்கள் வியாபார பண்டமாற்றுப்

—19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை சந்தை:

# தமிழர்களின் காதிலே பூ?

அதிகாரப்பரவலாக்கம் சம்பந்தமாக அரசு தெருத்தெருவாக சமாதானக் கூத்து நடத்தி வேடிக்கை காட்டி வரும் அதேவேளையில், இருக்கின்ற அதிகாரங்களைக் கூட பயன்படுத்த விடாது மக்கள் பிரதிநிதிகளின் நடவடிக்கைக்கு இனவாதச் சாயம்பூசி முட்டுக்கடை போடும் கைங்கரியத்தையும் அவ்வப்போது செய்து வருகிறது. அதில் ஒன்று தான் திருகோணமலைச் சந்தை விவகாரம்.

திருகோணமலச் சந்தை விவகாரம் அரசியலுடன் பின்னிப் பிணைந்த ஒன்று. சிவனே என்று வாழ்ந்து வந்த யாழ்ப்பாணத்து மக்களைக் கல்வியில் தரப்படுத்தல் என்ற நெம்புகோல்மிக இலகுவாக அரசியலுக்குள் உருட்டி விட்டதைப் போலவே சந்தை விவகாரமும் இங்குள்ள மக்களுக்கு அரசியல் தேவையை உணர்த்தி விடும் நெம்புகோலாக-தூண்டுகோலாக இருந்து வருகிறது.

### சந்தைக் காணி தமிழருடையது!

இதன் வரலாறு நீண்டது. இப்போது சிங்களவர்களால் சண்டித்தனமான முறையில் அபகரிக்கப்பட்டுள்ள பொதுச் சந்தை ஒரு தமிழரின் உறுதிக் காணியிலேயே அமைந்துள்ளமை யாருக்கும் தெரியாத ஒன்று.

1906ஆம் ஆண்டு, அப்போது கிழக்கு மாகாண அரசாங்க அதிபராக மட்டக்களப்பில் இருந்து கொண்டு பணிபுரிந்த வெள்ளைக்காரர் ஒருவரால் இக்காணி தமிழர் ஒருவரிடமிருந்து அரசாங்கத் தேவைக்கென சுவீகரிக்கப்பட்டு வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டன.

1934 வரைக்கும் அரசாங்க அதிபரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்த இச்சந்தை பின்னர் "லோக்கல் போர்ட்" எனப்படும் உள்ளூராட்சிச் சபைக்கு கைமாறிப் பின்னர் நகர சபைக்கு மாற்றப்பட்டது.

### கை மாறிய வர்த்தகம்!

சிங்களவர்கள் மெல்ல மெல்ல வர ஆரம்பித்தனர். திருகோணமலையின் வளம், அழகு என்பன அவர்களைக் கவர ஆரம்பிக்கவே, தங்கிவிடத் தொடங்கினர். இவர்களுக்கு தங்குமிடமாக உதவிய சந்தை இன்று சண்டித்தன தர்ப்பாராக மாறிவிட்டது

இச் சந்தையை அண்மித்த வட கரை வீதிக் கடற்பரப்பு முற்றுமுழுதாகத் தமிழர்களால் தொழில் செய்யப்பட்டு வந்த இடமாகும். கரை வலைத் தொழிலுக்குப் புகழ் பெற்ற உலர்ந்தபாடு என்ற இடத்தை அண்டி மீன் சந்தையும் அமைக்கப்பட்டது. இது மீனவர்களுக்குத் தொழில்ரீதியில் வாய்ப்பான நிலையாகும். மீன்கள் செழித்தன. வியாபாரம் செழித்தது. வியாபாரிகளும் அதிகரித்தனர். மீன் வியாபாரிகளாக தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்களும் வரத்தொடங்கினர்.

மலிவாக மீன் கிடைத்தமையால், தோளில் சுமந்தும், கைவண்டிகள் மூலமும் பதப்படுத்தப்பட்ட மீன் புகையிரத நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

இந்த வருமானம் காலப்போக்கில் முதலாளிகளைத் தோற்றுவித்தது. தனி வாகனங்கள் மூலம் மீன்கள் ஏற்றப்பட்டன. புகைவண்டி மூலம் தமிழர்கள் அனுப்பிய மீன் இடையில் களவாடப்பட்டன. சிறுநீர் கழித்து பழுதாக்கப்பட்டன. மீறி கொழும்பு சேர்ந்த மீன்களுக்கு சரியான விலை கொடுப்பது தடுக்கப்பட்டது.

சிங்கள முதலாளிகளால், தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இச் செய்கைகளினால் தமிழர்கள் மீன் அனுப்பும் தொழிலிலிருந்து வெளியேறினர். மீன்பிடியாளர்களாகவே பலர் செயல்பட சிலர் சிறு வியாபாரிகளாகவும் சிங்கள முதலாளிகளுக்கு மீன் பெற்றுக்கொடுக்கும் தரகர்களாகவும் மாறினர். காலப்போக்கில் தரகர்களும் வேண்டாதவர்களாக மீன் கொள்வனவு வியாரம் எல்லாம் சிங்கள முதலாளிகள் கைக்குச் சென்று விட்டன. சிங்களப் பகுதியிலிருந்து மரக்கறி வகைகளுடன் வந்தவர்கள் மரக்கறி முதலாளிகளாகி விட்டனர்.

### ஏற்றப்பட்ட சிங்கக் கொடி

1958 இனக்கலவரம் வெடித்தபோதுதான் முதலாளிகளின் கைவரிசை தெரிய ஆரம்பித்தது. சந்தைப்பகுதி சிங்களப் பிரதேசமாக பிரகனப்படுத்தப்பட்ட செய்கைகள் தொடங்கின. மணிக்கூட்டுக்கோபுரத்தில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டது. தேயிலை நிறுவனத் தொழிலாளியான நடராசன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் தான் திருகோணமலையில் சிங்கள வெறியர்களுக்குப் பகிரங்கமாக பலியான முதலாவது தமிழர்.

நடராசன், தியாகி நடராசன் ஆனார். மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்ட கொடி இன்று வரை எவராலும் அகற்றப்படவில்லை. சேலைக்கொடி தகரக்கொடியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

### சிங்கள அரசின் தேசியக் கடமை!

இதன் பிறகு நடந்த அத்தனை கலவரங்களிலும் இந்த முதலாளிகள் பெரும்பங்கு வகித்தனர். அவர்கள் நலன் சார்ந்ததாக இருந்தபோதும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் இதனை தேசியக் கடமையாக ஏற்று மறைமுக உதவிகளை அளித்து வளர்த்தனர்.

ஒவ்வொரு கலவரத்திலும் சந்தைப் பகுதியில் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். பல தமிழர்கள் காணாமல் போயினர். எல்லோராலும் நன்கு அறியப்பட்ட கார்த்திகேசு என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக கடமையிலிருந்த போது பட்டப்பகலில் பல பொலிஸார் முன்னிலையில் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

83 கலவரத்தையடுத்து தனிச் சந்தை நிறுவும் எண்ணம் இளைஞர்களுக்கு ஏற்பட்டது. சிவன் கோயிலடியில் சில வாரங்களாக தற்காலிக சந்தை தமிழர்களால் நடத்தப்பட்டது. பிறகு அது கனகம்மில் வளவுக்கு நகர்த்தப்பட்டது. தமிழ் வியாபாரிகள் அதிகமாக உழைக்க ஆசைப்பட்டதால் பாவனையாளர்கள் பழையபடி சிங்களச் சந்தைக்கு செல்ல ஆரம்பித்தார்கள்.

தமிழர் என்ற காரணத்துக்காக கூடிய விலை கொடுத்து பொருட்களை வாங்க மக்கள் விரும்பவில்லை. சிங்களச் சந்தைக்குப் போகிறவர்கள் மானங்கெட்டவர்கள் என்று தமிழ் வியாபாரிகளால் தூற்றப்பட்டனர் தமிழ் வியாபாரிகள் கொள்கைக் காரர்கள் என்று மக்களால் வர்ணிக்கப்பட்டனர்.

எனினும் திருகோணமலையில் கலவரங்கள் வருடா வருடம் கோயில் திருவிழா போல் நடக்கத் தொடங்கியதால் தமிழர் சந்தையும் தேவைப்பட்ட ஒன்றாக இருந்தது. இதே வேளை இந்திய இராணுவம் இருந்த நாட்களில் அகதிகள் என்ற போர்வையில் இலங்கை அரசால் உயர்ந்தபாடு நிலப்பரப்பில் சிங்கள மக்கள் தற்காலிகமாக குடியேற்றப்பட்டனர். இன்று வரை அந்த இடம் ஆக்கிரமிக்கப்பட்டே இருக்கிறது.

### ஒரே சந்தை?

90இல் ஏற்பட்ட அரசியல் நிலமையினால் தமிழர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியது. இந்த நேரம் பார்த்து தமிழர் ஒருவரது காட்டிக் கொடுப்பினால் கனகம்மில் சந்தை மூடப்பட்டதோடு தற்போது பிரச்சினைக்குரிய புதிய சந்தை அமைந்துள்ள நிலப்பரப்பில் சந்தை ஒன்று அமைக்க எடுத்த முயற்சியும் தடுக்கப்பட்டது. அப்போதைய ஆளுனரான நளின் செனவிரத்தினவின் இராணுவத்தனமான உத்தரவின் பிரகாரம் ஒரே சந்தை என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது.

அதுவரையும் நகர சபையால் பராமரிக்கப்பட்டு வந்த பொதுச் சந்தை அப்போதைய சூழ்நிலை கருதி சிங்களவர் ஒருவருக்கு இரண்டு லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவுக்கு 93இல் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் குத்தகைக்கு எடுத்தவரால் மாதம் ஒன்றுக்கு ஏழு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கக் கூடியதாக இருந்தது.

இதனால் ருசி கண்ட முதலாளி சந்தையை இழக்கத் தயாராக இல்லாத நிலையில் 94இலும் அத்தொகைக்கு குத்தகைக்கு எடுத்தார். 95இல் பழைய மரபை உடைக்க முடியாத நிலையில் டெண்டர் இல்லாமலே மூன்று லட்சத்துக்கு கொடுக்கப்பட, 96இலும் இந்த நிலையே தொடர்ந்தது.

இதன் மூலம் நகர சபைக்கு நான்கு ஆண்டுகளிலும் குத்தகையாக பதினொன்றரை லட்சம் ரூபாய் கிடைத்தது. நகர சபையோ நான்கு ஆண்டுகளிலும் சந்தை பராமரிப்புக்காக செலவிட்ட தொகை பத்தொன்பது லட்சத்து அறுபத்தையாயிரம் ரூபாய் ஆகும்.

> ஆர்ப்பாட்ட ஊர்வலம் 'ஒரு சந்தையே போதும், தமிழ் சந்தை வேண்டாம்' என்பன போன்ற கோஷங்களுடன் தயானந்த ஜயவீர தலைமையில் வியாபாரிகள் ஊர்வலம் ஒன்று புதிய சந்தையை நோக்கி வந்தது. சுலோக அட்டைகள் அத்தனையும் தனிச் சிங்களம். ஒரு சிங்கள அட்டையை தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் சென்ற தமிழ் (வியாபார)ப் பெண்மணி ஒருவரிடம் எங்கே போகிறீர்கள் என்று இளைஞன் ஒருவன் கேட்ட போது, 'தம்பி அறுவான்களோட இருக்க ஏலாது. அது தான் எடுபட்டுப் போறன் இவங்களுக்கும் பயந்து புதுச் சந்தையை திறக்காமல் விட ஏலுமே' என்ற பதில் தான் கிடைத்தது. இந்த பதில் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட சகல தமிழ் வியாபாரிகளுக்கும் பொருந்தும்.
>
> ஊர்வலம் புதிய சந்தையை அடைந்த போது பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். ஊர்வலம் வாசலிலேயே நிறுத்தப்பட்டது.

இதன் மூலம் எட்டு லட்சத்து பதினையாயிரம் ரூபாவை நகர சபை இழக்க நேரிட்டது. இந்த இழப்புடன் நான்காண்டு கால நீர் வழங்கும் செலவு வேறு சேர்ந்து கொண்டது. இந்த வகையில் தமிழ் முஸ்லிம் வரி இறுப்பாளர்களின் பல இலட்சங்கள் பேரினவாத முதலாளிகளின் வளர்ச்சிக்காக செலவிடப்பட்டுள்ளது. இந்த நான்காண்டு காலத்தில் குத்தகை முதலாளியின் வருமானம் அரை கோடி ரூபாவை தாண்டியுள்ளது.

இந்த பின்னணியில் தான் சந்தை விவகாரம் நோகக்கப்பட வேண்டும். 97இல் சந்தையை கேள்வி மூலம் குத்தகைக்கு விட நகர சபைத் தலைவர் பெ.சூரிய மூர்த்தி முடிவெடுத்தார். முறைப்படி கேள்வி கோரப்பட்டது. தனக்கு எதிராக எவரும் போட்டி போட மாட்டார்கள் என்ற அனுபவ நம்பிக்கையில் குத்தகை முதலாளி திமிருடன் பேசாமல் இருந்து விட்டார்.

### பிரிகேடியரின் உத்தரவு!

ஆனால் எட்வர்ட் கெனடி என்ற கேள்வி சமர்ப்பித்தார். வெகுண்டெழுந்த சிங்கள முதலாளி பிரிகேடியரை நாடினார். பிரிகேடியர் முடிவுத் திகதியை நீடிக்குமாறு நகர சபைத் தலைவரை நெருக்கினார். ஒரு வார காலம் திகதி நீடிக்கப்பட்டும் எட்வர்ட் கெனடியின் விண்ணப்பம் தவிர எந்தக் கேள்வியும் வராத நிலையில் ஐந்து லட்சத்து நூற்றிநாற்பது ரூபாய் ஐம்பது சதத்துக்கு கெனடியும் நகர சபை குத்தகை ஒப்பந்தம் செய்து கொண்டது.

இதனை எதிர்த்து கட்சி பேதம் கடந்து சிங்கள அரசியல்வாதிகளாலும் பிக்குமார்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு சூரிய மூர்த்தி பணியவில்லை. எனினும் 97 ஜனவரியில் சந்தை வரி வசூலிக்கச் சென்ற கெனடி திருப்பி அனுப்பப்பட்டார்.

அமைதி சிதைந்து விடக்கூடாது என்று காரணம் காட்டி பொலிசும் இராணுவமும் சட்டவிரோதச் சண்டியர்களின் அபிலாஷைகளுக்குத் துணை நின்றனர். கூட்டங்கள் பேச்சு வார்த்தைகள் ஜனாதிபதியின் பாலபட்டபந்தியின் தலையீடு எல்லாம் தமிழர் ஒருவர் சட்டப்படி கூட குத்தகை உரிமையை பெறுவதற்கு இடைஞ்சலாக நின்றன.

### வழக்கு தொடர்ந்த கெனடி

இதன் பலன் கெனடி நகர சபை மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். நகர சபையின் பராமரிப்பு இன்றி சந்தை சீர்கெட்டுப் போவதைக் கண்ட பாதுகாப்பு தரப்பினர் "உனக்குமில்லை எனக்குமில்லை" என்ற இணக்கத்துக்கு வந்து சிங்களவர்க்கு கிடைக்கவில்லை தமிழனுக்குக் கொடுக்காதே அமைதி கெட்டுவிடும் அதனால் நகர சபையே சந்தை வரியை வசூலிக்கட்டும் என்று கூறி விட்டதாலேயே கெனடி வழக்குத் தொடரவேண்டியதாயிற்று.

03.04.97 தொடக்கம் நகர சபை குத்தகை ஒப்பந்தத்தை மீறி நிர்ப்பந்தத்தின் பேரில் சந்தை வரியை நேரடியாக வசூலிக்க வேண்டியதாயிற்று. ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மூன்றாம் திகதி வரை சண்டித்தன முதலாளியால் வசூலிக்கப்பட்ட சந்தை வரி 3 லட்சத்துக்கு மேற்பட்ட தொகை சண்டியனிடமிருந்து இன்னும் பெறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் காரணங்களின் உந்துதல் என்பவை காரணமாக இன்னொரு சந்தை அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. நகர சபைத் தலைவர் பெ.சூரியமூர்த்தி முன்மொழிய உப தலைவர்கள் கா.லோகேஸ்வரன் வழிமொழிய தந்தை செல்வா வீதியில் புதிய சந்தையொன்று அமைக்கும் தீர்மானம் 97 ஜனவரியில் நிறைவேறியது. 27.02.97இல் அடிக்கல் நாட்டப்பட்டு 60 லட்சம் ரூபா செலவில் சந்தையொன்று நிர்மாணிக்கப்பட்டது.

இந்த சந்தை அமைப்பது "சிங்கள அழிப்பு" நடவடிக்கையாக சித்திரிக்கப்பட்டது. சிங்கள முதலாளிகளின் பெருந்தொகைப்பணம், இடைஞ்சல் செய்யும் பணிக்காக பல வழிகளிலும் பயன்படுத்தப்பட்டது. பிரிகேடியரின் தலையீடு ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபந்தியின் தலையீடு என பல பிரச்சினைகளை சூரியமூர்த்தி மீளவும் எதிர்நோக்கவேண்டியேற்பட்டது.

### அதிகாரப் பரவலில் அரசின் ஈடுபாடு?

கொழும்பில் அடிக்கடி கலந்துரையாடல்கள், "கட்டிடம் அமைப்பதை உடனே நிறுத்து!". "சந்தையை திறக்காதே!", என்ற உத்தரவைக் காவி வரும் வடகிழக்கு மாகாண தலைமைச் செயலர் சார்பான கடிதங்கள் என்பவையெல்லாம் அரசாங்கத்தின் விசால பலத்துக்கும் அதிகாரப் பரவலாக்கக் கொள்கையில் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கும் சான்றாக அமைந்தன.

காந்தி பிறந்த தினத்தில் இவற்றையெல்லாம் மீறி சந்தையை திறந்து விடவேண்டுமென்பது சூரியமூர்த்தியின் திட்டம். இதற்கு முன்னோடியாக 14.09.97 ஞாயிறு அன்று காலை சமயாசார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு மதிய போசன வழங்களும் இடம் பெறத் திட்டமிடப்பட்டிருந்தது.

வெகுண்டெழுந்த சிங்கள வியாபாரிகள் பொ.ஐ.மு அமைப்பாளர் தயானந்த ஜயவீர தலைமையில் ஊர்வலமாகச் சென்று நிகழ்ச்சிகளை தடைசெய்ய தீர்மானித்திருந்தனர். இந்த விடயம், நகர சபைத் தலைவருக்கு தெரியவரவே 13ம் திகதி இரவு நல்ல நேரம் பார்த்து சமய நிகழ்ச்சிகளை நிறைவேற்றிவிட்டார்.

அடுத்த நாள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் "ஒரு சந்தையே போதும், தமிழ் சந்தை வேண்டாம்" என்பன போன்ற கோஷங்களுடன் தயானந்த ஜயவீர தலைமையில் வியாபாரிகள் ஊர்வலம் ஒன்று புதிய சந்தையை நோக்கி வந்தது. சுலோக அட்டைகள் அத்தனையும் தனிச் சிங்களம். ஒரு சிங்கள அட்டையை தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் சென்ற தமிழ் (வியாபார)ப் பெண்மணி ஒருவரிடம் எங்கே போகிறீர்கள் என்று இளைஞன் ஒருவன் கேட்ட போது, "தம்பி அறுவான்களோட இருக்க ஏலாது. அது தான் எடுபட்டுப் போறன் இவங்களுக்கும் பயந்து புதுச் சந்தையை திறக்காமல் விட ஏலுமே" என்ற பதில் தான் கிடைத்தது. இந்த பதில் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட சகல தமிழ் வியாபாரிகளுக்கும் பொருந்தும்.

ஊர்வலம் புதிய சந்தையை அடைந்த போது பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். ஊர்வலம் வாசலிலேயே நிறுத்தப்பட்டது. நகர சபைத் தலைவருடன் பேச வேண்டும் என்று வியாபாரிகள் கேட்டுக்கொண்டபோது அவர்களுடன் பேசுவதற்கு எதுவுமே இல்லை என்று சூரிய மூர்த்தி பேச மறுத்துவிட்டார். சூரிய மூர்த்தியின் அழைப்பின் பேரில் சந்தை வளவுக்குள் நுழைய முயன்ற புத்த பிக்கு ஒருவர் சிங்கள கும்பலால் தடுக்கப்பட்டார்.

"ஒரே சந்தை" என்ற கோஷம் வியாபாரிகளைத் தவிர மற்றவர்களால் அங்கீகரிக்கப்படவில்லை. திருகோணமலையில் தற்போது மூன்று சந்தைகள் நகர சபையின் நிர்வாகத்தில் இயங்குகின்றன.

சண்டியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுச் சந்தை பெரிய கடைச் சந்தை அனுராதபுரச் சந்தை என்பவை நீண்ட காலமாகவே இயங்கி வருவதால் ஒரே சந்தை என்ற கோஷம் வெறும் வீதி நாடகமே. தந்தை செல்வா வீதியில் அமைக்கப்பட்ட சந்தை இயங்கத் தொடங்கினால், நான்காவது சந்தையாகவே அது அமையும்.

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெற்றிய

# நிச்

கடந்த மே மாதம் 13ஆம் திகதி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிய ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை, இக்கட்டுரையை எழுதும்போது 135 நாட்களைத் தாண்டித் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ20,000-25,000க்கும் இடைப்பட்ட படையினர். இருநூறுக்கு மேற்பட்ட தாங்கிகள், 12க்கு மேற்பட்ட உலங்கு வானூர்திகள், 3 குண்டு வீச்சு விமானங்கள் என்பனவற்றுடன் பலத்த ஆரவாரத்தோடு தொடரப்பட்ட இத்தாக்குதலை நடத்துவதில் அரசுக்கு இருந்த உடனடி நோக்கங்கள் இரண்டு.

ஆம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என்பது போல! வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கான தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் யாழ் குடாநாட்டுக்கான இராணுவ விநியோகப் பாதையைத் திறப்பது ஒரு நோக்கம். இந்தத் தரைவழித்தொடர்பின் மூலம் வன்னிப்பிரதேசத்தை ஊடறுத்து இராணுவத்தினர் நிலை கொள்வதன் மூலம் புலிகளின் இராணுவச் செயற்பாடுகளைக் குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்துவது மற்றொரு நோக்கம். இதனூடாக வடக்க-கிழக்கு தரைத் தொடர்பு துண்டிக்கப்படும். முல்லைத்தீவை முற்றுகைக்குட்படுத்தக் கூடியதாக இருக்கும். அதேவேளை வடக்கிலிருந்து கிழக்கிற்கான வழங்கலை கட்டுப்படுத்துவதனூடாக கிழக்கையும் செயலிழக்கச் செய்யலாம் என அரசு நம்பியது.

### ஒரு வாரத்தில்

ஆனால் அந்த நோக்கம் அவ்வளவு இலேசான ஒன்றாக இருக்கவில்லை. ஒரு வார யுத்தத்திலேயே இராணு வம் எதிர்பாராத இழப்புக்களை எதிர் கொள்ள வேண்டியேற்பட்டது. ஒரு லெப்டினன்ட் கேணல், இரண்டு மேஜர், மூன்று கப்டன், ஐந்து லெப்டினன்ட் உட்பட 102 படையினரை இழக்க வேண்டியதாயிற்று இராணுவத்திற்கு. ஆறு யுத்தத் தாங்கிகள் புலிகளால் தகர்க்கப்பட்டது. புலிகள் தரப்பில் 60 பேர் கொல்லப்பட்டார்கள்.

உண்மையில், இராணுவம் வன்னியில் காலடி எடுத்து வைப்பதென்பது ஓர் இலகுவான காரியமாக இருக்க மாட்டாது என்பதைப் போர்க்களத்தில் உள்ள இராணுவத் தளபதிகளும், இராணுவத்தினரும் நன்கு உணர்ந்திருந்தார்கள். இதன் காரணமாக, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகிய 3ஆம் நாளே இந்தத் தாக்குதல் நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டும் என்று அவர்கள் உறுதியாக தமது உயரதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தார்கள்.

நொச்சிமோட்டையிலிந்து முன்னேறிய இராணுவத்தினர் மாணிக்க வளவு பகுதியிலிருந்து புலிகளின் சோதனைச் `சாவடி நிலையங்களைக் கைப்பற்றி ஓமந்தையை நோக்கி முன்னேறுவதற்கு முனைந்து, புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த நேரம் அது.

புலிகளின் எறிகணைகள் ஒரு பக்கம், மோட்டார் தாக்குதல்கள் ஒருபக்கம், ஆர்.பி.ஜீ. தாக்குதல் இன்னொரு பக்கம், இதையும் விட எதிர்பாராத 'வேளைகளில் திடீரென கண்முன்னால் தோன்றி மின்னல் வேகத் தாக்குதல்களைத் தொடுத்த புலிகளின் தற்கொலைத் தாக்குதல் அணியினர் ஒருபுறம். இவ்வாறு பல்வேறு முனைகளிலும் பல்வேறு வகைகளிலும் புலிகள் இராணுவத்தினரை எதிர்த்து தாக்கிக் கொண்ருடிந்தார்கள்.

நொச்சிமோட்டையிலிருந்த இராணுவ முன்னணி காவலரண் நிலைக்கும், புலிகளின் முன்னணி நிலைக்கும் இடைப்பட்ட, மனித நடமாட்டமற்ற சூனியப்பிரதேசத்தைக் கடந்து முன்னோக்கி நகர முயன்றபோதே இப்படி ஒரு எதிர்ப்பா என்று இராணுவத்தினர் திகைப்புக்குள்ளாகினர்.

போர்முனையில் ஏற்பட்ட தயக்க நிலையை, இராணுவத்தினரின் தளர்ந்த நிலையை அறிந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த உடனடியாக போர் முனைக்கு விரைந்தார்.

எதுவிதமான காரணங்களையும் காரியங்களையும் கேட்பதற்கு அவர் தயாராக இல்லை. ஒரு சில தினங்களில் 20-21ஆம் திகதிகளில் (வெசாக் தினங்களில்) இராணுவம் மாங்குளத்தைக் கைப்பற்றி இருக்க வேண்டும் என்ற கடுமையான உத்தரவைப் பிறப்பித்தார்.

யுத்த டாங்கிகள் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். அவற்றை முன்புறமாக நகர்த்தியபடியே, மரபுவழி படையெடுப்பு நடவடிக்கையாக இராணுவத்தினர் திரண்டு நகர்ந்து செல்வதன் மூலம் புலிகளை அழிக்கவும் முடியும். அவர்களது எதிர்ப்புக்களை முறியடித்து முன்னேறிச் செல்லவும் இயலும் என அமைச்சர் நம்பினார். அதை இராணுவத் தலைமையும் திடமாக நம்பியது.

எனினும் ஓமந்தையைக் கைப்பற்றுவதற்குள்ளேயே அவர்களுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. அதுவும் அடுத்தடுத்து நடந்த, அவர்களது படையணி மீதான புலிகளின் பக்கவாட்டுத் தாக்குதல்கள் அவர்களை நிலைகுலைய வைத்தன.

### முதலாவது தாக்குதல்

அன்று, ஜுன் 10ம்திகதி. ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் 26ம்நாள். அதிகாலை 2.30மணியிருக்கும். தாண்டிக்குளம் இராணுவக் கட்டளைத் தலைமையகத்தின் முன்னணி காவலரண்கள் மீது புலிகளின் துப்பாக்கிக் குண்டுகள் சீறிப்பாய்ந்தன.

தாண்டிக்குளத்திற்கு வடமேற்கே வைக்கப்பட்டிருந்த புலிகளின் ஆட்டிலறி பீரங்கி வன்னி இராணுவ தலைமையகமாகிய வவுனியா இராணுவத் தளத்தையும் வேப்பங்குளம் இராணுவ முகாமின் சுற்றுப்புறத்தையும் இலக்கு வைத்து எறிகணைகளைப் பொழிந்தது.

தாண்டிக்குளம் இராணுவ முகாம் தொகுதியும், ஆயுத வெடிப் பொருள் களஞ்சியமும் தகர்ந்து அழிந்தன. நொச்சிமோட்டைப் பாலம் உடைந்தது. இப்பகுதியில் நிலை கொண்டிருந்த 55ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தலைமையக அதிகாரி மயிரிழையில் உயிர்தப்பினார்.

இரு தினங்களுக்கு முன்னர் இங்கு கொண்டு வந்து சேர்த்த சுமார் 2000 எறிகணைகள் அடங்கிய கொள்கலன் ஒன்று 11ஆம்திகதி இரவு வரை எரிந்து வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது. ஆயுதக் கிடங்கும் எரிபொருள் குவியலும் கொழுந்து விட்டு எரிந்து அழிந்தன.

அம்புலன்ஸ் வண்டிகள், மருந்துகள், வாகனங்கள், தளபாடங்கள், பீரங்கிகள் என கையிலகப்பட்டவற்றுள் முக்கியமானவறறைப் புலிகள் அபகரித்துச் சென்றார்கள்.

மொத்தத்தில் புலிகளின் சீற்றத்திற்கு இலக்காகிய தாண்டிக்குளம் சிதைந்து சின்னாபின்னமாகியது. இருதரப்பிலும் நூற்றுக்கணக்கானவர்கள் மடிந்தனர். பலர். காயமடைந்தார்கள். ஏறத்தாழ 200 மில்லியன் ரூபா பெறுமதியான இழப்பு அரசுக்கு ஏற்பட்டது.

தவிடுபொடியாகிய தாண்டிக்குளத்தைத் துடைத்துச் சீராக்கி தமது நிலைகளைச் செம்மைப்படுத்த



முழுமையாக இராணுவத்திற்கு ஏழு தினங்கள் எடுத்தன.

### இரண்டாவது பாய்ச்சல்

தாண்டிக்குளம் மீதான தாக்குதலின் அதிர்வுகள் தணிந்து கொண்டு சென்றபோது சரியாக 14ஆவது நாளான ஜுன் 24ம்திகதி இரவு 10.30மணிக்கு பெரியமடுவில் இருந்து இராணுவ முன்னணி கட்டளைத் தலைமையகத்தின் மீது இன்னொரு தடவை புலிகள் பாய்ந்தனர்.

இராணுவத்தின் முக்கியமான பீரங்கி நிலைகளும் ஆயுதக் களஞ்சியமும் மீண்டும் தாக்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். பெருமளவானோர் காயமடைந்தார்கள். இத்தாக்குதலில் 90க்கும் மேற்பட்ட புலிகள் பலியானார்கள்.

'வெற்றி நிச்சயம்' என்று அர்த்தம் தரும் ஜயசிக்குறு நடவடிக்கை தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமல் இரண்டாவது தடவையாக அதிர்ந்து நடுங்கியது.

இதற்கிடையில் இதே நடவடிக்கையின் இன்னுமோர் அம்சமாக மணலாறு பகுதியில் இருந்து முன்னேறி நெடுங்கேணியைக் கைப்பற்றி, தொடர்ந்து புளியங்குளத்தை நோக்கி நகர்ந்த இராணுவத்தின் 53ஆவது படைப்பிரிவு புலிகளின் உளவுப்படையணியின் இருவேறு தாக்குதல்களுக்கு ஆளாகியது. இதில் 40க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். புலிகளின் தரப்பில் 80க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக இராணுவம் அறிவித்தது.

இருவேறு அதிரடித் தாக்குதல்களின் மூலம் இராணுவத்தின் 55ஆம் படைப்பிரிவு மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது. தென் திசையிலிருந்து தனியொரு படைப்பிரிவாக முன்னேறிச் சென்று புளியங்குளத்தைக் கைப்பற்றுவது என்பது கஷ்டமான காரியமாக மாறியது.


பெரியமடு, பனிக்கநீராவி பகுதிகளில் இராணுவம் அசைவற்றிருக்க நெடுங்கேணியில் நிலைகொண்டிருந்த 53ஆம் படைப்பிரிவு கெரில்லா போர்ப்பாணியில் முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

நெடுங்கேணி அனந்தர் புளியங்குளம், சின்னப்பூவரசங்குளம், மருதோடை, சேமமடு, நைனாமடு, மதியாமடு என்று கிராமங்களை இலக்கு வைத்து படிப்படியாக முன்னேறி பழையவாடியைச் சென்றடைந்து பனிக்க நீராவியிலிருந்து வந்த 55ஆம் படைப்பிரிவுடன் தொடர்பையேற்படுத்தி நிலை கொண்டது. இது ஓகஸ்ட் மாதம் 8ம்திகதி நிகழ்ந்தது.

இதற்கிடையில் புலிகளின் தொடர்ச்சியான இருவேறு அதிரடிகளால் பாதிக்கப்பட்ட 55ஆம் இராணுவப்படைப்பிரிவுக்கு உதவியாக 6கிலோ மீற்றர் தூரம் கொண்ட முன்னணி காவலரண்களுக்குப் பொலிசாரும், சுமார் 2மைல் தூரப்பகுதிக்கு கடற்படையினரும், கிழக்குத் திசையின் காவலரண்களுக்கு விமானப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

வன்னியை ஊடறுத்து கிளிநொச்சியைத் தொடுவதற்கு இலங்கை அரச இராணுவத்துடன், பொலிசார், கடற்படை, மற்றும் வான் படையினர் என தனது முழு இராணுவ பலத்தையும் அரசு பயன்படுத்த வேண்டிய நிலைமைக்கு ஆளாகியது.

''செய் அல்லது செத்து மடி'' என்ற பெயருடன், தேர்வு செய்யப்பட்ட (தாண்டிக்குளம் மற்றும் பெரியமடு) இலக்குகள் மீது புலிகள் நடத்திய பேரதிரடித் தாக்குதல்களே இதற்குக் காரணமாயின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ா அழிவா

# ச்சயம் ?

தம்பு திருநாவுக்கரசு —



### மூன்றாவது அதிரடி

ஒகஸ்ட் முதலாம் திகதி இரவு 10.30மணிக்கு ஓமந்தைக்கு மேற்கே இருந்த முன்னணி காவலரண்களை சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்திற்கு தகர்த்துக் கொண்டு ஊடுருவிய புலிகள் ஓமந்தைப் பகுதியிலிருந்த பொலிசாரின் நிலைகளைத் தகர்த்து தரைமட்டமாக்கினர். பல காவல் நிலைகள் எரிந்து சாம்பலாகின.

ஓமந்தையிலிருந்த இராணுவ கட்டளைத் தலைமையகமும் சேதமடைந்தது. பல பொலிசாரும் பல இராணுவத்தினரும் கொல்லப் பட்டார்கள். பெருமளவானோர் காயமடைந்தார்கள்.

புலிகளின் வானொலியை இடைமறித்துக் கேட்டும், பிறவிதங்களிலும் இலங்கை அரசு தான் திரட்டிக்கொண்டதாகக் கூறும் தகவல்களின்படியும், புலிகள் யுத்தத்தில்பயந்து ஓடிக்கொண்டிருந்தார்கள்; அவர்களது ஆயுதங்கள், ஆட்பலம், உணவுக் களஞ்சியம் எல்லாவற்றையும் இழந்து கொண்டிருந்தார்கள்; காயப்பட்ட பெருந்தொகையானோர்க்கு வைத்திய வசதி செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

கொழும்பு, தேசிய வைத்திய சாலை, ஜயவர்த்தனபுர வைத்திய சாலை, அனுராதபுர வைத்திய சாலை என அரச வைத்திய சாலைகள் அனைத்திலும் காயப் பட்டோர் தொகை சமாளிக்க முடியாதளவுக்கு அதிகரித்துவிட்ட போதும் அரசு தரப்பு செய்திகள் இப்படித்தான் கூறிக்கொண்டிருந்தன.

ஆயினும் ஜயசிக்குறு நடவடிக்கையோ வெறும் அங்குலங்களாலேயே முன்னேறிக் கொண்டிருக்கிறது.

உண்மையில், புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளிலேயே ஜயசிக்குறு நடவடிக்கையே மிகவும் பாரியதாகும். நீண்ட நாட்களாகத் தொடர்ந்து கொண்டிருப்பதும் இதுவே.

இதேபோல புலிகளின் மிகமோசமான எதிர்த்தாக்குதல்களுக்கும், அதிரடித் தாக்குதல்களுக்கும் முகம் கொடுத்த நடவடிக்கையும் இதுதான்!

1987ஆம் ஆண்டு வடமராட்சி மீது மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் லிபரேஷன் மீது நெல்லியடி மகா வித்தியாலயக் கட்டிடத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது புலிகளின் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் வெடிப் பொருள் நிரம்பிய வாகனத்துடன் சென்று மோதித் தாக்கியதில் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒப்பரேஷன் லிபரேஷன் அத்துடன் பிசுபிசுத்தது.

ஆயினும் இம்முறை அவ்வாறு தம் நடவடிக்கையை பிசுபிசுக்கவிட அரசு தயாராக இல்லை. மூன்று பாரிய அதிரடித் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துள்ள போதும் ஜயசிக்குறு நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ளவே அரசாங்கம் துணிந்துள்ளது.

பலத்த இழப்புகளுக்கும் நலிவுகளுக்கும் ஆளாகிய 55ஆம் இராணுவ படைப்பிரிவு மீண்டும் பழைய வாடியிலிருந்து புளியங்குளத்தை நோக்கி ஒகஸ்ட் 26ம் திகதி முன்னேற முயற்சித்தது.

மரபுவழிப் படையெடுப்பு பாணியில் நகர்ந்த இராணுவத்தினர் கெரில்லா பாணியிலும், நேருக்கு நேர் மோதியும், தூரத்திலிருந்து ஆர்.பி.ஜி. மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்தியும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டார்கள்.

இதனால் அரை கிலோமீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு 3 தினங்களைச் செலவிட வேண்டிய நிலைமை இராணுவத்திற்கு ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் குண்டுகளை வீசி புலிகளின் நிலைகளெனக் கூறி அப்பாவிப் பொது மக்களைத் தாக்குகின்ற கிபிர் குண்டு வீச்சு விமானத்தை அழித்து ஒழிக்க ஸ்ரிஞ்சர் ஏவுகணையையும் புலிகள் பயன்படுத்தியதாக அரச தொடர்புசாதன தகவல்கள் தெரிவித்தன.

புலிகளின் மூன்று பெரும் அதிரடித்தாக்குதல்களில் மாத்திரம் 560 படையினர் கொல்லப்பட்டதாகவும், 2400க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த வகையில் நடந்து முடிந்த 135நாள் சண்டையில் குறைந்தது 800 இராணுவத்தினர் பலியாகி இருக்க வேண்டும் எனவும் 3500 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கலாம் எனவும் அவதானிகள் கருதுகின்றனர். இந்த யுத்தத்துக்காக ஒரு நாளைக்கு 2.4 மில்லியன் ரூபாய்களை அரசு செலவிடுகிறது. கட்டளையிடும் டாங்கி உட்பட பத்து டாங்கிகள் அழிக்கப்பட்டுள்ளன. முல்லைத் தீவில் கைப்பற்றப்பட்ட 15 மோட்டார் லோஞ்சர்கள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட லோஞ்சர்களை வெவ்வேறு திக்குகளில் வைத்து ஒரு நாளைக்குச் சராசரியாக 3000-3500 மோட்டார் குண்டுகளை புலிகள் ஏவுகிறார்கள்.

புலிகள் தரப்பிலும் இதே அளவு உயிரிழப்பு நேர்ந்திருக்க வேண்டும் எனவும் நம்பப்படுகின்றது. மொத்தத்தில் நிச்சயமான வெற்றி யாருக்கு என்பதை விட பேரழிவுகளை நோக்கியே வன்னி யுத்தம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த யுத்த நடவடிக்கைக்கு வெற்றி நிச்சயம் என்று பெயர் சூட்டியவர்கள் வெற்றி என்று எதைக் கருதினார்களோ தெரியவில்லை. ஆனால், அழிவு நிச்சயம் என்று மட்டும் அடித்துச் சொல்ல முடியும். அந்தப் பாதையில் அது வலு வேகமாக முன்னேறிவருகிறது. இது வரை நடந்த யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புகள் உறுதிசெய்யப்படுகின்றன.

வன்னியில் உள்ள பொதுமக்கள் முகத்தையும், முகவரியையும், இழந்தவர்களாக, அகதிமுகாம்கள் அகப்படுமா எனத்தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

வன்னியின் இயல்பு வாழ்க்கை அழிந்து விட்டது. பொருளாதார கட்டமைப்புகளும் சமுதாய கட்டுக்கோப்புகளும் குலைந்து விட்டன. போஷாக்கின்மையும், பட்டினி நிலைமையும் வன்னி மக்களைத் துரத்திக்கொண்டிருக்கின்றது. அரசாங்கமோ வெறும் காகிதப்புள்ளி விபரங்களின் நம்பகத்தன்மை குறித்து தீராத சந்தேகத்தைத் தெரிவித்து மனிதாபிமான நிவாரண உதவிகளை வெளிப்படையாக மறுத்து வருகின்றது.

ஏன் என்று கேட்பார் எவருமில்லை. தட்டிக்கேட்டு இடித்துரைத்து அரசாங்கத்தை நியாயபூர்வமாகச் செயற்படச் செய்வதற்கான தகுதிவாய்ந்த அரசியல் தலைமைகளும் இல்லை.

இந்த நிலைமையில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கும், இப்போதைக்கு முடிவு ஏற்படும் என்பதற்குரிய சமிக்ஞைகளையும் காண முடியவில்லை.

ஆழமறியாமல் காலை விட்டுள்ளது அரசு.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் அரசாங்கம் இவ்வளவு தீவிரமாக இருப்பதற்கு முக்கியமான காரணம் இதன் மூலம் புலிகளின் இடுப்பை முற்றாக ஒடித்து விட முடியும் என நம்புவதாலாகும். புலிகளை எழும்ப முடியாமல் ஒடுக்கி விட்டால், அதன்பிறகு தமது அரசியல் தீர்வு பற்றி தமிழ்தரப்பு எதைச் சொன்னாலும் பரவாயில்லை. அதை நடைமுறைப் படுத்தி விடலாம் என்பது. தவிரவும் புலிகளை அப்படி நசுக்குவது அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியான ஒரு வெற்றியும் ஆகும். ஆட்சிக்கு வந்து மூன்றாண்டுகள் முடிந்துவிட்டன. இன்னும் உள்ளது ஓராண்டு தான். அடுத்த ஆண்டு தேர்தல் தயாரிப்புக்காக இறங்க வேண்டும். ஆக, இந்த ஓராண்டில் ஏதாவது சாதித்தால் தான் அரசாங்கத்தால் தேர்தலை எதிர்கொள்ள முடியும். புலிகளை ஒடுக்குவதில் வெற்றிபெற்றால் அது எத்தனை தூரம் இழப்புக்களைக் கொண்டதாக இருப்பினும், தேர்தலை எதிர்கொள்ள ஒரு நல்ல மூலதனமாக இருக்கும்.

தொடங்கிய யுத்தத்தை இடையில் நிறுத்துவது என்பது வெறும் இராணுவத் தோல்வி மட்டுமல்ல மாபெரும் அரசியல் தோல்வியும் ஆகும் என்பது அரசாங்கத்தின் கணிப்பு.

ஆனால், அரசாங்கம் விளங்கிக் கொள்ளாத முக்கியமான விடயம் ஒன்று இருக்கிறது.

அதுதான் இன்று வரை சாதித்ததெல்லாம் அற்ப விடயங்களே என்று கூறுமளவிற்கு பெரிய சாதனைகளை அது இனித்தான் சாதிக்க வேண்டியிருக்கின்றது என்பதுதான்.

புளியங்குளத்திலிருந்து மாங்குளம் நோக்கிய பயணம் இதுவரை கடந்த பிரதேசத்தைவிட கடினமானதும் பெரும் சண்டைகளை எதிர் நோக்க வேண்டியதும் என்பது வெளிப்படை.

ஆனால், அதைப்பற்றி யோசிக்கும் நிலையில் இப்போது அரசாங்கம் இல்லை. இரண்டு வாரங்களுக்கு முன்னரும் திரும்பவும் யுத்த முனைக்கு விஜயம் செய்த அனுருத்த யுத்தத்தில் ஊக்கமாக ஈடுபடுவதற்கு இராணுவத்திற்கு உற்சாகமூட்டிவிட்டு வந்துள்ளார். அவரைப் பொறுத்தவரை புலிகளை வெல்ல நீண்ட நாட்கள் தேவையில்லை. பட்ஜட்டுக்கு முதல் முடித்து விடலாம் என்பதே.

புலிகள் பலவீனமாகி விட்டார்கள் என்ற தகவலையே கேட்பதில் சந்தோஷப்படுகிறது இந்த அரச மேல் மட்டம் என்பதால் அதை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கின்றன தகவல் தெரிவிக்கும் அணிகள்.

தவறான அல்லது பொய்யான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்தில் இறங்கியுள்ளது அது. இனி பின்னுக்கு வருவது என்பது அரசின் இன்றைய உணர்ச்சிக்கு சாத்தியமற்ற ஒன்று என்பதால், இந்த யுத்தத்தை 'அழிவு நிச்சயம்' என்று பெயரிட்டு விட்டு நடாத்துவதே பொருத்தமானது!

நாட்டிலே அமைதி வேண்டும், சமாதானம் வேண்டும் என்று உண்மையாகவே நினைப்பவர்களாக இருந்தால், இந்த யுத்தத்தில் நாள்தோறும் இறந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அந்த அமைதியையும், சமாதானத்தையும் அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினால், அதைச் செய்ய இன்னமும் காலதாமதமாகிவிடவில்லை.

புலிகள் பலவீனமாகி விட்டார்கள் என்ற தகவலையே கேட்பதில் சந்தோஷப்படுகிறது இந்த அரச மேல் மட்டம் என்பதால் அதை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கின்றன தகவல் தெரிவிக்கும் அணிகள்.

தவறான அல்லது பொய்யான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்தில் இறங்கியுள்ளது அது. இனி பின்னுக்கு வருவது என்பது அரசின் இன்றைய உணர்ச்சிக்கு சாத்தியமற்ற ஒன்று என்பதால், இந்த யுத்தத்தை 'அழிவ நிச்சயம்' என்று பெயரிட்டு விட்டு நடாத்துவதே பொருத்தமானது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... -39



# ஆண்மை, பெண்மை என்பவற்றுக்கான கல்வி!

டொக்டர் ஜெயிம் ஜி ஜினொல்ட்
தமிழில் : அருண்

### பெண்பிள்ளைகட்கும் ஆண்பிள்ளைகட்குமான நியமங்கள்.

பெண்பிள்ளைகளும் சரி, ஆண்பிள்ளைகளும் சரி, இருபாலார்க்குமே தத்தமக்கேயுரிய உயிரியல் விதிக்கமைய முன்னேறிச் செல்வதற்கு உதவிதேவைப்படுகிறது. பெற்றோர்கள் இருபாலாரிடமும் ஒரே மாதிரியான நடத்தை நியமங்களை எதிர்பார்க்கக்கூடாது. ஆண்பிள்ளைகள் அதிகமாக ஓடித்திரிவதற்கு அனுமதிக்கப்படவேண்டும். அவர்களிடம் காணப்படும் அதிகளவு சக்தியும், சமுதாயம் அவர்கள் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுமே இதற்கு காரணமாகும்.

(ஆண்களை விட பெண்கள் உடற்பலம் குன்றியவர்கள் என்ற இக்கருத்தை விஞ்ஞான பூர்வமற்றது என்று பெண்ணியலாளர்கள் கூறுகின்றனர் . இவ்விடத்திலும், இதன்பின்னால் வருபவற்றிலும் நூலாசிரியர் இக்கருத்தை ஏற்றுக்கொண்டே எழுதியுள்ளார். நூலாசிரியரிடம் பெண்ணிலைவாத கருத்துக்களின் தாக்கம் எதுவும் இருந்துள்ளதாக தெரியவில்லை- மொழிபெயர்ப்பாளர்)

தாய்மார்களும் சரி, ஆசிரியர்களும் சரி, ஆண்பிள்ளைகளிடம் பெண்மைத்தன்மை வளர்க்கப்படுவதை ஊக்குவிக்கக்கூடாது. ஆண்பிள்ளைகளுக்கு பெண்பிள்ளைகளின் பெயர்களை இடுவதோ, உடைகளை அணிவதோ, பெண்பிள்ளைகளைப் போல தலைமுடிவளர்ப்பதோ கூடாது. அவர்கள் பெண்பிள்ளைகளைப் போல நேர்த்தியாக இருக்க வேண்டும் என்றோ, ஒரு சீமாட்டி போன்ற இயல்புடையவர்களாக இருக்கவேண்டும் என்றோ எதிர்பார்க்கப்படக்கூடாது.

தங்களுக்கு ஒரு பெண் குழந்தை இல்லையென்பதற்காக தமது மகனை பெற்றோர் பெண்குழந்தையாக வளர்க்க முயலக்கூடாது. அழகான கூந்தலுள்ள ஒரு பையன், உறவினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடும். ஆனால் அவன், அவனது விளையாட்டுத் தோழர்கள் மத்தியில் (அப்படி யாராவது இருந்தால்) 'பெட்டை' யாகவே கருதப்படுவான். இது அவனது சிறுபராய பிம்பத்தைப் பாதிக்கச் செய்யும். அத்துடன் அவனது குழுவுக்குள் அவனது அந்தஸ்தையும் குறைக்கும்.

பெண்பிள்கைகளும், தமக்கு ஆண் குழந்தை இல்லையென்ற பெற்றோரின் ஆதங்கத்திற்கு மருந்தாகி விடக்கூடாது. ஒரு ஆண்குழந்தை பெண்குழந்தையாக வளர்க்கப்படும்போது அது எதிர்கொள்ளும் கிண்டல்களை விட ஒரு பெண் குழந்தை ஆண்குழந்தையாக வளர்க்கப்படுகையில் எதிர்கொள்வது குறைவாகவே இருக்குமாயினும், அக்குழந்தை பெண்மையியல்புகளுடன் வளர அனுமதிக்கப்படவேண்டும். பெண்ணாக இருப்பதிலும், பெண்மையை கொண்டிருப்பதிலும் பெருமையும் பெருமிதமும் அடையும் விதத்தில் அது வளர்க்கப்படவேண்டும் பெண்பிள்ளைகள் தாம் பெண்பிள்ளைகளாக இருப்பதுவே தமக்கு சிறப்பு, பெருமை என்று கருத வேண்டும். தான் பெண்ணாக இருப்பதை விரும்பும் தாய் இதனைப் பிள்ளைகட்கு ஊட்டவேண்டும். பெற்றோர்கள் இருவரும், தமது பிள்ளைகளின் ஆண் தன்மை, பெண் தன்மை இரண்டும் பண்படுத்தும் தேவைகுறித்து தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

தனது மகளது தோற்றம், உடை, அவளது பெண்ணியல்புகள் என்பன குறித்து தகப்பனார் விதந்துரைப்பது பொருத்தமாக இருக்கும். தகப்பன் அவளை கடினமான விளையாட்டுக்களில், தலையணையில் குத்திவிளையாடும் குத்துச்சண்டை போன்றவற்றுக்கு ஊக்குவிக்கக்கூடாது. இது. தான் ஒரு பையனாகப்பிறந்திருந்தால் தனது தகப்பனுக்கு அதிகளவுக்கு தன்னில் ஆசை இருந்திருக்கும் என்று அந்தப்பிள்ளையை நினைக்க வைக்கிறது.

குடும்ப வாழ்க்கை, ஆண்களுக்கும், பெண்களுக்கும் உரிய வெவ்வேறு பாத்திரங்கள் குறித்தும், அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரை பராமரிப்பது குறித்தும் உரிய அடிப்படை உண்மைகளை புரிந்து கொள்ள நிறையவே வாய்ப்பைத் தருகிறது.

### ஆண்மை, பெண்மை என்பவற்றுக்கான கல்வி.

ஆண்மை, பெண்மை என்பவற்றுக்கான கல்வி, வாழ்வின் மிக தொடக்க கட்டத்திலேயே ஆரம்பிக்கிறது. ஆயினும் குழந்தைகள் மிகத்தொடக்க கட்டத்திலேயே பால்ரீதியான பாத்திரங்கள் குறித்து வலியுறுத்தப்படக்கூடாது. ஆரம்பப் பாடசாலை வயதில் குழந்தைகள் பெரும்பாலும் பொம்மைகளுடன் - அது பெண்குழந்தைகளாயினும் சரி, ஆண்குழந்தைகளாயினும் சரி, தாயைப்போல தம்மை பாவனை செய்து விளையாடுவதை விரும்புகிறார்கள். இந்த வயது ஆண்குழந்தைகளை ஆண்களுக்குரிய குத்துச் சண்டை விளையாட்டுக்கு இழுத்துவிடும் வேலையில் தகப்பன் மார் இறங்கக்கூடாது. இந்த வயதுக் குழந்தைகள் அனுமதி கிடைக்காது என்ற அச்சமின்றி ஆண் அல்லது பெண் விளையாட்டுகளில் ஈடுபடக்கூடியதாக இருக்க வேண்டும்.

பாடசாலைப் பருவத்தில் பால் வேறுபாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் வெவ்வேறு விருப்பங்களும், ஆர்வங்களும் கொண்டவர்களாக வளர்வது எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்கள், ஆண்களுக்குரிய நடவடிக்கைகளில் பெருமிதத்தையும், பெண்கள் பெண்களுக்குரிய செயல்களில் பெருமிதத்தையும் பெற வேண்டும். கலாசார ரீதியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் ஆண், பெண் தன்மைக்குரியவையென வேறுபடுத்தப்பட்ட விருப்புகள், நடவடிக்கைகள் என்பவற்றினால் பால் வேறுபாடுகள் பலமூட்டப்படுகின்றன.

பாடசாலைக் காலம் தான் தகப்பனாருடன் மகனும், தாயாருடன் மகளும் கொண்டுள்ள உறவு வலுப்பெறுவதற்கான ஒரு நல்ல காலமாகும். இந்தக்காலகட்டம் தான் பெண்பிள்ளைகட்கு சமையல், வீட்டை அழகுபடுத்தல் ஆகிய கலைகளை. வழங்கக்கூடிய காலகட்டமாகும். பெண் பிள்ளைகள், சமைக்க, வெதுப்ப (BAKING) எளிய சாப்பாடுகளை தயார் செய்ய, தைக்க, பிள்ளை வீட்டைக் கவனித்துக்கொள்ள பழக முடியும். குப்பையாகவும், ஒழுங்கற்றவிதத்திலும் வேலை செய்வதற்கு அவர்களுக்கு நிறைய இடம் தரப்படலாம். எமது வலியுறுத்தலெல்லாம் வீட்டை ஒழுங்குபடுத்தும் செயல் பற்றிய சந்தோசம் பற்றி அமைய வேண்டுமே ஒழிய அது நேர்த்தியாக செய்யப்படுகிறதா என்பது பற்றியதாக அமையக் கூடாது. ஒரு பெண்ணாக, மனைவியாக, தாயாக இருப்பதில் உள்ள தனது திருப்தியை ஒரு தாய் வெளிப்படுத்துவதற்கான உரிய காலம் இதுவேயாகும்.

தகப்பனாரும், தன்னைப்போல செயற்பட, பேச, நடக்க தனது மகனுக்குள்ள ஆர்வத்தை வரவேற்க வேண்டும்.

இத்தகைய போலச் செய்தல்களை அவமதிக்கக்கூடாது. அவை ஊக்குவிக்கப்படவேண்டும். மொழியையும் இயல்பையும் போலச் செய்தல், ஆர்வத்தையும் பெறுமானங்களையும் பின்பற்றுவதற்கு இட்டுச் செல்கிறது. நெருக்கமாக உள்ள வேளைகளில், ஒரு குடும்பத்திலும், சமூகத்திலும் ஒரு ஆணாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை தகப்பனார் மகனுக்கு புரிய வைக்கலாம். தகப்பனாரது திறமை முயற்சி, அர்ப்பணிப்பு என்பவற்றை தமது வீட்டுக்கு வெளியே காணும் போது மிகவும் பெருமையுடன் அதை அவர்கள் அவதானிக்கிறார்கள். தகப்பனாரது வேலை ஸ்தலத்திலும் அவரது சமூக, அரசியல் நடவடிக்கைகளின் போதும் கூட இருப்பது அவர்களுக்கு ஒரு ஆண் தனது வேலையின் போதும் தனது சமூகத்திலும் என்ன செய்கிறான் என்பதை ஆர்வத்துடனும் பெருமையுடனும் அறிய வைக்கிறது.

வரும்..

# விளையாட்டு அமைச்சர்

விளையாட்டுத்துறை அமைச்சர் திசாநாயக்கா அவர்களின் விளையாட்டுக்கள் பற்றி இப்போதெல்லாம் பல கதைகள் அடிபடத்தொடங்கியுள்ளன. ஜனாதிபதியுடன் நெருங்கிய தொடர்பு அவருக்கு இருப்பதால் அவர் ஒரு சக்தி மிக்க அமைச்சராகவும் கருதப்படுகிறார்.

அவர் யாராவது ஒருவருக்கு உதவவேண்டும் என்று நினைத்துவிட்டாரென்றால், எப்பாடுபட்டாவது அதைச் செய்து விடுவார் என்று சொல்லப்படுகிறது.

அண்மையில் ஏதென்ஸ் நகரில் வெள்ளிப்பதக்கம் பெற்று மீண்ட வீராங்கனை சுசந்திக்காவுக்கு நாடளாவிய பிரச்சாரமும் வீட்டு வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும் என்று அமைச்சருக்குத் தோன்றிவிட்டது. இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் சுசந்திக்கா என்ற தகவல் வெளிவந்தபோதும் அதை ஒருவாறு சரிக்கட்டி அவருக்கு தான் விரும்பியபடி வசதிகளைச் செய்து கொடுத்தார். சுசந்திக்காவுக்கு வீடு கொடுப்பதற்காக, அமைச்சுக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருந்த கொரிய நாட்டவர்களை கிட்டத்தட்ட பலவந்தமாக வெளியேற்றிவிட்டு அதை சுசந்திக்காவுக்கு அவர் வழங்கினார். அவர் எடுத்த காரியத்தை முடிப்பதில் எவ்வளவு உறுதியானவர் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இன்னுமொரு உதாரணம் இருக்கிறது.

அமைச்சரது உறவினரான ஒரு டொக்டர் (இவரும் ஒரு பெண்!) அவரது பயிற்சி முடிந்ததும் முதன் முதலாக மன்னார் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டது தொடர்பானது இந்த உதாரணம்.

அமைச்சரின் உறவினர் ஒருவர் மன்னாருக்கு போவதா? இது அமைச்சருக்கு அவமானம் இல்லையா? அவர் உடனே சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவுடன் தொடர்பு கொண்டு இந்த உத்தரவை நிறுத்தச் சொல்லிக்கேட்டார். ஏற்கெனவே அரசாங்க மருத்துவர் சங்கத்திடம் பௌசி வாங்கிக்கட்டியதை நன்றாக அறிந்த அமைச்சர் நிமால் சிறிபால கையை விரித்துவிட்டார். சட்டப்படி வைத்தியர் ஒருவர் அவருக்கு முதல் முதல் பதவி வழங்கப்படும் இடத்திற்கு மறுக்காமல் போய் பதவியை ஏற்றுக்கொள்வதும், குறைந்த பட்சம் ஒரு வருடமாவது வேலை செய்வதும் அவசியம். அதன் பிறகே அவர் வேறு இடத்திற்கு மாற்றல் கோரலாம். அப்படிப் போக மறுப்பவர்களை வேலையிலிருந்து நீக்குவதுதான் சுகாதார அமைச்சின் வழமை. எனவே சுகாதார அமைச்சர் கைவிரித்தது நியாயம்தான். ஆனால்.. விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பொறுக்க முடியவில்லை. ஒரு அமைச்சராக தான் இருந்தும் இப்படி தனது உறவினருக்கு உதவி செய்யாவிட்டால் அப்பதவிக்கு என்ன பெறுமதி பிறகு?

உடனே அவர் தனது அமைச்சில் ஒரு வைத்தியர் தேவையென்று ஒரு புதிய பதவியொன்றை உருவாக்கினார். அதற்குப் பெண் வைத்தியர்களை விண்ணப்பிக்குமாறு கோரினார். பேருக்கு ஒரு சிலர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் பட்டார்கள். அமைச்சர் தனது உறவினரை பதவியில் அமர்த்திக்கொண்டார்.

அமைச்சர் கில்லாடிதான் போங்கள்!

ஆனால் அரச மருத்துவர்கள்-சங்கம் விடுவதாகத் தெரியவில்லை. இந்தப்பதவி வழங்கல் சட்டத்திற்கு முரணானது என்று கூறுகிறார்கள் அவர்கள். போடப்பட்ட விண்ணப்பங்களில் இந்த வைத்தியரைவிட தகுதியானவர்கள் இருந்தார்கள் என்பது ஒரு புறமிருக்க, இந்த பிரஸ்தாப வைத்தியர் தனது முதலாவது பதவி வழங்கப்பட்ட இடத்தில் ஆறு மாதம் கூட வேலை செய்யாமல் இவ்வாறான ஒரு பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது என்கிறது சட்டம் என்கிறார்கள். தவிரவும் இவ்விண்ணப்பம், முறைப்படி அரச மருத்துவர் சங்கத்தினூடாகவே அனுப்பப்பட்டிருக்கவும் வேண்டும். ஆனால் அப்படியும் நடக்கவில்லை என்கிறார்கள் அவர்கள். இதேவேளை, விளையாட்டுத்துறை அமைச்சினால் இந்த வைத்தியர் பதவி அவசர அவசரமாக உருவாக்கப்பட்டு, பெண் வைத்தியர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டது ஏன் என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

காரணம் வேறொன்றுமில்லை, அந்த வைத்தியர் சுசந்திக்காவுக்கு வைத்தியராக இருக்கவே நியமிக்கப்பட்டுள்ளார் என்பதே அதற்குக் காரணமாம். அமைச்சரின் உறவினரான இந்த வைத்தியர் ஒரு பெண் என்பதையும் ஒரு காரணமாக வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம்!

# ஐ.தே.கவையும் விடச் சிறப்பான ஐ.தே.க!

பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்த போது சரிநிகரில் ஒரு குறிப்பு வந்திருந்தது. ஐ.தே.க, பொ.ஐ.மு. இரண்டுமே ஒன்றுதான். நிறம் மட்டும் தான் வேறு என்று.

இப்போது, ஜனாதிபதியின் மலேசிய விஜயத்தின் பின் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றில், அது ஐ.தே.கவை போல ஒன்றல்ல, அதையும் விட சிறப்பான ஒரு ஐ.தே.கவே என்று பத்தியாளர் ராஜ்பால் அபேநாயக்கா எழுதியுள்ளார். வெளிநாட்டமைச்சர் கதிர்காமரும், ஜனாதிபதியும் மலேசிய தலைவர் மஹிதிர் அவர்களை சந்தித்தது, இந்த அரசாங்கத்தின் இடதுசாரி சாயல் கொள்கைகட்கு கொடுக்கப்பட்ட பிரியாவிடையே என்று அவர் எழுதியுள்ளார். இது பல ஐ.தே.க சார்பு முதலாளிகளை பொ.ஐ.மு பக்கம் வென்றெடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





> "1947 ஒகஸ்டில் பெற்றது போலி சுதந்திரம். இப்போது உலக வர்த்தகக் கழகத்தின் கீழ் இன்னொரு சமஸ்தானமாக இணைந்திருக்கும் இந்தியா, பெயரளவிலான இறையாண்மையையும், இழந்து மீண்டும் காலனியாகி வருகிறது."

''வந்தே மாதரம். ஏழெட்டுத் தடவை சொல்லிப்பாருங்கள், நாவினிக்கும், தொண்டை இனிக்கும்'' என்று தனியார் தொலைக்காட்சியில் விளம்பாம் செய்துகொண்டிருந்தார் எழுத்தாளர் சிவசங்கரி. அதென்ன சக்கரை வியாதிக்கு மாற்று மருந்தா என்று வாசகர்கள் தேடியலைய வேண்டாம. ''சொல்லச் சொல்ல இனிக்குதடா. முருகா'' மாதிரி இதுவும் ஒரு இனிப்பு மந்திரம்.

வந்தே மாதரம். ஆனந்தமடம் நாவல் வாயிலாக பங்கிம் சந்திரரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடல். தற்போதுள்ள ''ஜன கண மன'' வுக்குப் பதிலாக இதையே தேசிய கீதமாக அறிவிக்கவேண்டுமென்பது பாரதீய ஜனதாவின் கோரிக்கை. பார்ப்பன இந்து தேசியத்தை உத்தரவாதம் செய்யும் பாடல் இது என்பதை நிரூபிக்க இதை விட வேறு சான்று தேவையில்லை.

கசையடியையும், தடியடியையும், சிறைவாசத்தையும் சகித்துக்கொள்வதற்கு காந்தியவாதிகளுக்கு அருமருந்தாகப் பயன்பட்ட 'வந்தே மாதரம்' சுதந்திரத்தின் பொன் விழாவையொட்டி மலிவு விலையில் விற்பனைக்கு வந்திருக்கிறது.

சொனி நிறுவ்னம் வழங்கும் ஏ.ஆர். ரகுமானின் ஒரிஜினல் வந்தே மாதரம் விலை அறுபதே ரூபாய். டூப்ளிகேட் வந்தே மாதரம் இன்னும் மலிவு விலையில் கிடைக்கலாம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பிறக்கும் பாக்கியம் பெறாதவர்களும், பிறந்தும் டெல்லி சென்று சுதந்திரம் 'கை மாறுவதை'க் காணக்கொடுத்து வைக்காதவர்களும், 1997 ஒகஸ்ட் - 14 நள்ளிரவில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் கண்விழித்து அமர்ந்திருந்தோம்.

தூர்தர்ஷன் மட்டுமின்றி, பி.பி.சி., சி.என்.என்.,ஸ்டார் போன்ற அந்நியத் தொலைக்காட்சிகளும் பொன்விழாக் கொண்டாட்டத்தை நேரடியாக ஒளிபரப்பின; எம்.டி.வி., வி.சானல் போன்ற சர்வதேசத் தொலைக்காட்சிகள் திரையில் தோன்றும் தங்கள் நிறுவனத்தின் பெயருக்கே மூவண்ணம் தீட்டிவிட்டன. கத்தியின்றி ரத்தமின்றி, உலகத்தையே இந்தியா வென்றடக்கி விட்டதோ என்ற ஐயம் ஒரு கணம் எழத்தான் செய்தது!

''1947 ஒகஸ்ட்டில் பெற்றது போலி சுதந்திரம்: இப்போது உலக வர்த்தக கழகத்தின் கீழ் இன்னொரு சமஸ்தானமாக இணைந்திருக்கும் இந்தியா, பெயரளவிலான இறையாண்மையையும், இழந்து மீண்டும் காலனியாகி வருகிறது'' என்ற உண்மையை ஏகப்பட்ட ஆதாரங்களுடன் சிரமப்பட்டு நிறுவ வேண்டிய அவசியமின்றி மிக எளிதாகப் புரிய வைத்தது இந்தப் பொன்விழாவின் நேரடி ஒளிபரப்பு.

டெல்லி விஜய் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான மேடையின் பின்புறம் லேசர்வாண வேடிக்கை. முன்புறம் அதை வாய் பிளந்து பார்க்க வந்த இந்தியர்கள். பல்வேறு 'பிராந்தியங்களின்' கலைக்குழுக்கள் ஆடிக்களைத்து இறங்கிய பின் ரகுமானின் வருகையை அறிவித்தார் அறிவிப்பாளர்.

''சுதந்திரத்தின் பொன்விழாவையொட்டி தான் இசையமைத்திருக்கும் 'வந்தே மாதரம்' என்ற தொகுப்பிலிருந்து சில பாடல்களைப் பாடவிருக்கிறார் ரகுமான். அவரை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. ரகுமானைத் தெரியதவர்கள் இசையைத் தெரியாதவர்கள்'' என்றார்.

ஜீன்ஸ் பாண்ட், தொள தொளப்பான வெள்ளை சட்டை, பிய்த்து விடப்பட்ட தலைமுடியுடன் மேடையேறினார் ரகுமான். லேசான ஹம்மிங்கில் தொடங்கியது பாடல். சாமியாடியைப் போல் சற்று நேரம் கண்களை இறுக மூடிக்கொண்டு 'தேசபக்தி'யை வரவழைத்துக்கொண்ட பின்னால் லேசாக வலிப்பு வந்தவரின் தோரணையில் வந்தே மாதரத்தைத் தொடங்கினார் ரகுமான்.

வந்தே மாதரம் ஒளிப்பேழையாகவும் (வீடியோ கெசட்) விரைவில் வெளிவருமாம். தற்போது 'வந்தே மாதரம்' என்ற பாடல் மட்டும் காட்சியமைப்புடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அது மீண்டும் மீண்டும் ஒளிபரப்பப் படுகிறது. (இந்த தேசபக்திப் பிரச்சாரத்தில் தூர்தர்ஷனை மிஞ்சுகிறது சன் டி.வி.)




பாலைவனத்தில் மூவண்ணக் கொடி பறக்கிறது. பாலைவன மணலின் மஞ்சள் நிறத்துக்குத் தோதான எதிர்நிறத்தில் உடையணிந்த இந்தியர்கள் திட்டுத்திட்டாகக் கீழே நிற்கிறார்கள். கொடியின் மறைவிலிருந்து ஹெலிகொப்டர்கள் வெளியே வருகின்றன. கீழே அண்ணாந்து பார்த்து நிற்கும் இந்தியர்களுக்கு சோத்துப்பொட்டலம் போடவா. குண்டு போடவா என்று தெரியவில்லை.

அப்புறம், மணிரத்தினம் - சுகாசினியின் 'இந்திரா' படத்தில் தாழ்த்தப்பட்ட சிறுமிகள் பட்டுப் பாவாடை சட்டையுடன் சந்தோரசஷமாகத் துள்ளிக்குதிப்பதைப் போல, கையில் தேசியக்கொடியுடன் சிறுவர்களும், சிறுமிகளும் குறுக்கு நெடுக்காக ஸ்லோமோஷனில் ஓடுகிறார்கள். எல்லோரும் மகிழ்ச்சியையும், வெகுளித்தனத்தையும், வெட்கத்தையும் மட்டும் வெளிப்படுத்தும் ஆபத்தில்லாத, தொல்லையில்லாத இந்தியச் சிறுவர்கள், சிறுமிகள்.

தனக்கு மெட்டுக்களை வாரிவழங்கும் ராஜஸ்தான் விசயத்தில் ரகுமான் நன்றி மறக்கவில்லை. பள்ளிகள் நடத்தும் சுதந்திரதின அணிவகுப்புபோல இரண்டிரண்டு பேராக பாலைவனத்தில் ஒரு நீண்ட வரிசையை ஊர்வலம் விட்டுவிட்டார். என்ன, சுதந்திரத்தின் சூடு பொறுக்காமல் கொஞ்சம் கஷ்டப்பட்டிருப்பார்கள் - அவ்வளவுதான்.

பிறகு யானை மீது தேசியக்கொடி; கதகளி நடனம்...

இந்தக்காட்சிகளின் பின்னணியில், தொலைதூரத்தில் கால்களைக் கொஞ்சம் முன்னால் மடக்கி, கைகளை உயர்த்தி, இதயத்திலிருந்தோ, வயிற்றிலிருந்தோ அல்லாமல் தொண்டையிலிருந்து ''வந்தே மாதரம்'' என்று ரகுமான் பாடுகிறார் பம்பாய் படத்தில் பாறை மீது நின்று கொண்டு விரக வேதனையுடன் ''உயிரே உயிரே'' என அரவிந்தசாமி அரற்றும் காட்சி நினைவுக்கு வந்தது.

கதர்க் குல்லாய்க்காராகள் போராடியதையும், தடியடிபட்டதையும், சூடு பட்டுச் செத்ததையும் காட்சிகளாக வடிவமைத்து 'வந்தே மாதரம்' பாடுவதை விட்டு பாலைவனத்தில் ஏன் கொடியேற்ற வேண்டும் என்று கலாரசனையற்ற பாமரர்கள் சிந்திக்கலாம்.

சொனி எனும் ஏகாதிபத்தியத் தொழில் நிறுவனத்தால் உலகெங்கிலும்முள்ள 27 நாடுகளில் ஒரே நேரத்தில் வெளியிடப்படும் தேசங்கடந்த தேசபக்திப்பாடல் ஒலிப்பேழை - வந்தே மாதரம். அவ்வாறிருக்க அதில் குறுகிய தேசிய உணர்வைத்தூண்டும் விவகாரங்களும், எதிர்கால சந்ததியைப் பாதிக்கக்கூடிய கடந்த கால வரலாறும் கிளறப்படாமல் இருப்பது நல்லது என அவர்கள் கருதியிருக்கக் கூடும்.

விஜய் சதுக்கத்தின் மேடையில் ரகுமான் இரண்டு பாடல்களைப் பாடியபின் கிடைத்த இடைவேளையில் இந்தியாவின் இந்நாள் பிரதமரும், முன்னாள் பிரதமர்களும் மேடையேற்றப்பட்டார்கள். மைனாரிட்டி அதிசயமான சந்திரசேகர் முதல் 13 நாள் அற்புதமான வாஜ்பாயிவரை அனைவரும் பிடிபட்ட குற்றவாளிகளைப்போல சிறிது நேரம் மேடையில் வரிசையாக நிறுத்தப்பட்ட பின், தொலைக்காட்சிக் காமெரா ரகுமானிடம் பிரியாவிடை பெற்று பாராளுமன்றம் சென்றது.

மின்னணு இசைக்கருவிகளுடன் மக்கள் மன்றத்தில் ரகுமானின் 'வந்தே மாதரம்' தொடர, மக்கள் பிரதிநிதிகள் மன்றத்தில், பழைய ஆர்மோனியப் பெட்டியின் துணையுடன் பீம்சேன் ஜோஷி நடுங்கும் குரலில் தனது வந்தே மாதரத்தைத் துவங்கினார்.

இந்துஸ்தானி வந்தே மாதரம், பாப் வந்தே மாதரமாக உருமாறியதெப்படி?

''புதிய ஒலிகளைப் பயன்படுத்தி வந்தே மாதரம் பாடலுக்குப் புத்துயிர் கொடுக்கலாம், எல்லோரும் பாடத்தக்க பாடலாக அதை மாற்றலாம் என்ற யோசனையுடன் என் நண்பன் பாலா என்னை அணுகினான். ஒரிஜினல் மெட்டு மிகவும் ஆன்மீகத்தன்மைக்கொண்டதாக இருந்ததால் (அதை மாற்றி) புதிதாக இசையமைக்க எனக்கு 4 மாதங்கள் பிடித்தது'' என்கிறார் ரகுமான்.

வந்தே மாதரம் என்பதைத் 'தாய் மண்ணே வணக்கம்' என்று மொழியாக்கம் செய்து பாட்டெழுதிக் கொடுத்திருக்கிறார் கவியரசு வைரமுத்து. வால்மீகிக்குத் திருத்தம் செய்து ராமாயணத்தைத் தமிழாக்கிய கவிச் சக்கரவர்த்தி கம்பனை இனத்துரோகி என்றார் பெரியார். இந்தக் கவிரயசரை என்னவென்று அழைப்பது?

இந்த ஒலி/ஒளிப்பேழைகளை நாம் இன்னும் முழுமையாகக் காணக் கேட்கவில்லை. எனினும், பானை சோறு எப்படி இருக்கும் என்பதை ஒரு சோறே காட்டுகிறது.

முற்றிலும் லண்டனில் பதிவு செய்யப்பட்ட இந்த வந்தே மாதரம் பாடல் ஒலி/ஒளிப்பேழையில் லெக் வாலேசா, அன்னை திரேசா, தலாய் லாமா, மாதுரி தீட்சித் போன்ற பலர் வந்தே மாதரத்திற்கு உதட்டசைத்திருக்கிறார்களாம். கிளின்டனை அணுகினார்களா என்று தெரியவில்லை.

''முற்றிலும் புதிய தலைமுறை ஒன்று என் இசையை இரசித்துக் கொண்டிருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு பின் நான் திரும்பிப் பார்க்கும் போது அவர்கள் 'முக்காபுலா', 'சிக்கு புக்கு ரயிலே' என்று மட்டும் பாடிக்கொண்டிருக்கக்கூடாது. வந்தே மாதரம் போன்ற பாடல் ஒலிப்பேழைகளை நான் வெளியிடும் காரணம் இதுதான்'' என்கிறார் ரகுமான்.

''இனி வரும் வருடங்களுக்கு இந்திய இளைஞர்களுக்கு ஒரு இசை உற்சாகத்தை அளிக்கத்தான் வந்தே மாதரம்'' என்கிறார் சொனி நிறுவனத்தின் இயக்குநர்.

வந்தே மாதரத்தின் இசையை மட்டுமல்ல, பாடகனையும் சர்வதேசத் 'தரத்திற்கு' மாற்றியமைத்து விட்டது சொனி. மைக்கேல் ஜாக்சன் போன்றோறைப்போல ரகுமானின் தலைமுடியை பிய்த்துச் தொங்க விட்டு விட்டது. உலக வர்த்தக கழகத்தின் ஆணைக்கு ஏற்ப இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தியமைக்கலாம் என்னும் போது முடியைத் திருத்துவதொன்றும் பெரிய விவகாரமில்லை.

பொன்விழாவையொட்டி இந்திய இளைஞர்களிடம் சுதந்திரம் பற்றி கருத்துக்கேட்டது ஸ்டார் ப்ளஸ் தொலைக்காட்சி.

'முன்பு சன்னி மொபெட்டில் சென்று கொண்டிருந்தேன்; இப்போது சுசுகி வாங்கியிருக்கிறேன். வேகமாக சுதந்திரமாகச் செல்கிறேன்'' என்றார் ஒரு இந்திய இளைஞர்.

ஒகஸ்ட் -14 பாகிஸ்தான் சுதந்திரத்தைக்கொண்டாடும் முகமாக வி - சானல் தொலைக்காட்சியில் ஜீன்ஸ் பாண்ட் அணிந்த பாப் பாடகி மேடையில் வந்து குதித்து 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றவுடன் அரங்கமே விசிலடித்து ஆர்ப்பரித்தது.

ஒகஸ்ட் - 15 இந்தியப் பொன் விழா கொண்டாட்டத்தையொட்டிய வி. சானலின் சிறப்பு நிகழ்ச்சியில் ஒரு பாப் பாடகி மேடையில் தோன்றினார். நாற்காலியில் அமர்ந்து குனித்து நிமிர்ந்தார் அவரது மேற்சட்டையின் முன்புறம் டர்ர்ரென்று கிழிந்தது - வந்தே மாதரம்!

*புதூர் இராசவேல்*

**நன்றி: புதிய கலாச்சாரம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அந்த அணிலின் கடைசிக் கணத்துக் கவிதை

அ. இரவி

பட்டணத்தின் விளிம்பில் ஒரு கிராமம் கணேசபுரம். அழகான ஊர். முக்கால் வாசி நிலம் வயல். வயலைச் சுற்றிக் குடிசைகள். இடையிடை கல் வீடுகள். குடிசைகளில் லாம்பு தெரியும். கைவிளக்குகள், போத்தல் விளக்குகள் அலைபாயும். கல்வீடுகளில் சிலவேளைகளில் பெற்றோமாக்ஸ் எரியும். தென்னந் தோப்பும் நிறைந்த ஊர். தென்னங்கள்ளுக்குப் பஞ்சமில்லை. அதுவும் ஏத்தாவிட்டால் இருக்கிறது கசிப்பு.

கசிப்பு முடிய இருக்கிறது. குடிசை. அக்குடிசையில் மனிசி இருக்கிறாள். அவள் போட்டுத் தரச் சோறும், குழைக்க ஊறுகாயாவதும் இருக்கும். ''மரைவத்தலைச் சுட்டுத்தாடி'' என்று மனிசியை வெருட்டலாம். பிறகு தேவைப் பட்டால் மனிசி அல்லது கால்களை அகலப் போட்டுக் குறட்டை.

அப்பால் முறிப்புக்குளத்தில் சிவந்து குதித்த சூரியன், கனகன் குளத்தில் குளித்துக் கண்சிவந்து கரையேறுவதற்கிடையில் எழுந்து விடுவார்கள். பகல் முழுக்க ஓயாத வேலை. காட்டு வெய்யில் அவர்களைத் தீய்த்துவிட மதியம் ஒரு துண்டுப் பாணுடன் பொழுது போகும். பொழுதுபட வாய்க்காலில் குளித்து, பீடி குடித்து, கள்ளுக்கொட்டிலுக்குப் போனால் அது ஏத்துதில்லை. கொட்டில்காரன் தண்ணிகலக்கிறானோ என்னவோ? கசிப்பு சொன்னது கேட்கும்.

இதேவாழ்வு. இதுதான் வாழ்வு!

மத்தியானம் காட்டுவெய்யில் அலையாய் அடிக்க, புத்தகப்பையும் சுமந்து, தணித்த ஒருவனாய் ஒரு சிறுவன் செல்கிறான். புத்தகப்பை வலு ஊத்தையாக உள்ளது. அடிவாங்கியோ, அழுதோ முகம் வீங்கி இருக்கிறது. வயிறு ஒட்டிய கண்கள். கலங்கலாகத் தெரிகின்றன.

அவன் தென்னந்தோப்பைக் கடக்கிறான். வாய்க்கால் வரம்போரம் நடக்கிறான். இலையுதிர்த்து, முற்றத்தில் முருங்கை மரம் நிற்கிற குடிசைக்குள் செல்கிறான்.

இங்குதான் கொட்டிலில் கொட்டிலாய், வறுமையிடையே வாழ்வாய், வாழத்துடிக்கிற ஒரு துளிரைக் கைப்பற்றியதாய் கனகி என்கிற கனகம்மா வாழ்கிறாள்.

இன்றும் என்றும் போல் மறைந்த சூரியனின் பின்னிரவு. பின்னிரவின் நீண்ட நிழல். எல்லோர் மீதும் கவிந்த இருள். குடிலின் மேல், வாய்க்காலின் மேல், வரப்போரத்தில், வயலில், வயலின் அயலில், அந்தப்பள்ளியின் மேல், பரந்த குளத்தின் மேல், எல்லோர் மீதும், எல்லாவற்றின் மேலும் கவிந்த இருள், பேயின் ஆட்சி! மின்மினிப்பூச்சிகள் வானுக்கும் மண்ணுக்கும் சரம் கட்டி அலைபாய்கின்றன. தம் தனிமையை ஒளி கொண்டு தேடுகின்றன. அப்படித்தேட முடியாத ஒளிகள் லாம்புகளில் அடைபட்டு, குடிசைகளில் மினுக்மினுக் கென்று விரக்தியில் தோய்கின்றன.

விரியும் இருள். தேயும் இரவு. கசிப்பு அடித்து, பீடிகுடித்து, நாறிய வாயுடன், சிறிது தளம்பலுடனும் மகேந்திரன் கனகி வீட்டுக்கு வருகிறான்.

கனகி தன் கணவனைத் தொலைத்துக்கன காலம். ஒரு துளிரைத் தன்னுள் பொத்தி வைத்திருக்கிறாள். அத்துளிர் வளர்ந்து படித்துப்பெரியவனாகி, வாத்தியாராகி அம்மாவை இருத்திச் சோறு போடுவான்.

அந்த ஏழை மனதில், ஒடுங்கிய கன்னத்தில், இற்றுப்போன கண்களில் எத்தனை ஆசைகள். தெய்வமே!

அம்மா வெள்ளியில் விரதம் பிடித்துத் துளிரைப் பெற்றவள். வேலனின் கருணையினால் விளைந்த பயிர். பெற்ற துளிர் பிறகு அம்மாவின் வெள்ளி விரதத்துக்கு, தலை வாழையிலையிட்டு விருந்தூட்டுவான். ஊட்டுவானா?

ஆவான்!

'இப்போது பாவம் செய்கிறேன். பாவம் பாவமாகச் செய்கிறேன். கடவுளே!'

யார் இவன் மகேந்திரன்? றக்ரர் ஓடுகிறான். பகல் முழுவதும் வயலைத்தாறுமாறாக உழுகிறான். சாமத்தில் சூடு அடிக்கப்போகிறான். அல்லது சூடு அடித்து விட்டு வருகிறான்.


இவனுக்கு இங்கு என்னவேலை? வருகிறான். வந்துவிட்டுப்போகிறான். போகிறானா? பாடாய்ப்படுத்துகிறான். பீடிநாத்தம். கசிப்பு நாத்தம். வயல் உழுத வேர்வை நாத்தம். சூடு அடித்த புழுதி நாத்தம். காலையில் எழுந்தாலும் அதே நாத்தம். எந்தக் குளத்தில் தேய்த்துக் குளித்தாலும், குளத்து மண்ணெடுத்துப் பிரட்டிக்குளித்தாலும் போகாத நாத்தம்!

''தம்பி மகேந்திரன், பீடி கசிப்பை விட்டாலென்ன...?''

'தம்பி முறையா மகேந்திரன்? மாமா என்கிறான் என் மகன். பெண்டாளுகிறான். பாவி. படுபாவி!'

''இஞ்சின் சூடு.. இருக்க முடியேல்லை'' சொல்கிறான். பொறுக்கிறேன் பொறுத்துப் பார்க்கிறேன். முருகா!

வெள்ளி என்றால் பின்னேரப் பூசைக்கு, ஒரு சரைகற்பூரம் வாங்கி, வாழைப்பழம், தேங்காய், வெத்திலை பாக்கு வைத்து கந்தனிடம் ஓடுகிறாள். ஓடிச்சென்று உருகுகிறாள். ''என்னய்யா நான் செய்ய? ஒரு வழி காட்ட மாட்டியா...? இப்படியே இருந்து அழிஞ்சு



போறதா? எனக்கொரு வழி காட்ட மாட்டாயா? வேண்டாம். இப்ப வேண்டாம். என் குஞ்சு படிக்கட்டும். அவனைப் படிக்க அருள் குடு. படிச்சு உத்தியோகம் பாக்க கருணை காட்டு. உன்ரை பிள்ளை அவன்! நான் பாவி எப்பிடியும் போகட்டும். அவன் படிச்சு உத்தியோகம் பார்க்கும் மட்டும் என்னை வாழவிடு. அதைக் கண்ணாலை பாத்திட்டுச் செத்துப் போறன். ''உருகினாள். உருகி நின்றாள். கண்ணீர் பெருகி நின்றது.

கனகியின் வாழ்வு இதுதான். இப்படித் தான் வாழவேண்டுமென்று எந்த விதியும் அவளுக்கில்லை. விதி வைதது வாழவும் அவளுக்கு வழியில்லை. 'கணவன் இறந்தபிறகு அவள் வாழ்வு குலைந்தது.

கனகியின் அவர் சாகிறபோது ராசனுக்கு இரண்டு வயது. ராசனோடை எவ்வளவு சந்தோசமாயிருப்பார். ''பீடி நாத்தத்தை ராசன்ரை மூஞ்சையிலை தேய்க்காதையுங்கோ இப்பதான் அவனுக்கு மேல் கழுவினனன்...''

பிறகெல்லாம், பொழுது பட கூலியால் வந்தால், வாய்க்காலுக்குப் போய் மேலை நனைத்து விட்டு வந்துதான் கொஞ்சுவார். கொண்டு வந்த கொட்டுக்கை குளத்து மீன் இருக்கும். மரக்கறி இருக்கும். கருவாடாவது இருக்கும். வாய்க்காலில் தண்ணீர் வற்றிய காலங்களில் மான் மரை இறைச்சியும் கொட்டுக்கை காணக்கிடைக்கும்.

''என்ரை குஞ்சு. என்ரை செல்லம். என்ரை ராசா'' ராசனைக் கொஞ்சு, கொஞ்சென்று கொஞ்சுவார். ''என்னை மாதிரி வெய்யிலுக்கையும், வயலுக்கையும், காட்டுக்கையும் உலையாமல், படிச்சு லோங்சுப் போட்டு, மோட்டச்சைக்கிள்ளை வேலைக்குப் போவேணும்..'' சொல்லேக்கை குரல் கமறும். கமறிய குரல் காறித்துப்பும். பிறகு, ''கனகி கொட்டிலுக்குப் போட்டு வாறன்''

''உடனே வாங்கோ''

தென்னங்கள்ளுதான். கசிப்பில்லை. எப்பவாகிலும் நல்லா மழை பெய்து, ''கள்ளுக்குளிருது. அதுதான் இண்டைக்குக் கசிப்பு!''

வருவார். சாப்பிடுவார். ராசன் நித்திரையாயிருப்பான் லாம்பைத் தூக்கி ராசனின் முகத்தைப் பார்ப்பார். என்ன நினைத்துக் கொள்வரோ? படுப்பார்.

எப்படித்தான சாக மனம் வந்ததோ? எந்தக் கொள்ளையிலே போவான் அவரைக் கொண்டு போனானோ?

கனகியின் கணவன் இறந்தான். ஒரு மழைக்காலத்தில் அவனது சாவு நிகழ்ந்தது. 'கொட்டு' மழை பெய்தது. பூச்சி, பூரான் தம் பொந்துள் இராதபடி வெளியில் உலாவின.

பாம்பு கொத்தி பாவி மகன் செத்தான்!

மாரிக்கால வெள்ளத்தில், ஊரெங்கும் துயரத்தின் சேதி பரவிற்று. பறை இல்லை; அதன் முழக்கம் இல்லை. சங்கு, சேமக்கலம் ஒலிக்கவில்லை. மழை ஒழுகும் குடிலில் வெள்ளைத் துணி போர்த்தி அவன்கிடந்தான். ராசன், துன்பத்தின் சாயல் படியாதவாறு விரல் சூப்பி, தன் தாயின் மடியில் விழுந்தான். தாயோ பெருகும் துயர் பொறுக்காது, ஆறுதல் தேட இன்னோர் மடியின்றி விறைத்துப் போய்க் கிடந்தாள். அவள் கண்ணீரை வெள்ளம் கொண்டோடிற்று.

மாலையில், மழைகுறைந்த சிறு இடைவெளியில், வாய்க்கால் மிதித்து, வயல் தாண்டி குளத்து மேட்டில் ஏறி, சுடலை தொட்டார்கள். கறுத்தககட்டையென்று, அவனை எரித்தார்கள். ஈரவிறகு எரியப் பஞ்சிப்பட்டுப் புகைந்தது. மண்ணெண்ணெய் ஊற்றினார்கள். குப்பெனப் பற்றி அது பரவி எரிந்தது.

பாவி அவன்! மனைவியையும், மைந்தனையும், தனியவிட்டுத் தவிக்கவிட்டு, பற்றி எரியுண்டான்.

இரவில் கனத்த மழை. துயரம் தணிக்க வந்தவர்கள் விடிந்ததுதான் தாமதம் என்று போனார்கள். வெள்ளம் ஊரெங்கும் சேற்றையும், குப்பையையும், பாம்பு பூரான்களையும், சில குடிசைகளின் நிலத்து மண்ணையும் வாரிக்கொண்டு போயிற்று. அவளது கண்ணீரையும், துயர்களையும், இழப்பையும், கசப்பையும், ஏக்கத்தையும் வாரிக்கொண்டு ஓடிற்று.

நட்ட நாற்றை வெள்ளம் கொண்டோடியது என்று கனகி மூன்றாம் நாள் வயலில் நாற்று நடப்போனாள்.

அதுதான் காலம்! எல்லாம் குலைந்து போன காலம். மாரிகால இரவொன்றில் பாம்பு கொத்தி, காலன் பறித்துக்கொண்ட காலம்.

மகேந்திரன் அப்போது பெடியன். செத்த வீட்டிற்குள் ஓடியாடி வேலை செய்தான். ஏதோ ஒரு வழியில் அவருக்குச் சொந்தம். சின்னப் பெடியன் என்றுதான்.

சிரிக்க இதில் ஒன்றுமில்லை. அவனுக்குச் சாடையாக மீசை முளைச்சிருக்கு.

வந்தான். வீட்டிற்குள் ஓட்டினான். ராசனைக சைக்கிளில் ஏற்றிக்கொண்டு திரிந்தான். தொதல், அலுவா என்று வாங்கிக்கொடுத்தான்.

''தம்பி ஏன் வீணாகக் காசைச் சில வழிக்கிறாய்..?''

''காசு இண்டைக்கு வரும். நாளைக்குப் போகும்''

காலம் நாளை, நாளை என்று போனது. காசு வந்தது. றக்ரர் வாங்கினான். ஒழுங்கையெல்லாம் புழுதி பறக்க ஓடினான். ஒரு கையில் மாம்பழம் சூப்பியவாறு றக்ரர் ஓட்டினான்.

''நடராசற்ரை பெடியன்ரை கெப்பரைப் பார்''

வாசலில் றக்ரரை நிற்பாட்டினான். ராசனையும் ஏத்தி றக்ரரை ஓட்டினான். அரைமணித்தியால மாச்சு. ஆளைக்காணன். வயிறு கலக்கத் தொடங்கியது.

சரிந்த சூரியனின் கதிர்களின் முன்னே றக்ரகி எம்பிக் குதித்தது. ''வட்டக்கச்சி மட்டும் போட்டு வாறம்'' என்று வந்தான் மகேந்திரன்

அப்படித்தான் வந்தான். அடிக்கடி வந்தான்.

மாம்பழக் கொட்டையினுள் வண்டு இருந்தது போல, அவன் கதையில் ஒரு நாள் புழு நெளிந்தது.

கனகி அந்த அரியண்டம் தந்த நாளை, காலில் குத்தியிருக்கிற முள்ளை பிடுங்கி எறிகிறமாதிரி எறியத்தான் விரும்பினாள். ஆனால் அப்பிடி நினைத்துவிட்டால் போதுமா?

''அக்கா இதிலை கொஞ்சக்காசு வைச்சிருக்கிறன். எடு. உனக்கும் அரிவு வெட்டும் வரைக்கும் உழைப்பு இல்லைத்தானே?''

உழைப்பு இல்லாமல் தான் இருந்தது. காசு தேவையாய்த்தான் இருந்தது. உப்பு மட்டும் போட்டு குழம்பு வைத்து விட முடியாது. ஒரு நேரமாவது நாக்கைக் கிழிக்கிறமாதிரி சாப்பிட முடியாதா? ராசன் என்ன பாவம் செய்து என் வயிற்றில் வந்து பிறந்தான்?

மகேந்திரன் முகத்தைப்பார்த்தால் -

மீசை தடித்து இருந்தது.

முகம் சதைத்து இருந்தது.

உயர்ந்து இருந்தான்.

அவன் உடலுக்குத் தேவை இருந்தது.

அவன் கெந்தல் நடையுடன் படலையை திறந்தான்.

ஒன்றும் சரியாக இல்லை-

- இரவு வருகிறான். படலை அடிபடுகிறது. லாம்பைத் தூண்டித் தூக்கிப் பார்க்கிறாள்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகேந்திரன்! கெந்தல் நடையில்லை. தள்ளாட்டம். முருங்கையடியில் வருகிறப்பவே கசிப்பு காற்றில் பரவுகிறது.

''என்ன தம்பி, இந்த நேரம்?''

'சும்மாதான்''

''சாப்பிட்டியோ?'' குசினிக்குள் சோறு துளிக்கூடக்கிடையாது.

''ஓமோம்'' பிறகு அவனால் ஒன்றும் கதைக்க முடிகிறதில்லை. வாய்திறந்தால் புழுக்கொட்டுண்ணும். அவனால் எப்படிக் கதைக்க முடியும்?

''அப்பனே முருகா! நீ தான் என்னைக் காப்பாற்ற வேணும்!''

குனிந்து இருக்கிறான். திடுமென ''அக்கா'' என்கிறான். பிறகும் குனிந்தேயிருக்கிறான். அக்கா ஆனபட்டவள் லாம்பைத் தூண்டி விடுகிறாள்.

''என்னாலை வீட்டிலை இருக்க முடியேல்லை'' அவன் வாயினுள் புழுக்கள் நிறைந்ததாக அவள் நினைக்கவில்லை.

''ஏன் தம்பி, வீட்டிலை ஏதும் பிரச்சினையோ?''

''இல்லை, இஞ்சை வரவேணும் போலை இருந்தது''

என்ன சொல்கிறான் இவன்?

பிறகும் ஏதோ சொல்கிறான்.

''தம்பி உனக்கும் வயசாச்சுது தானே? நல்ல உழைப்புமிருக்கு. கலியாணம் முடியன்''

நிமிர்ந்து கனகியின் முகததைப் பார்த்துப் பிறகும் குனிந்தே இருக்கிறான். பிறகும் சொல்கிறான்.

''அப்ப என்னைக் கலியாணம் முடிக்கப் போறியோ?'' குனிந்த படியே ''இல்லை, இல்லை'' என்றான்.

''அப்ப?''

மறுக்கிறான். எப்படிச் சொல்வான் இவன்? எவ்வாறு சொல்லலாம் இதனை?

அன்றிரவு காற்றடித்து முருங்கை மரத்தில் பூக்கள் கொட்டுண்டன. அவன் போனான்.

அடிக்கடி இரவு வருகிறான்.

ஏழ்மை, இயலாமை, காசில்லாக் கொடுமை தனிமை, நாதியற்ற தன்மை.

மகேந்திரன் இவற்றைப் பயன்படுத்துகிறான். வெருட்டுகிறான். கெஞ்சுகிறான். பயமுறுத்துகிறான். இரக்கிறான்.

கொடுங்கோடை நாட்களில் ஒரிரவு அது நடந்தது/ ஊரே எரிகிறதான வெக்கை வீசிய பின்னிரவுக்குச் சற்று முன்பதாக அந்தப் பாவம் நடந்தது. அன்று மாலை ராசன் தொதலும் அலுவாவும் நிறையச் சாப்பிட்டிருந்தான். இனித்ததென்று ராசன் நினைத்தான். ஆனால், அது கசப்பினால், செய்யப்பட்டது என்பதைக் கனகி அறிவாள்.

வானம் கீழிறங்கி வந்தது. காற்று ஒன்றும் செய்யத் தோன்றாது அமைதி காத்தது. அந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. பெரும்போக விளைச்சல் ஊரறிய எரிந்து போயிற்று. அம்முறையே சிறுபோகத்திற்குத் தண்ணீர் வாய்க்காலில் விடப்பட்டிருந்தது. குளம் வற்றிக்கிடந்தது. வயல்களும் வரண்டு போயிருந்தது. வரண்டே போய்க்கிடந்தது.

பிறகு கனகி தனக்குள் கூறினாள். ''நான் பாவியானேன்.''

காலையில் எழுந்து கணவனை நினைத்தாள். ராசனைத் தடவினாள். பொங்கி வரும் கண்ணீரைக் கட்டுப்படுத்தினாள். கண்களுக்குள் தூசுகள் விழுந்ததெனக் கண்களைத் துடைத்தாள்.

பிறகெல்லாம் மகேந்திரன் அதிகாரியாக நடக்கிறான். கனகியையும், அவள் குடும்பத்தையும் ஆளுகிறான்.

நாற்று நடுகைக்காலம். புல்லுப் புடுங்கும் காலம். அரிவி அறுக்கும் காலம். இவை போகப்பட்டினி கிடப்பது, பஞ்சத்தில் உழல்வது.

''தம்பி, காசு கொஞ்சம் எடுக்கேலுமே? இரண்டு மூண்டு நாளாச் சாப்பாடு சரியில்லை''

பொக்கற்றிலிருந்து காசை நீட்டுகிறான். சைக்கிள் எடுத்துப்போய் ராசனுக்குத் தொதல், அலுவா வாங்கி வ்ருகிறான்.

ராசனைச் சைக்கிளில் பள்ளி கொண்டு செல்கிறான். மதியம் பள்ளியிலிருந்து கூட்டி வருகிறான்.

இருந்திருந்து விட்டுக் காசு தருகிறான். 'அதற்காகப் பாவம் செய்கிறேன். பாவம் பாவமாகச் செய்கிறேன்'

'முருகா! என்னைக் கரையேற்று. இந்தப் பாவத்திலிருந்து மீள வழிகாட்டு'.


''ராசன் எழும்படா. எழும்பு.பள்ளிக்கெலலே நேரம் போய்ச்சு''

உருண்டு எழுந்தான்.

''அம்மா. அம்மா''

''என்னடா வேணும்?''

''ராத்திரி ஏனம்மா என்னோடை படுக்கேல்லை.



எனக்குப் பயமாயிருந்தது''

''என்ரை ராசனோடைதானே படுத்தனான்.''

''இல்லையம்மா, மாமாவோடையல்லோ படுத்தனீங்கள்.''

என்ன சொல்ல?

ராசனைப் பள்ளிக்குப் போக்காட்டி விட்டாள்.

அடுப்பை மூட்டினாள். எரிந்து தள்ளியது. பச்சையான ஒரு விறகு எரியாமல் கிடந்தது. ஏதோ ஒன்று மனதை உறுத்தியது. 'ராசனுக்கு இதெல்லாம் புரியுமா? புரியக்கூடிய வயசா? புரிகிற வயசு வந்த பிறகு என்னைப்பற்றி என்ன நினைப்பான்? வேசையென்றா? தான் வேசைமகன் என்றா?

தகப்பன் முகம் மறந்து போய்விட்டது. படமா இருக்கு- வீட்டில் - அப்பா இவர் தான் என்று?'' 'எனக்கொரு அப்பா இருந்தார்.' என்று காலம் கடந்த கதையாகத்தானே அப்பா எனும் ஒரு சொல். என் குஞ்சனுக்கு!

இந்த மாமா ஒரு போதும் நிலைத்த உறவல்ல.

மகேந்திரனின் கையில் இப்போது காச புழங்குகிறது. மகேந்திரன் திமிராக நடக்கிறான். ராசனிடம் எரிந்து விழுகிறான். அடிக்கக்கூடச் செய்கிறான். தொதல், அலுவா என்று ஊட்டிய காலமெல்லாம் வெள்ளத்தில் வீழ்ந்து விட்ட சருகுகளாகிப் போய்விட்டது. ராசனைப் பள்ளிக் கூடத்திற்குச் சைக்கிளில் கொண்டு போய்விட்டது பழங்கதையாகி விட்டது. ராசன் தனித்த ஒருவனாய் வரப்போரம் நடக்கிறான்.

மகேந்திரனிடமிருந்து விலக வேண்டும் இதென்ன ஒட்டுண்ணி வாழ்வு? போடா அப்பாலே? ஓடிப்போய் விடு! உன் நிழல் கூட இங்கு பட வேண்டாம். என் மகன் வளர்கிறான். அவனுக்கும் இந்த அரியண்டம் தெரிய வேண்டாம்.

''தம்பி மகேந்திரன், இஞ்சை வராமல் விடு. ராசனும் வளர்கிறான். நீயும் கலியாணம் முடிக்க வேண்டிய வயசு'' இப்படிச் சொல்ல அவள் வாய் உன்னுகிறது. ஆனால் பேசாதிருக்கிறாள்.

மௌனம்! ஒரு நேரக்கஞ்சிக்காக அதைக் காத்தாள்.

வளர்ந்து வருகிற மகனுக்கு என்ன சொல்வேன்? அவனுககு எலலாம் புரிகிற போது எப்படி முகத்தில் முழிப்பேன்?

விடைகள் காண முடியாத கேள்விகள். எதிர் காலத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறேன். என்கிற கேள்விகள். பஞ்சு மேகம் ஒன்று வெடித்துச் சிதறி அனல் துண்டுகளாய் அவளைத் துன்புறுத்தி-

தாய் அழுதுவிட்டாள். அவரைக் கொத்திய அந்தப்பாம்பு மீண்டும் மைந்தனையும் தன்னையும் கொத்தி விழுங்காதோ என்று தாய் வெம்பி அழுதே விட்டாள்.

மகன் பாடசாலை சென்றான். என்றும் மாறாத நீலக்காற்சட்டையும், வெள்ளை என்று சொல்லத்தக்க அதே சேர்ட்டும். வாய்க்காலோரம் நடந்தால் வயல். வயலைத் தாண்டினால்

**ராசனுக்கு இதெல்லாம் புரியுமா? புரியக்கூடிய வயசா? புரிகிற வயசு வந்த பிறகு என்னைப் பற்றி என்ன நினைப்பான்?**

மறுபுறம் பள்ளிக்கூடம். ஒழுங்கைப்பாதையால் போனால் கொஞ்சம் நேரம் எடுக்கும்.

பள்ளிக்கூட முற்றத்தில் நாவல் மரம். வேளையோடு போனால் நாவல் பழம் பொறுக்கலாம். பசிக்கிற மாதிரியும் இருக்கிறது. வேளையோட போனால் வாத்தியும் அடிக்கும். வீட்டு வேலை செய்யச் சொன்னவர். கொப்பி இல்லை. அம்மாவிடம் கேட்டாச்சு. மாமா வாங்கித்தாறன் எண்டவர். தரேல்லை. நித்திரையானாப் பிறகு வாறார். எழும்ப முன்னம் போறார். மாமா முந்தின மாதிரி இல்லை. தொதல் அலுவா திண்டு எவ்வளவோ காலமாச்சு. மாமா நித்திரையாயிருக்கேக்கை எழுப்பி, தொதல் அலுவா வேண்டாம், கொப்பி வாங்கித்தாங்கோ எண்டு கேக்கலாம். அடிச்சாலும் அடிச்சுப் போடுவர்.

இப்பவெல்லாம் அம்மாவும் சிரிக்கிறா இல்லை!

ராசன் சேர்ந்தபடி பாடசாலை செல்கிறான். கால் வைக்க மணி அடிக்கிறது. முதலாம் பாடம் கணக்கு. வீட்டுக்கணக்கு செய்யவில்லை. வேலியில் முறித்த பூவரசங்கம்பு சுள்ளெனக் கையில் இறங்குகிறது. அழுகை வரவில்லை. மாமா கொப்பி வாங்கித் தந்திருக்கலாம். முந்தின மாதிரி இல்லை மாமா!

பள்ளிக்கூடம் விட்டாயிற்று.

வாசலுக்கு வந்தான் ராசன். முந்தியெண்டால் மாமா வருவார். எல்லோரிற்கும் அப்பாவோ, அம்மாவோ, அக்காவோ, அண்ணாவோ வந்தனர்.

ராசன் தனித்தவனாய் நடக்கிறான். தனித்த ஒருவனாய் நடக்கிறான்.

செட்டை அடித்து வண்ணத்துப் பூச்சி பறப்பது அழகாக இருக்கிறது. நிலம் குளிர்கிறது. மழை பூமிக்கு இறங்குவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறது.

காலையில் சாப்பாடில்லை. பசிக்கிறது.

காலையில் தேநீர். மதியத்தில் கஞ்சி.

ராசனுக்குப் புதிய கனவுகள். புது நீலக்காற்சட்டை. நல்ல வெள்ளையாகச் சேர்ட். அழகான புத்தகப்பை. அதற்குள் அடுக்கிய புத்தகங்கள். கொப்பிகள். எப்போதும் கூரான பென்சில். அழிறப்பர்.

சாப்பாட்டுப்பெட்டி. அதற்குள் தொதல் அலுவாத்துண்டுகள்.

வண்ணத்துப்பூச்சிகள் பறந்தன

குரங்குகள் நாவல் மரங்களில் தாவின. ராசனுக்கு ஒன்றுமாகத் தெரியவில்லை. உலகம் இருண்டு வருவது தெரிகிறது.

சைக்கிள்கள் விரைவாகின்றன. தாய்மார் குழந்தைகளை அணைத்தபடி செல்கின்றனர். தகப்பன்மார் தம்பிள்ளைகளைச் சைக்கிளில் இருத்திச் செல்கின்றனர்.

ராசன் தனித்த ஒருவனாய் நடக்கிறான்.

நானும் இதேமாதிரி! புது நீலக் காற்சட்டை. வெள்ளைச் சேர்ட். புத்தகப்பை. புத்தகம் கொப்பி. சாப்பாட்டுப்பெட்டி. தொதல். அலுவாத்துண்டுகள்.


இவன் தனித்த ஒருவனாய் நடக்கிறான்.

எனக்கு ஒண்டும் வேண்டாம்.

எனக்கு ஒண்டும் வேண்டாம்.

அந்தப் பிஞ்சுப் பாலகனின் உணர்வுகள் உறுதியாகி, மனசில் தோன்றி, உடைந்து விம்மல் பொருமலாகி, வெடித்து, அழுகையாகிச் சிதறி-

எனக்கு அப்பாதான் வேணும்.




எப்போது
எனக்கும் என் தாய்க்கும்
என் சகோதரிக்கும்
உன் ஆதிக்கத்திலிருந்து விடுதலை ?
எத்தனை தடவைகள்
என்னுடன் என் தலையணை அழுதிருக்கும்.
இருட்டில் நான் விடுகிற
ஒவ்வொரு துளிக் கண்ணீரும்
உன்னை நோக்கி
என்னால் விடப்படுகின்ற சாபங்களாகவே
இருக்கும்.

உனக்குத் தெரியுமா?
என் இதயத்தில்
எத்தனை கீறல்கள் இருக்கின்றன என்று?
நானும் ஒரு சராசரிப் பெண் என்பதை
எப்போதாயினும் நீ உணர்ந்ததுண்டா?
உன் வரண்டு போன கௌரவத்திற்காய்
என்னையல்லவா நீ
கொன்று கொண்டிருக்கிறாய்.
என்னைப் போன்றவர்கள்
எவ்வளவு இன்பமாய்
இன்னும் வாழ்ந்து கொண்டிருக்க,
பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடும்
அபலையாகவே நான் இன்னும்...

உன்னுள் சிறிதளவேனும்
மனிதம் என்ற ஒன்றுள்ளதா?
அது இருந்திருந்தால்
இப்போது நான்
இக்கவிதையை எழுதியிருக்க மாட்டேனே.
என் மீது
சிறிதளவேனும் அன்பைக்காட்டாத
ஒரு காட்டு மிருகம் போலவே
இன்றுவரை நீ வாழ்ந்து கழித்தாய்.
உன் ஆதிக்கம் என்பது
என்னை -
என் நாவை-
அடக்கி ஆள்கின்றவரை மட்டுமே.

பெண்ணியா


www.tamilarangam.net





# புதியதோர் மாயை செய்வோம்!

என். ஆத்மா




ஆனந்தன் கவிதைகள்
வெளியீடு
*மட்டக்களப்பு வாசகர் வட்டம்*

இக்குறிப்புகளை எழுத ஆரம்பிக்கும் கடைசி நிமிடம் வரை இத்தொகுப்பு பற்றிய விமர்சனமொன்று அவசியமில்லையென்றே நான் கருதியிருந்தேன். 80களின் ஆரம்பத்திலிருந்து 90களின் நடுப்பகுதி வரையான இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ள காலப்பகுதிக்கு முன்னமேயே இவற்றிலுறைந்துள்ள அநேக மான கருத்தியல்களும் அவற்றை வெளிப்படுத்தக் கையாளப்பட்டுள்ள கவிதை மாதிரிகளும் ஏறத்தாழ காலாவதியாகிப் போய் விட்டிருக்கின்றன என்று நான் கருதியமையே அதற்கான காரணம். ஆனால் இத்தொகுப்பிலிடம் பெற்றுள்ள பதிப்புரையும் முன்னுரையும் அத்தகைய என்னுடைய எண்ணத்தை அறவே இல்லாமல் செய்து விட்டன. கவிஞர் ஆனந்தன் பற்றியும், அவருடைய கவிதையாளுமை பற்றியும் இவை தோற்றுவிக்கின்ற மாயைகள், அவருடைய கவிதைகள் பற்றிய மதிப்பீடொன்று தவிர்க்கக் கூடிய ஒன்றல்ல என்ற உணர்வை ஏற்படுத்தி நிற்கின்றன.

கவிதை என்றால் என்ன? எல்லா நல்ல கவிஞர்களுக்கும் கவிதை ஒரு உணர்வு தான். காதல், கோபம், பசி போன்ற இன்னோரன்ன முதலான உணர்வுகளால் அருட்டப்படும் துணையான உணர்வு அது. அனைத்து முதலான உணர்வுகளும் கவிதையென்ற துணையான உணர்வினால் பிரதியீடு செய்யப்பட்டு விட்ட நிலையில் தம்மை அதிரச் செய்யும் நுண்மையான அதிர்வுகள் ஒவ்வொன்றையும் கூட கவிதைகளாக வெளிப்படுத்தக்கூடிய கவிஞர்களும் இருக்கின்றார்கள். முழுமையாகக் கவிதை மயப்பட்ட இத்தகைய நிலையிலுள்ள கவிஞர்களுக்கு எதிர்ப்படும் எந்த ஒன்றும் கவிதையைக் கிளர்த்தத் தக்கதாகவே இருக்கும். கவிதைக்கான பொருளைத் தெரிவு செய்வதில் புறக்காரணிகளின் ஆதிக்கத்துக்குட்படாதவர்கள் இவர்கள். தம்மைப்பற்றிய அபிப்பிராயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் பலங்களாலும் பலவீனங்களாலுமாகிய கலவையான தமது மனிதத்துவத்தை முழுமையாக வெளிக்கொணர்பவர்கள் இவர்கள். இன்னும் தெளிவாகச் சொன்னால் இவர்களது கவிதைகளூடு வெளித்தெரியக் கூடியது இவர்களுடைய ஆத்மாவினது நிஜத்தோற்றமாகவே இருக்கும். ஆனந்தன் இத்தகைய ஒருவரல்ல. கவிதையை பிற முதலான உணர்வுகளால் தூண்டப்படும் ஒரு துணையான உணர்வாகக் காண்பவரே அவர். அவரது கவிதைப் பொருளுக்கான தெரிவில் பல்வேறு புறக்காரணிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவற்றின் வரையறைகளுக்குள் நின்று குறிப்பிட்ட சில விடயங்கள் பற்றி மட்டுமே அவருடைய கவிதைகள் பேசுகின்றன. இதனால் அவருடைய ஆத்மாவின் ஒரு சிறு பகுதியை மட்டுமே நாம் காணக் கிடைக்கிறது. ஈழத்து நவீன தமிழ் கவிஞர்களில் கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த சண்முகம் சிவலிங்கம் போன்ற அற்புதமான நவீன கவிஞர்கள் அறுபதுகளிலேயே இந்த வரையறைகளை உடைத்துச் சென்று உச்சங்களைத் தொட்டிருந்தும் வளம் மிக்க இப் பிரதேச இலக்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவரும் நவீனங்களை மிக விரைவாகவே உள்வாங்கக் கூடிய வருமான ஆனந்தன் இந்த எல்லைகளுக்குள்ளேயே தன்னைக் குறுக்கிக் கொணடிருப்பதானது மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதோடு அவரை மிகவும் ஆரம்ப நிலையிலுள்ள ஒரு கவிஞராகவும் இனங்காட்டுகிறது.

ஆனநதனது கவிதைப் பொருளுக்கான தெரிவில் ஆதிக்கம் செலுத்தியிருக்கும் முக்கியமான காரணி கவிதை பற்றியதும் கவிஞன் பற்றியதுமான அவரது எண்ணக்கரு (Concept). கவிதையை சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் கவிஞனை சமூகப்பொறுப்பு மிக்க ஒருவனாகவும் கருதும் இவரது நோக்கு இத்தொகுப்பிலிடம் பெற்றுள்ள *'உங்கள் கவிஞன் பிறந்துள்ளான்'* என்ற கவிதையூடு வெளிப்படுகிறது. இது ஆனந்தனுடைய கருத்து மாத்திரமல்ல, கால்காலமாகப் பலருக்கும் கவிஞன் ஒரு இலட்சிய (Ideal)ப் பாத்திரமாகவே விளங்கி வந்திருக்கிறான். அவன் இனவாதியாக இருந்தாலும் சமத்துவத்தைப்பற்றி எழுத வேண்டும். குழப்ப நிலையிலிருந்தாலும் தெளிவுகள் பற்றி எழுத வேண்டும். சாத்தியமற்றவையாயினும் சொல்பவை உயர்ந்த கருத்துக்களாக இருக்க வேண்டும். ஏனெனில், கவிதை சமூக மாற்றத்தை விளைவிக்கும் என்பது இவர்களது நம்பிக்கை. எனவே இத்தகைய போலியான சமூகப் பொறுப்புடன் ஆத்மார்த்தத்திற்கெதிராக பொய்மைகளாலும், வரட்டு வாதங்களாலும் நிரம்பிய ஒரு கலவையாக கவிதையைத் தொடர்ந்தும் ஒரு குறுகிய எல்லையுள் வைத்திருப்பதே இவர்களது விருப்பமாக இருக்கிறது. ஆனந்தன் இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தாரோ என்னவோ அவரது தொகுப்பில் இடம் பெற்றுள்ள அநேகமான கவிதைகள் சமூகத்தின் பால் அவருக்கிருந்த அக்கறையையும், ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவனவாகவே உள்ளன. *'கள்ளத் தராசுகளே கவனம்', 'என்ன செய்வான்', 'பரமராச்சியம்'* ஆகிய கவிதைகள் இந்த வகையில் முக்கியமானவை.

ஆனந்தனது கவிதைப் பொருளுக்கான தெரிவில் ஆதிக்கம் செலுத்தும் மற்றுமொரு முக்கியமான காரணி உப்புச்சப்பற்று அரைத்ததையே ஓய்வொழிச்சலின்றி இன்றுவரை திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருக்கும் பழைய மரபுக் கவிதைக்காரர் சிலரிடமிருந்து அவர் பெற்றிருக்கும் முற்கற்பிதம். சமயம், இயற்கை, காதல் என்று கவிதைக்கான விடயங்களாக ஏற்கெனவே அவர்கள் வரையறுத்து வைத்திருக்கும் சிலவற்றில் அவர்களைப் போலவே ஆனந்தனும் கவிதை பண்ணியிருப்பதை அவரது தொகுப்பில் ஆங்காங்கே காண முடிகிறது. *'பலி ஆடு', 'நாளை நீ ஒரு விஞ்ஞானி', 'ஏணியும் தோணியும்'*, ஆகிய கவிதைகள் கவிதை சரிக்கட்டும் ஆனந்தனை வெளிக் கொணர்கின்றன. *'நாளை நீ ஒரு விஞ்ஞானி'* என்ற கவிதை ஏறாவூரைச் சேர்ந்த புரட்சிக்கமால் என்பவரின் *'நாளை வருவான் ஒரு மனிதன்'* கவிதையைவேறு ஞாபகப்படுத்துகிறது. இத்தகைய கவிதைகளையும் கவிஞர்களையும் தனது பிந்திய நாட்களிலே கடுமையாக விமர்சித்தவர் ஆனந்தன். அவர்களைக் கிண்டலடிக்கும் ஆனந்தனின் குரலை இத்தொகுப்பிலுள்ள *'கவிதை வாங்கலியோ கவிதை', 'சரஸ்வதி வந்தாள் சங்கடம் தந்தாள்'* ஆகிய கவிதைகளிலே நாம் கேட்க முடியும். இது தான் அவரது தொகுப்பில் காணப்படும் பாரிய முரண்.

கவிதையை ஒரு துணையான உணர்வாகக் கொள்ளும் கவிஞரான ஆனந்தன் கவிதைப் பொருளைத் தெரிவுசெய்வதில் தன்க்குத் தானே வகுத்துக் கொண்ட எல்லைக் கோடுகள் எவ்வாறு ஒரு. குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் அவரது கவிதைப் ப்ரப்பெல்லையை வீசாலித்துச் செல்ல விடாமல் அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கின்றன என்பதையும், கவிதையின் உச்சங்களைச் சென்றடைய விடாமல் அவரை வீணாக்கியிருக்கின்றன என்பதையும் விளக்குவதற்காகவே அவரது கவிதைப்பொருள் தொடர்பான மேற்குறித்த விபரிப்புகள் மேற்கொள்ளபபட்டனவே தவிர, ஆனந்தன் நவீன பிரச்சினைகள் பற்றியெல்லாம் அவசியம் எழுதித் தானாக வேண்டுமென்றோ அவரது ஆத்மாவை முழுமையாக நம் முன் திறந்து காட்டியே தீரவேண்டுமென்றோ நிறுவுவது அவற்றின் நோக்கமல்ல. தன்னை அதிர்த்துவனவற்றிலிருந்தோ அதிர்த்தாதனவற்றிலிருந்தோ அல்லது வேறெவற்றிலுமிருந்தோ தனக்குரிய கவிதைப் பொருளைத் தெரிவு செய்வதில் ஒரு கவிஞன் முறறிலும் சுதந்திரமானவன். அது தொடர்பில் கேள்வியெழுப்பும் உரிமை ஒருவருக்கும் கிடையாது. குறைந்தபட்சம் ஒரு கவிதைப்பொருள் கவிஞன் தரப்பு நியாயத்தை மாத்திரமாவது கொண்டிருக்கும். உணர்திறன் குறைவான ஒரு சில விமர்சகர்களைத் தவிர கவிஞனின் கவிதையுலகுள் நுழைந்து நுணுகிப் பார்க்கும் கூர்மை மிக்க எவருக்கும் அதைப்புரிந்து கொள்வதென்பது கடினமான ஒன்றல்ல.

கவிதைப்பொருள் உண்மையில் கவிதையின் இரண்டாம் பட்சமான ஒன்று தான். கவிதையின் முதன்மையான அம்சம் அதன் வெளிப்பாட்டு முறையேயாகும் தன்னுட் கருக்கொண்ட கவிதைப் பொருளை வெளிப்படுத்தும் ஆற்றலில் தான் ஒரு கவிஞனின் ஆளுமையும் தனித்துவ அடையாளங்களும் வெளிப்படுகின்றன. ஆனந்தனும், நவீனங்களை வரவேற்றல், சமூக அக்கறை, அநீதிகளுக்கெதிராகப் போராடுதல், மனிதநேயம் போன்ற தனது உயர்ந்த கருத்துக்களை கவிதை வடிவில் வெளிப்படுத்துகிற ஒருவர் தான். கவிதையின் முதன்மையான அம்சம் உயர்ந்த கருத்துக்கள் தான் என நாம் கருதுவோமேயானால் ஆனந்தனோடு, தமிழில் எதுகை மோனைகளுக்கும் சந்த அசைவுகளுக்குமேற்ப இடைவெளி நிரப்பிக் கொண்டிருக்கும் பலரையும் நாம் கவிஞர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டியேற்படும். எனவே, எந்த ஒரு கவிதைப் பொருளாயினும் சரி அதனது வெளிப்பாட்டுத் திறனாம்சத்திற்கேற்பவே அது தனது கவித்துவ வீச்செல்லையைப் பதிவு செய்கிறதென்ற அடிப்படையில், ஆனந்தனது கவிதைகளுக்குப் பொருள்களாகக் கொள்ளப் பட்டுள்ள விடயங்கள் கவிதையாக் கப்படுவதில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளனவென்பதைக் கணிப்பிடுவதன் மூலமே, ஆனந்தனுடைய தனித்துவத்தையும், கவித்துவ ஆளுமையையும் நாம் மதிப்பீடு செய்ய முடியும்.

ஆனந்தனது மொத்தத் தொகுதியி லும் காணப்படும் 19 கவிதைகளை யும் நாம் எடுத்து நோக்கும் போது அவர், தான் எடுத்துக் கொண்ட கவிதைப் பொருட்களை வெளிப் படுத்துவதற்கு எல்லாமாக எட்டு வகையா்ன கவிதை மாதிரி (Models) களைப் பயன்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால் எந்த மாதிரியும் ஆனந்தனுடையதல்ல. அவரது தனித்துவங்களென்று சொல்லத்தக்க எவற்றையும் கூட நாம் அவற்றில் காண முடியவில்லை. ஒரு ஆளுமை மிக்க இயல்பாகக் கவிதையுணர்வு பெருக்கெடுக்கிற ஒரு கவிஞனுக்கு தனித்துவமான ஒரு கவிதை மாதிரி தானாகவே அவனிடம் வடிவமைந்து கொள்ளும். அதனூடே அவனது உணர்திறனின் கூர்மையும் படைப்பாக்க நுட்பங்களும் இணைந்து கவிதையை உச்சபட்சமான தொன்றாக மாற்றும். ஆனால் ஆனந்தனோ தனது கவிதைப் பொருட்களுக்கான மாதிரிகளை வேறு கவிஞர்களிடமிருந்தும், ஜனரஞ்சக மயப்பட்ட பாணிகளிலிருந்தும் இரவல் வாங்குகிறார். இவ்விதம் கவிதை மாதிரிகளை இரவல் பெறும் கவிஞாகள் தமிழில் நிறையவே இருக்கிறார்கள். ஆனால் தமது ஆளுமை காரணமாக பிறரின் மாதிரிகளிலும் தமது தனித்துவ அடையாளங்களை தடம் பதித்துச் செல்பவர்களாக அவர்களுள் பலரை நாம் காண முடிகிறது. செழியன் அத்தகைய ஒருவர் தான். சேரனின் கவிதை மாதிரியைப் பயன்படுத்தி எழுதும் செழியனின் கவிதைகளில் நாம் செழியனையும் காண முடியும். அத்தகைய நிலையில் கூட ஆனந்தன் இல்லை.

இத்தொகுப்பில் காணப்படும் *'கள்ளத். தராசுகளே கவனம்', காகிதப் புலம்பல்'* ஆகிய கவிதைகள் தமிழகத்து வானம்பாடிகளின் கவிதை மரபைப் பின்பற்றி வெளிப்படுகின்றன. இரண்டிரண்டு வரிகளாக மோனையைச் சார்ந்தெழுதும் அவர்களது கவிதைப் போக்கு இக்கவிதைகளில் உறைந்திருப்பது துல்லியமாகப் புலப்படுகிறது.

*'பலி ஆடு', 'பரமராச்சியம்', 'நாளை நீ ஒரு விஞ்ஞானி'* கவிதைகள் ஈழத்தையும், தமிழகத்தையும் சேர்ந்த பூஞ்ஞனம் பிடித்த சில புலவர்களினதும் அளவெடுத்துக் கவிதை சரிக்கட்டும் சில புராதனர்களினதும் கவிதை மாதிரி. *'தனபாரம்', 'வண்ணக்கன்'*, ஆகியன முன்னர் 'சிந்தாமணி' போன்ற பத்திரிகைகளில 'மணிக்கவிதை' என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருந்த ஒரு வகைத் துணுக்குகளை ஒத்தவை. இவ்விதம் ஊசிப்போனதும் உயிர்த்துடிப்பற்றதுமான மாதிரிகளில் தமது உணர்வுகளையும், கருத்துக்களையும் ஏற்றி, அதுவும் எழுதித்தேய்ந்து மரத்த வார்த்தைகளில் 'கவிதைகளென்று எழுதியிருக்கிறார் ஆனந்தன். சில நேரங்களில் பொன் மொழிகளும் எழுதுகிறார். *'பயன்'* என்ற தலைப்பில் எழுதப்பட்டிருப்பது அத்தகைய ஒன்றுதான்.

இவ்வாறு ஒரு கவிஞனுக்குரிய சராசரியான இயல்புகளில் கூட போதியளவு வளர்ச்சி பெறாதிருக்கும் ஆனந்தன் பற்றியும் அவரது கவிதைகள் பற்றிய நுஃமான் எழுதும் முன்னுரை விசித்திரமான ஒன்றாக உளளது. ஆனந்தன் மட்டக்களப்பு பிரதேச இலக்கியப் பரப்புக்கு அவ்வப்போது புத்துணர்ச்சியையும், ஈரலிப்பையும் வழங்கிக்கொண்டிருந்த ஒருவர்தான் நவீன இலக்கிய முயற்சிகள் தொடர்பாக ஈடுபாட்டோடும் இயங்கு திறனோடும் உழைத்துக்கொண்டிருந்த ஒருவர்தான். பழைமை வாதங்களுக்கும், போலித்தனங்களுக்கும் எதிரான தீவிர இலக்கிய மேடை விமர்சகர்தான். அவருடைய கடைசி மூன்றுவருடங்களில் அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. மனிதத்துவத்தின் ஒளி சுடரும் ஒரு மிகச் சிறந்த மனிதராகவே அவரை நானும் கண்டேன். அவருடைய நட்பு சகல விதமான குறுகிய வகுப்பு வாதங்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்று. அவருடன் பகிர்ந்து கொண்ட இலக்கிய விடயங்கள் தொடர்பாக மீட்டும் போது அவரது தகவலறிவும், ஆளுமையும் இன்று கூட பிரமிப் பைத் தருகின்றன. ஆனால் அதற்காக இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு ஆளுக்காள் ஆனந்தனைக் கவிதையாளுமை மிக்க ஒருவ ரென்று பொய் வாக்கு மூலம் கொடுத் துக் கொண்டிருக்க முடியாது.

ஆனந்தன் ஆளுமை மிக்க ஒரு கவிஞரெனில் அவரது ஆளுமை அவரது கவிதைகளூடு வெளிப்பட்டிருக்க வேண்டும். அதற்கான எந்த விதமான தடயங்களையும் அவரது தொகுப்பில் என்னால் காண முடியவில்லை. அதை விடுத்து 'ஆனந்தனின் ஆளுமையின் ஒரு சிறு துளியைத்தான்

→

www.tamilarangam.net



இத்தொகுப்பில் நாம் காண்கிறோம்' என்றும் 'அவனால் எழுதப்படாத் கவிதைகள் நம் நெஞ்சம் நிறைய உள்ளன'வென்றும் 'தனது மிகுதிக் கவிதைகளை நமது கனவுகளில் வந்து அவன் பாடுவான்' என்றும் நுஃமான் எழுதுவது சுத்த பம்மாத்துத்தனமாகவே எனக்குப் படுகின்றன. இத்தகைய சோடனை எழுத்துக்களுக்கு தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு நீண்ட கால வரலாறுண்டு. முன்னுரையை எழுது பவர் பற்றிய சில முற்கற்பிதங்க ளோடும், பிரமிப்புகளோடும் இவற் றைப் படிக்கும் நாம் 'சா என்ன மாதிரி யான ஒரு முன்னுரை. எவ்வளவு அற்புதமான வரிகள்' என்று காலகால மாக இத்தகைய கவர்ச்சி வார்த்தைகளில் மயங்கி வந்திருக்கிறோம். படைப்பின் குறைகளை நேரடியாக விமர்சிக்காமல் முகத்துதிபாடும் இம்முன்னுரையா ளர்கள் 'அவர் இப்படி வ்ருவார்', 'இவர் அப்படி வருவார்' என ஆரூடம் கூறும் சோதிடர்களாகவும் மாறி படைப்பாளி யைத் தொடர்ந்தும் ஒரு தேக்க நிலையில் வைத்திருப்பதற்கு காரணமாக இருந்து வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். நவீன இலக்கியங்களில் நல்ல பரிச்சயமும் தமிழ்க் கவிதைப் பரப்பில் நீண்ட கால அனுபவமுமுள்ள நுஃமான் தனது கவிதைகள் பற்றி நெற்றியி லடித்தமாதிரியான ஒரு முன்னுரையை எழுதித்தருவாரென்றே இறுதி வரை ஆனந்தன் எண்ணியிருந்திருப்பார். 'ஆளுமை மிக்க தனது மிகுதிக்கவிதை களை நமது கனவுகளில் வந்து ஆனந்தன் பாடுவான்' எனத் தான் பரிதாபத்துக்குரியவனாக்கப் படுவதை அவர் ஒரு போதும் விரும்பியிருக்க மாட்டார். இம்மாதிரியான ஒளி வட்டங்களை விரும்புபவருமல்ல அவர்.

முன்னுரைக்கும் ஒரு .படி மேலே போயிருக்கிறது பதிப்புரை. இத்தொ குப்பில் இடம்பெறாமல் தொலைந்து போய்விட்ட ஆனந்தனது ஒரே யொரு கவிதைதான் அவரது கவிதைகளிலேயே மிகச் சிறந்த கவிதையாக அவரால் கருதப்பட்டதாம் என்கிறது அது. இத்தகைய பூச்சுற்றல்களுக்கெல்லாம் அப்பால் தொகுப்பில் தென்படும் ஒரு முக்கியமான கவிதை 'என்னா இவங்க இனப்பத்து' உள்ளடக்க ரீதியாகவும் வெளிப்பாட்டு ரீதியாகவும், சிறிது மாறுதலைக் காண்பிக்கும் இக்கவிதை அவரது டயறியிலிருந்து பெறப்பட்டி ருக்கிறது. இதைத்தவிர 'விடிக', 'சூரியனைத் துரத்து', 'கண்ணகியே தாயே' ஆகிய கவிதைகள் சுமார் ரகத்தைச் சேர்ந்தவையாகக் கொள் ளப்படக் கூடியவை.

ஆனந்தனின் சில கவிதைகள் கிழக்கு மாகாணப் பேச்சு வழக்கைத் தமது மொழியாகக் கொண்டிருக்கின்றன. ஏனைய கவிதைகளின் மொழியும் சீரான எளிய மொழியே தவிர சிக்கலான செம்மொழியல்ல. 'என்ன செய்வான்' கவிதை புராதன கிழக்கு மாகாணத்தைக் காட்சிப்படுத்துகிறது. 'கவிதை வாங்கலியோ கவிதை', 'சரஸ்வதி வந்தாள் சங்கடம் தந்தாள்' ஆகிய கவிதைகள் இரண்டும் சுதந்திரமாகப் பெருக் கெடுத்துப் பிரவாகித்துச் செல் கின்றன. சில கவிதைகளில் எதுகை மோனைகளுக்காக எழுதும் அர்த்த மற்ற வரிகளும் காணப்படுகின்றன. நுஃமான் தனது முன்னுரையில் குறிப்பிட்டுச் சொல்லும் ஆனந்தனின் கவிதைகளில் ஒன்றான 'அன்பினாலே இன்பம் காண்போம்' கவிதை, தொகுப்பில் காணப்படவில்லை. கணனியில் இவ்வளவு மோசமாகவும் ஒரு தொகுப்பைப் பதிப்பிக்க முடியுமென்று நிரூபித்திருக்கிறார்கள்.

வேறென்ன சொல்வது?

ஆனந்தனது கவிதையாளுமை பற்றிய சகல விதமான மாயைகளையும் இத்தொகுப்பு தகர்க்கிறதென்று சொல்வோமா?

# பாப்பா பாரதி: சின்னக்குருவி சுகம் எப்படி? வண்ணத்துப் பூச்சி, வா இப்படி!

''ஹலோ யார் பேசறது?, உங்க பேரென்ன?''

''நிஷான்''

''உங்க அப்பா பேரு?''

''தன்ராஜ்''

''நிஷான் உங்களுக்கு எத்தனை வயது?''

''அஞ்சு''

''சரி, நிஷான், நீங்க ஸ்கூலுக்குப் போறனீங்களா?

''இல்லை, மொண்டசொறிக்குப் போறனான்.''

''நிஷான் படமெல்லாம் பார்ப்பீங்கள் தானே?''

''ஓ...''

''நிஷானுக்காக இந்தப் பாடல் ''என்று கூறியபடி அழுந்தப் பூசப்பட்ட லிப்டிஸ்க் உதடுகளை ஓரமாய் இழுத்து ஒரு அசட்டச் சிரிப்புச் சிரித்தார் அந்தப் பெண் அறிவிப்பாளர்.

தொலைக் கர்ட்சித் திரையில் நிஷா னின் வயதையொத்த சிறுவர்கள் புடைசூழ அரவிந்தசாமியும் மனிஷா கொய்ராலாவும் சாமக் கோழி கூவையிலே , ஊரு சனம் தூங்கையிலே குச்சுக் குச்சு ராக்கம்மாவுக்குப் பொண்ணு தேட ஆரம்பித்தார்கள்.

இன்னொரு நிகழ்ச்சி.

''நீங்க எப்போதுமே இந்தக் கடையிலே தான் நகை வாங்கு வீங்களா''

''ஆமாம்''

''என்ன காரணம் நிறைய டிசைன்ஸ் இருக்கிறதாலயா?''

''ஆமாம்''

''நீங்க சினிமா பார்ப்பீங்களா?''

''ஆமாம்''

உங்களுக்குப் பிடித்தமான பாடல் ஒன்று சொல்லுங்கள்''

''அருணாச்சலம் படத்திலை 'அதாண்டா இதாண்டா' என்ற பாடல் 2ம் கிளாஸ் படிக்கிற என் யைனுக்குப்பிடிக்குங்க''

''சரி, உங்க மகனுக்காக அந்தப் பாடல்...''

சிறுவர் துஷ்பிரயோகம் , சிறுவர் துஷ்பிரயோகம் என்று வாய்கிழியக் கத்துகிறோமே, இந்த அறிவிப்பாள ருக்கும், நிகழ்ச்சித் தயாரிப்பாளருக் கும்,இந்தத் தாயாருக்கும் எதிராக சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச் சாட்டின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கருது கிறீர்கள்?

உண்மையிலேயே எங்கள் சிறுவர் களைப் பாதுகாப்பதற்கான போதிய சட்ட வரன்முறைகளும் , சமூக உணர்வும் எங்களிடம் இல்லாதி ருப்பது எங்களை உறுத்தவில் லையா? தமிழில் சிறுவர் இலக்கியம் என்பது குறித்தோ அவர்களுக்கான பாடல், கதைகள், திரைப்படங்கள் என்பன குறித்தோ நாம் அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை. இந்தச் சூழலில் தான் ''பாப்பா பாரதி '' என்ற ஒளிப் பேழையை அவுஸ்ரேலியாவிலிருக்கும் *'பாரதி பள்ளி'* வெளியிட்டிருக்கிறது.

சிறுவர்களுக்கான பாடல்கள், கதைகள். நாடகங்கள் என்பவற்றை அது கொண்டிருக்கின்றது.''சிறுவர் களை மகிழ்வூட்டுவதும் அவர் களுக்கு தமிழ் மொழியில் ஆர்வத்தை வளர்ப்பதுவுமே', தங்களது நோக்கம் என்கிறார் இவ் ஒளிப்பேழைத் தயாரிப்பில் ஈடுபட்ட பாரதி பள்ளியின் அதிபர் மாவை நித்தியானந்தன் அவர்கள்

இதுவரை அவர்கள் இரண்டு ஒளிப்பேழைகளை வெளியிட்டி ருக்கிறார்கள். தொழில்நுட்ப ரீதியாக முதலாவதில் இருந்த குறைபாடுகளைத் தவிர்த்துச் சிறப்பாக வெளிவந்துள்ளது. குழந்தைகளின் மனதை அள்ளிச் செல்லும் விதத்தில் அக்கறையுடன் தயாரிக்கப்பட்டுள்ள இப்பேழைக ளைப் பார்க்கும் குழந்தைகள் அவற்றில் வரும் பாடல்களைத் திருப்பித் திருப்பி முணுமுணுப்ப தைக் காணலாம். இதன் தயாரிப் பாளர் நித்தியானந்தன் அவர்கள் தனது நோக்கத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்றே சொல்ல வேண்டும். 70களின் ஆரம்பத்தில் இனிச் சரி வராது'என்ற நாடகத்தை எழுதித் தயாரித்த மாவை




நித்தியானந்தன் இது வரை பத்துக்கு மேற்பட்ட நாடகங்களை மேடை யேற்றியுள்ளார். இதுதவிர அவர் ஒரு சிறுகதை எழுத்தாளரும் கூட.அவர் இங்கு வருகை தந்திருந்த போது அவருடன் நடாத்திய உரையாடலைக் கீழே தருகிறோம்:

''இந்திய வானொலி நாடகமே நாடகத் துறையில் எனக்கு ஈடு பாட்டைக் கொடுத்தது. திருச்சி நிலையத்தில் ஞாயிறு பன்னிரண்டு மணிக்கு நாடகங்களை ஒளிபரப்பு வார்கள் அந்த வானொலி நாடகங் களின் தன்மை வேறாயிருப்பினும் கூட அவை என்னைப் பாதித்தன என்று சொல்லலாம். கூடவே கட்டுப் பெத்தைச் சூழலும் எனக்கு வ்ாய்ப பாக இருந்தது. 'இனிச் சரி வராரது' என்ற எனது முதல். நாடகம் மேடையேறியது. பிறகு, ஐயா எலக்ஷன் கேட்கிறார்' என்ற நாடகத்தை மேடையேற்றினேன் . இனிச் சரி வராது சாதிப்பிரச்சினை பற்றிய நாடகம். பிறகு 'சோஷலி ஷம் வாழ்க' என்றொரு நாடகம் செய்தேன் அது சிறிமாவின் ஆட்சிக்காலத்தில் சோஷலிஷத்தின் பெயரால்நடாத்தப்பட்ட அக்கிரமங் களை அம்பலப்படுத்தியது்.எண்பது களில் திருவிழா என்றொரு நாடகம் செய்தேன் . அது பரந்தளவிலான வரவேற்பைப் பெற்றது.. மக்களு டையை பிரச்சினைகளைப் பற்றிய அக்கறையற்று வெறும் வாக்கு வேட்டைக்காக தேர்தல் காலங்களில் எப்படியெல்லாம் வாக்குறுதிகளை அள்ளி வழங்கிறார்கள் என்பதை -பாராளுமன்ற அரசியலை- அம்பலப்படுத்துவதே எனது நோக்கமாக இருந்தது. அது வெளிட் படையாகவே அன்றைய மாவட்ட சபை அரசியலை எள்ளி நகை யாடியது. ஆனால் இன்றுள்ள சூழலில் அதற்குப் பிறகு வந்த அரசியலை எம்மால் விமர்சிக்க முடியாது தானே? அந்நாடகம் யாழ்ப்பாணத்தக்கு வெளியேயும் பல கிராமங்களில் மேடையேற்றப் பட்டது. வெறுமனே மகிழ்வூட்ட லுக்கப்பால் அரசியல் அறிவூட்டலி லும் அந்நாடகம் பங்களித்தது. நாடக மேடையேற்றத்தின் பின் கலந்துரையாடலும் நடைபெற்றது. எண்பதுகளில் அவுஸ்ரேலியாவுக்கு நான் புலம் பெயர்ந்தேன். என்னு டைய அவதானிப்பில், அங்குள்ள தமிழர்களின் அடுத்த பரம்பரையி னர் தமிழ் பேசுவார்களா என்ற சந்தேகமே எனக்கு எழுந்தது. பெற்றோர் தமிழர்களாக இருப்பார் கள். ஆனால் பிள்ளைகளால் தமிழ் பேச முடியாதிருக்கும். தமிழ் கலாசாரம் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாது. அதிலும் முக்கியமான பிரச்சினை தமிழ் அடையாளம். அவர்கள் எதனுடன் தங்களை அடையாளப்படுத்துவது என்று தெரியாமல் வெறுமையில் தகித்துக் கொண்டிருந்தார்கள். முக்கியமாக எனது பிள்ளையிடமே நான இதனை நான் அவதானித்தேன். ஏற்கெனவே இருந்த பாடசாலைகளின் கவனிப் புக்கு இவை உள்ளாகவில்லை. இப்பிள்ளைகள் தமது மொழியை/ தமது பாரம்பரியங்களை அறியாமலிருப்பது எதிர்காலத்தில் ஒரு தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்தும் நான் நினைத்தேன். இது பற்றி நடைபெற்ற கலந்துரையாடல் ஒரு பாடசாலையை உருபாக்குவதை நோக்கி என்னைத்தள்ளியது. அதன் விளைவே பாரதி பள்ளி. 15பிள்ளை களுடன் ஆரம்பித்த இப்பாடசாலை இன்று150 பிள்ளைகளுடன் இயங்குகிறது. தமிழே வேண்டாம் என்றிருந்த பெற்றோர் இன்று இப்பாடசாலையில் தமது பிள்ளை களைச் சேர்க்க முயல்கின்றனர். எங்கள் கற்பித்தல் முறையும் முன்மாதிரியாக இருப்பதனால் அங்குள்ள ஏனைய சில பாடசாலை களும் இதனைப் பின் பற்ற ஆரம்பித்து விட்டன. தசிழ் மொழி கற்பித்தலே எங்களது பிரதான நோக்கமாக இருப்பினும்., கணிதத் தையும், ஆங்கிலத்தையும் கூடக் கற்பிக்கிறோம். தமிழ் கற்பித்தல் முறையில் கூட நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம். உதாரண மாக மொழி விளையாட்டை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது ஜப்பானில் பிரபல்யமான மொழி கற்பித்தல் முறைமையாக இருக்கி றது. இதேபோல சிறுவர் பாடல்க ளும், கதைகளும், நாடகங்களும் ஒளிப்பேழையாக வரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தோம். .அதன் பயனாகத் தான் இந்த ஒளிப்பேழை முயற்சியில் இறங்கினோம். நாம் இதில் ஈடுபடும் போது இது இவ்வளது வெற்றியளிக்கும் என்றோ, இவ்வளவு வரவேற்புக் கிடைக்கும் என்றோ எதிர்பார்க்க வில்லை. கனடாவிலும் இன்னும்பல ஐரோப்பிய நாடுகளிலும் இவ் ஒளிப்பேழையை நாம் அறிமுகம் செய்திருந்தோம். இன்று அங்குள்ள ஒவ்வொரு சிறுவர் / சிறுமியரது வாயிலிருந்தும் 'சின்னக்குருவி சுகம் எப்படி? வண்ணத்துப் பூச்சி வா இப்படி' என்று பாடல் வரும் போது நான் சந்தோசமடைகிறேன்.

சீநுகரன்



பாரதி பள்ளி
BHARATHI ACADEMY
P.O. Box 1357, Clayton South,
Victoria 3169, Australia

Direction : Mavai Nithianandan, C.S. Yoganantham
Videography : Mayoor Video Vision
Music : Swara Mania

www.tamilarangam.net



# கோணேஸ்வரிகள்

## சான்றோர் கண்களுக்கு இனவாதமே!

நட்சத்திரன் செவ்விந்தியன் சரிநிகர் இதழ் 129ல் 'பெண்ணிலைவாதத்தில் தெளிதல் வேண்டும்' என்ற தலைப்பில் கோணேஸ்வரிகள் என்ற கவிதை பற்றி நான் எழுதிய கருத்துக்களுக்கு மறுப்புத்தெரிவித்துள்ளார். தெளிவு யாருக்கு வேண்டும்? நான் எழுதாததை, எழுதியவற்றின் தொனிப் பொருளாக சிலவற்றைத் தானே கற்பனைபண்ணி குழம்பிப் போயுள்ளார் நட்சத்திரன் செவ்விந்தியன் அவர்கள்.

முதலாவதாக நான் பெண்ணிலைவாதி என்ற ரீதியில் எனது கருத்துக்களை வெளியிடவில்லை. சமூக நல் உருவாக்கத்தில் அக்கறை கொண்ட ஒரு சமூகப் பிராணியாகவே என்னை இனங்காட்டியுள்ளேன். இரண்டாவதாக் ஆசிரியர் குழுவை ஏன் நான் அவர்கள் பத்திரிகை மூலம் தாக்க வேண்டும்? அவர்களை அறிந்து அவர்களுடன் பழகும் நான் என் நல்லெண்ணத்தை மிக சகஜமாக தோழமையுடன் கூறும் சிநேகித உறவிருக்கும் பொழுது ஏன் பத்திரிகை மூலம் தாக்க வேண்டும்?

இனவாதம் என்றால் என்ன? சிங்கள நாயே என்று கூறுவது இனவாதமல்ல என்று ஒரு வாதம் எழுவது விந்தையே. இப்பதம் இனவாதத்திற்கு ஒரு அருமையான உதாரணம். 1983ம் ஆண்டு கலவரத்தில் ஒரு தமிழ்க் குடும்பத்தின் நாயை ''தமிழ்நாய்'' என அழைத்து அந்த நாயை வெட்டினானாம் ஒரு சிங்கள இனவாதி. அதுவும் இனவாதம், இதுவும் இனவாதம்.

இனவாதம் எனறால் என்ன என்பது பற்றி மிகமிகத்தெளிவான விளக்கமிது. ஆவேசத்தில், ஆத்திரத்தில் கவிதா வசனமூலம் கூறுவது இனவாத அர்த்தத்திலிருந்து மீட்கப்பட வேண்டும் என்ற நியாயத்தை முன்வைப்பது வரவேற்கத்தக்க வாதமல்ல. கவிதையிலேயோ, வசனத்திலோ, செய்கையிலோ, இனவாதம், சான்றோர் கண்களுக்கு இனவாதமாகவே இருக்கும். இனவாதம் எழுவதற்குரிய காரண காரியத் தொடர்புகளை இனங்காணுவது, புரிந்து கொள்வது வேறு, அதை இனவாதம் என மறுப்பது வேறு.

புத்தரின் வழிவந்தவர்கள் என்று பாலியல் வல்லுறவில் ஈடுபடுவோரைக் கூறுவது புத்தருக்கு இழுக்கல்ல, புத்தரையும் வல்லுறவையும் இணைத்து சமன்படுத்துபவர்கள் கட்டாயமாக இழுக்குக்குரியவர்களே.

எனது மறுப்புக்கள் சிறுபிள்ளைத் தனமல்ல, எனது அறிவீனமுமல்ல. பண்பட்ட நெஞ்சங்களின் உள்ளக் குமுறல்கள். மானுடம் இவ்வளவு கீழ் நோக்கிச் செல்கிறதே என்ற துக்கம், அங்கலாய்ப்பு.

நட்சத்திரனுக்கு மிகவும் தெளிவு வேண்டும். யோனி, ஆண் உடம்பு, நிர்வாணம் போன்ற சொற்களில் எனக்கு யாதொரு வெறுப்பும் இல்லை. ஆணாலும், பெண்ணாலும் அவை பிரயோகிக்கப்படலாம்.

கற்பப்பை, முலை, தனம் போன்றவற்றோடு பிறந்த பெண்கள் இவற்றை வைத்திருப்பதால் (பெண்களில் பால்மை) தான், பெண், பெண்ணாக, கற்புப் பேணுபவளாக, ஆண் வன்முறையிலிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டியவள் என்று பெண்களுக்கு முதல் பாடமாக தாய்மாரினால் புகட்டப் படுகின்றது.

கம்பன், வாத்சாயனர், பட்டினத்தார் தொடங்கி கமலாதாஸ் வரையும் உபயோகித்த சொற்பிரயோகங்கள் தான் இவை. அவற்றைப் படித்தது முண்டு. இரசித்ததுமுண்டு. அருவருத்ததுமுண்டு. இரசிப்புக்கும், அருவருப்புக்கும் காரணம் சொற்குவியல்கள் அல்லது அவற்றின் பின் நிற்கும் கருத்துக்கள், கருத்தியல்கள், உணர்வுகள்.

''ஆபாச மொழி'' அவை என்று நான் அக்கவிதையை மறுக்கவில்லை. ஆபாசமொழி பெண் வயப்பட்டு விட்ட புதுமையை நான் விளங்கினேன் அல்ல என்பதும் அல்ல.

*'தமிழச்சிகளே வாருங்கள் உடைகளைக் கழற்றி உங்களை நிர்வாணப்படுத்திக்கொள்ளுங்கள், என் அம்மாவே நீயும்தான்.'*

இவ்வரிகள் அருவருப்பின் எல்லைக்கோடு.

வன்முறைப் பாலியல் உறவு, பலாத்காரம், ஆணாதிக்கம், உடல் வலிமை போன்றவற்றின் பரிமாணத்தில் நிகழ்பவை. அவற்றை நாம் கண்டித்து அதே வன்முறையோடு எதிர்த்து வாய் மொழி மூலமோ, கடித்தோ, அடித்தோ எமது எதிர்ப்பைத் தெரிவிக்கலாம்.

—> 19

## கவிதையைப் புரிந்து கொள்ளாத விமர்சகர்கள்!

கலாவின் 'கோணேஸ்வரிகள்' கவிதை மௌனத்திற்கு எதிராகவும், மரத்துப்போன உணர்வுகளுக்கு எதிராகவும் எழுதப்பட்டுள்ளது. அதில் அவர் வெற்றியே கண்டுள்ளார். ஆனால் ஆத்திரம் எதற்கு எதிராக எழ வேண்டுமோ அதை விடுத்து தவிர்த்து கலாவின் கவிதைக்கு எதிராக எழுந்துள்ளமைதான் கவலைக்கிடமானது.

ஈழயுத்தம் -3 தொடங்கியதில் இருந்து வட பகுதியிலும், அதற்கு முன்பே கிழக்கிலங்கையிலும் பல தமிழ்ப் பெண்கள் சிங்கள இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இது பற்றி கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம்,

''தமது உயிரையே கொடுத்து நாட்டிற்காகப்போராடும் எமது வீரர்கள் தமது விரக்தியை தாகத்தை தணித்துக்கொள்வதில் தவறில்லை'' என்று சிங்கள சிவில் சமூகத்தாலும் (Civil Society) ஆட்சியாளர்களாலும் கூறப்பட்டது.

அப்போதும், பல்வேறு கோணேஸ்வரிகளின் அலறல்களின்போதும் மௌனமாக இருந்த எமது NGO - Intelectuals கலாவின் கவிதைக்கு எதிராக கிளம்பியுள்ளது வேடிக்கையாகவும் ஆத்திரமாகவும் உள்ளது. உண்மையில் கலாவின் கோணேஸ்வரிகள் கவிதை ஆத்மாவின் கவிதைக்குப் பின் Provocationனும், Protestஉம் செய்யும் ஒரு அரசியல் கவிதை.

பெரும்பாலான விமர்சகர்கள் கவிதையை சரியாக புரிந்து கொள்ளாமை அவர்களது விமர்சனத்தில் தெரிகிறது.

எல்லா விமர்சனங்களுக்கும் சிகரம் வைத்தால் போல் செல்வி திருச்சந்திரனதும், சன்மார்க்காவினதும், பாத்திமா, சிரால் லக்திலக்க ஆகியோரின் விமர்சனங்கள் அமைகின்றன.

கலா தூஷண வார்த்தைகள் பாவிப்பதாகவும, கவிதை நாகரீகம் பேணப்படவில்லையென்றும், அதில் இனவாதம் இருப்பதாகவும், பெண்களுக்கு எதிரானதாகவும் கவிதை கண்டிக்கப்படுகிறது.

கவிதை அப்படி இருக்கும் பட்சத்தில் அது கண்டிக்கப்பட வேண்டியது உண்மையே. ஆனால் கலாவின் இக் கவிதை ஒரு எதிரிடை அர்த்தம் (Irony) கொண்டதாகவல்லவா எழுதப்பட்டது.

**உலகம் உறங்கும் நேரத்தில் உரக்கச் சொல்வதும் உறைக்கக் கூறுவதும் மிகைப்படுத்துதலும் கவிஞர்/ஞைகளின் சொத்து.**

கவிதை அருவருப்பு உணர்வை விட ஆத்திர உணர்வையே தருகிறது.

தமிழச்சி, சிங்கள சகோதரிகள் என்ற கவிதைவரிகள் செல்வி திருச்சந்திரன் கூறுவதுபோல் இனவாதத்தைக் குறிக்கவில்லை. மாறாக, அது இலங்கையில் தமிழ், சிங்கள மற்றும் பல்லின மக்கள் இருப்பதையே காட்டுகிறது.

மற்றும் ''புத்தரின் வழிவந்தவர்கள்'' என்று இன்று கூறப்படுவதிலும் ''காந்தியின் வழிவந்தவர்கள்'' என்று அன்று கூறப்பட்டதிலும் ஒரு சிலேடை (Irony) தான் உள்ளது. மற்றப்படி புத்தரோ, காந்தியோ தத்தமது புதல்வர்கள் செய்த, செய்யும் கொடூரங்களுக்கு கண்ணீர் வடித்திருப்பார்கள் என்பது உண்மையே.

''சிங்கள சகோதரிகளே! உங்கள் யோனிகளுக்கு இப்போது வேலையில்லை'' என்பது இனவாதமோ அல்லது பெண்களுக்கு எதிரானதோ அல்ல.

மாறாக சிங்கள சகோதரிகளே நீங்கள் இப்போதைக்கு தப்பிவிட்டீர்கள். ஆனால், அவர்களை கவனமாக இருக்கும்படி கலா எச்சரிக்கை செய்வது போல்தான் எனக்குத் தெரிகிறது. இதில் இராணுவத்தினரை/ ஆண்களை Potential - rapistட்டாகப்பார்க்கும் கலாவின் தீவிர -பெண்ணிலை வாதப்பார்வையைத்தான் என்னால் காணமுடிகிறது.

மற்றும், சன்மார்க்கா, கோணேஸ்வரிக்கு நடந்தது போல் இனியும் நடைபெறாது தடுக்கப்பட வேண்டும் என்கிறார். அது சரியானதே. ஆனால் அதன் முதற்படிதான் கலாவின் மௌனத்தை உடைக்கும் இக்கவிதை. அத்துடன் கவிதை கோணேஸ்வரியை இரண்டாவது தடவையாக பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்குவதாக கூறி, கோணேஸ்வரி மேலான பொலிஸ்காரர்களின் அட்டூழியத்தையும் கவிதையில் அதன் பிரதிபலிப்பையும் ஒன்றாக்கும்போது சகிக்க முடியாத குமட்டல்தான் ஏற்படுகிறது.

தவிர, பெண்ணின் உறுப்புக்களை பெயரிட்டுக்கூறுவது தூசணம் என்றால் கொழும்பில் பெண்ணிலைவாதம் பல மைல்களுக்கு அப்பால்தான் உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் ராதிகா குமாரசுவாமியிடம் ஒரு கேள்வி.

அன்று கதிர்காம அழகுராணி மன்னம்பெரியிடமோ அல்லது கிருஷாந்தி, ராஜினி, கோணேஸ்வரி போனற நூற்றுக்கணக்கானவர்களிடமோ அல்லது இராணுவத்தால் பாலியல் பலாக்காரத்துக்கு உள்ளாகி அதனால் கரு உண்டாகி ஜேர்மனி வந்து பிள்ளையைப்பெற்று, அதை ஜேர்மனியத் தம்பதிகளுக்கு தத்தாகக் கொடுத்த அந்த தமிழ்ச் சகோதரியிடமோ அல்லது வடக்கில் ஒரு முகாமில் இராணுவத்தினரால் இரண்டு மாதமாக Sex - Slave வாக வைக்கப்பட்டு பின் ஜேர்மனிவந்து உணர்வுகள் இழந்து அங்கங்கள் கண்டித்திரியும் அந்த 13 வயது சிறுமியிடமோ ஒரு ஆயுதம் இருந்திருந்தால் வரலாறு மாறியிருக்கும் அல்லவா?

***ஸ்பாட்டகஸ்தாசன்***
***பிராங்பேர்ட்***

### "அவர்களின் முகங்களில் ஒரு புன்னகையை தவழ விடுவதற்காக நாங்கள் எதனையும் செய்வோம்.."

கொழும்பு நகரச் சுவர்களெங்கும் அண்மையில் ஒட்டப்பட்டிருந்த அழகான போஸ்டர் ஒன்றிலுள்ள வாசகங்களே மேலுள்ளவை.

World Vision International அமைப்பின் இலங்கைக்கிளையான World Vision Lanka குழந்தைகள் தொடர்பாக மேற்கொண்டு வரும் விழிப்பு,உதவி நடவடிக்கைகளில் ஒன்றாகவே மேற்குறித்த விளம்பரமும் அமைந்திருந்தது. மேற்குறித்த சர்வதேச அமைப்பானது, கொரிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 1950ல் கலாநிதி பொப் பியேர்ஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அது நூற்றுக்குமேற்பட்ட நாடுகளில் இன, மத, குல பேதமின்றி உதவியற்ற மக்களின் நல்வாழ்வுக்காக அரும்பணி ஆற்றிவருகிறது.

*''என்னால் எல்லோருக்கும் எல்லாவற்றையும் செய்யமுடியாது. ஆனால், சிலருக்குச் சிலவற்றைச் செய்ய முடியும். செய்ய முடிந்ததை நான் செய்தே ஆக வேண்டும்.''* என்ற இவ்வமைப்பின் ஸ்தாபகரது கூற்றுக்கிணங்க இவ்வமைப்பு பரவலாகப் பணியாற்றத் தொடங்கியது. இதன் இலங்கைக் கிளை 1977முதல் இயங்கத்தொடங்கியது. இவ்வமைப்பானது அதிகம் குழந்தைகள் விடயத்தில் அக்கறை செலுத்திச் செயற்படுகிறது. அவர்களின் 'அறிமுகக் குறிப்பேடு' இவ்வாறு கூறுகிறது.

*''ஏக்கம் நிறைந்த விழிகளுடன் பசியால் வாடும் பிஞ்சுக் குழந்தைகள்.. போரினாலும் இயற்கை அழிவுகளினாலும் பாதிக்கப்பட்டு வேதனையில் கண்ணீர் வடிக்கும் அபலைகள்.. உணவின்றி உடையின்றி ஆதரிப்பார் யாருமின்றித் தவிக்கும் ஏழைகள்.. அவர்களின் வாழ்வு பரிதாபகரமானது. 'வேர்ல்ட் விஷன் லங்கா'' பிள்ளைகள் தாபரிப்புத் திட்டத்தின் கீழ் சிறுவர்களைப் பேணி வளர்க்கிறது...''*

குழந்தைகள் உலகமானது தனித்துவமான விசித்திரமான உலகமாகும். மூன்றாம் உலகமான யுத்தங்களின் நெருக்குவாரங்களுக்குள்ளான எம் நாடு குழந்தைகளின் உலகத்தை சின்னாபின்னப்படுத்தியிருக்கிறது. அவர்களை அற்பஅளவேனும் புரிந்து கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் தான் எம்மில் அநேகருக்கு. இவ்வமைப்பு ஏதோ ஒரு வகையில் குழந்தைகள் நலனில் அக்கறைப்பட்டுச் செயற்படுவது ஆறுதலானது.

★ ★ ★

அண்மைக்காலங்களில் குழந்தைகள் தொடர்பான பல விடயங்கள் (உ=ம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், பால்ய கால உழைப்பு, வீட்டுக் கொத்தடிமைச் சீவியம், இன்னபிற) பரவலாகப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் திரைப்படங்களாக்கப்பட்டும் வருகின்றன. தமிழில் இவை அருமையிலும் அருமை. குழந்தைகள் உலகை நாம் நுணுக்கமாகப் பார்க்கவுமில்லை. படைக்கவுமில்லை. பிற மொழிகளில் படைக்கப்பட்டவை எம்மை உரிய முறையில் வந்தடையவுமில்லை அல்லது நாம் முயற்சிக்கவுமில்லை.

இந்தக்குறையை ஓரளவு நிவர்த்திக்கும் பொருட்டு குழந்தைகள் தொடர்பானபிறமொழிப்படங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தும் வகையில் 'குழந்தைகளின் பிரபஞ்சம்' எனும் நூலை எழுதியுள்ளார் யமுனா ராஜேந்திரன். இது தொடர்பாக தனது நோக்கங்களை இவ்வாறு தெளிவுபடுத்துகிறார் ராஜேந்திரன்.

*''மாற்றுச் சினிமா ஒன்று உலகெங்கும் நிலைபெற்று விட்டிருக்கிறது என்கிற செய்தியை தமிழ்ச் சூழலில் முன்வைப்பது, இரண்டாவதாக, எமது சாத்தியத்துக்கு உட்பட்ட அளவில் எமது நாடுகளில் திரைப்படச் சங்கங்கள் அமைப்புக்கள் போன்றவற்றில் இயங்குபவர்கள் இம்மாதிரிப் படங்களை எமது நாட்டுக்கு கொண்டு வந்து திரையிட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். எமது குழந்தைகளுக்கு இவைகளை பார்க்கக் கிடைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதுதான்...''*

இந்நூலில் பேசப்படுகிற படங்களில் 'Runner' என்ற ஈரானியப்படம் ஈரானிய திரைப்படவிழாவில் காண்பிக்கப்பட்டது. மீரா நாயரின் 'சலாம் பாம்பே'யும் 'விபவி' அமைப்பினரால் காண்பிக்கப்பட்டது. பின்னர் ரூபவாஹினியும் ஒளிபரப்பியது.

*''நிராகரிக்கப்பட்ட குழந்தைகள், ஒடுக்கப்பட்ட குழந்தைகள், வாழ்வோடு போராடி பெருமிதத்துடன் எக்களிப்புடன் எதிர்த்து நின்று உழைக்கும் குழந்தைகளின் தீரமான குரல்கள், முகங்கள் இந்திய தமிழ்ச் சினிமாக்களில் இல்லை....''*

ஆனால்.. ***''இம்மாதிரி ஆயிரம் ஆயிரம் குழந்தைகளின் கதைகள் இம்மண்ணில் உண்டு. நொறுங்கிச் சிதறிய பிரபஞ்சங்கள் உண்டு. சிவகாசி தீப்பெட்டித் தொழிலில், திருப்பூர் பனியன் தொழிலில் குழந்தைப் பருவம் அழிந்து படும் பிஞ்சு விரல்கள் ஒரு கோடி கதை சொல்லும். யாழ்ப்பாணத்துக் குழந்தைகளின் குரூரமாக்கப்பட்ட கனவுகள் பலநூறு இலட்சம் கதை சொல்லும்''*** என இல்லாததையும் இருப்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார் நூலாசிரியர்.

குழந்தைகள் உலகைப் புரிந்து கொள்வதற்காகவும், மாற்றுச் சினிமா பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இந்நூலை வாசிக்க வேண்டும். திரைப்பட விழாக்களை ஏற்பாடு செய்வோர் இவ்வாறான திரைப்படங்களை காண்பிக்கும் முயற்சிகள் எடுக்கலாம்.

மொத்தத்தில் ஒவ்வொருவரும் குழந்தைகளின் முகத்தில் ஒரு புன்னகையை தவழ விட ஏதாவது செய்யவேண்டும்.

***''குழந்தைகளின் பிரபஞ்சம்''***
***''சேவ்'' - சமூக விழிப்புணர்வு, தன்னார்வ கல்விமையம்***
***18, தென்னம்பாளையம், திருப்பூர் - 641604,***
***இந்தியா.***

***'வேர்ல்ட் விஷன் லங்கா'***
***119/2/1, மருதானை வீதி, கொழும்பு - 8***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## திருமலை...

நகர சபைத் தலைவரிடம் இது சம்மந்தமாக சரிநிகர் தொடர்பு கொண்ட போது "இந்த சந்தை பொதுவானதே. தமிழர்களுக்கு மாத்திரம் அமைக்கப்பட்டதல்ல, சிங்களவர்களுக்கு எதிரானதுமல்ல நகர சபைக் கூட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம், உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. சனத்தொகை பெருக்கம் கருதி அமைக்கப்பட்டது.

33 நிரந்தரக் கடைகள் இருக்கின்றன. வீரகேசரி, தினமின ஆகிய பத்திரிகைகளில் விளம்பரங்கள் மூலமாக கேள்வி கோரப்பட்டது. சிங்கள வியாபாரிகளுக்கு நிரந்தரக் கடைகள் தொழில் முறை வாய்ப்பாக இல்லாதபடியால் அவர்கள் விண்ணப்பிக்க வில்லை. தமிழ், முஸ்லிம் வியாபாரிகள் முறைப்படி கடைகளைப் பெற்றுக் கொண்டார்கள். ஐந்து வருடக் குத்தகைக்கு இந்த கடைகள் வழங்கப்பட்டதால் 11 லட்சம் ரூபா நகர சபைக்கு கிடைத்துள்ளது.

40 மரக்கறி நிலையங்கள் நாளாந்த வாடகைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 17 கடைகள் தமிழ் வியாபாரிகளுக்கு எனவும் 15 கடைகள் சிங்கள வியாபாரிகளுக்கு எனவும் 8 கடைகள் முஸ்லிம்களுக்கு எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. மத்திய வீதியை அகலப்படுத்துவதால் தற்போது உள்ள சந்தையில் பாதிப்புற இருக்கும் 7 சிங்கள மரக்கறி வியாபாரிகளுக்கும் இங்கே இடம் கொடுக்கப்படவுள்ளது.

34 மீன் நிலையங்கள் உள்ளன. 12 கடைகள் சிங்களவர்களுக்கு, 12 கடைகள் தமிழர்களுக்கு, 8 கடைகள் முஸ்லிகளுக்கு, 2 கடைகள் அரசடி அர்ச் சூசையப்பர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கஸ்தூரி நகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் எங்கே இனவாதம் இருக்கின்றது என்று கேட்டார்.

கொழும்பு கலந்துரையாடல்கள், "சந்தைத் திறப்பை" தடைசெய்ய முயன்றன வாயினும் சூரியமூர்த்தியின் பிடிவாதத்தால் அண்மையில் பிரிகேடியருடனான கலந்துரையாடலில் சந்தை திறக்க அனுமதிக்கப்பட்டது. அதுவும் ஒரு நிபந்தனையின் பேரில், தற்போது உள்ள சந்தையில் சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அது.

ஒரு சந்தையை அமைப்பதற்கு கூட வழிவிடாத இந்த அரசாங்கம் -அதில் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் போதுமான இடம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் - அதிகாரப் பரவலாக்கம் பற்றி வாய் கிழியப் பேசுவதில் தான் என்ன அர்த்தம் இருக்கப் போகிறது? அதை நம்புவதற்கு தமிழ் மக்கள் ஒன்றும் காதில் பூச் செருகியிருக்க வில்லையே!

## பூ போட்ட விமானங்கள்!

நல்லூர் கந்தசுவாமி கோயில் தீர்த்தத்திருவிழா அன்று இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்று வானில் வட்டமிட்டு பறந்தபடி மலர் மாரி தூவியது. வானிலிருந்து சிறீலங்கா விமானப் படையினர் சொரிந்த பூக்களை மிகவும் பயபக்தியோடு எடுத்துக் தமது காதிலும், தலையிலும் சொருகிக்கொண்டனர் நல்லைக்கந்தனின் பக்த சிரோன்மணிகள் சிலர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்கவே மலர் மாரிபொழிந்ததாக அரச தொடர்பு சாதனங்கள் அறிவித்தன.

இதேபோல் புளியங்குளத்தில் குண்டு மாரிபொழிவதை நிறுத்தச் சொல்லி கேட்பாரா யாழ் மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர், ஜனாதிபதி சந்திரிகா, அவரின் வேண்டுகோளை செவிசாய்ப்பாரா? இதே ஹெலிகொப்டர்களும், விமானங்களும் தானே வவுனிக்குளத்தின் கோயில் மீதும் மக்கள் மீதும், குண்டுகளை பொழிந்தன. மனித இரத்தக் கறை படிந்த கைகள் அல்லவா அவை. என்று கேட்கிறார் நல்லைக் கந்தனின் பக்தர் ஒருவர்.

பரமர்

## பணிவான பணி!

யாழ்ப்பாணத்தில் தற்போது சுவரொட்டிப்போர் நடைபெற்று வருகிறது. அரசாங்கத்தின் சுவரொட்டிகள் குடா நாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன அத்துடன் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள தமிழ்க்குழுக்களும் சுவரொட்டி ஒட்டும் வேலையில் இறங்கியுள்ளன. இவர்கள் அனைவரது சுவரொட்டிகளும், புலிகளைக்குற்றம் சாட்டும் சுவரொட்டிகளாகவே காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தமிழ் இயக்கங்கள் தற்போது யாழ்ப்பாண மக்களைக் கவரும் வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. யாழ் கோட்டை முனியப்பர் கோயில் சிரமதானம், யாழ் பஸ் நிலைய புனரமைப்பு, சிலை புனரமைப்பு, செல்வநாயகம் தூபி புனரமைப்பு போன்ற பல வேலைகளையும் இவர்கள் செய்து வருகின்றார்கள்.

இவர்களில் எவரும் இது வரை பகிரங்கமாக புலிவேட்டையில் இறங்கியதாகத் தெரியவில்லை. துப்பாக்கியுடன் பஸ்ஸை மறித்து 'விடுதலை'ப் பத்திரிகை விற்றவர்கள் சைக்கிளில் வீடு வீடாகச் சென்று மிகவும் பணிவாக புதிய கண்ணோட்டத்தை விற்பனை செய்து வருவதைக் காண முடிகிறது.

பரமர்

## முடக்குதிரைக்கு...

5→

ளுக்கு ஐந்து வீடாவது கொடுப்போமா என்று அரசாங்கம் யோசித்தால், ஐந்து, ஆறடி நிலம் கூட தரமாட்டேன் என்கிற நிலையில் இருக்கிறது சிங்கள கொமிசன்.

இந்த நிலையில் இந்த அறிக்கையை வெளியிட்ட விழாவுக்கு அழையா விருந்தாளிகளாய் அனைத்து முக்கிய கட்சிப்பிரமுகர்களும் - ஆளுங்கட்சி அமைச்சர் ஜெயரத்ன உட்பட - போய் ஆசீர்வாதம் வழங்கியுள்ளார்கள்!

இனவாத அரசியலுக்குள் தீவிரமாகப் போவதைத் தவிர அடுத்த முறை ஆட்சியைக் கைப்பற்ற வேறுவழி இல்லையென்ற முடிவில் அவர்கள் மாறியதாக தெரியவில்லை.

யுத்தம் வெறும் வன்னிக்காட்டுக்குள் மட்டுமல்ல, இனி அனைத்து முனையிலும், அனைத்துப் பிரதேசங்களிலும் தமிழர்கள் மீது நடக்கத்தான் போகிறது என்பதற்கு இதை ஒரு தொடக்கமாக கொள்ளுவதில் தப்பில்லையென்றே தோன்றுகிறது.

முடக்குழுதைக்கு சறுக்கியது சாட்டு என்று சிங்களக் கமிசனை சாட்டாகக் காண்பித்து தீர்வுப் பொதியை ஜனாதிபதி கழற்றி வீசினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

தான் தகப்பனாரைப் போல் கிழித்தெறியமாட்டேன் என்று முன்பு அவர் சொன்னதால் இப்படிச் சொல்கிறார்களோ என்னவோ.

டிசம்பருக்குள் தெரிந்துவிடும்!

## சான்றோர்...

12→

இங்கு வன்முறை தேவைப்படும். ஆனால் நீங்கள் உங்கள் உடைகளை அகற்றி நிர்வாணமாக, நீங்களே உங்களை சிங்கள இனவெறியர்களுக்கு அளியுங்கள் என்று கூறுவது தான் அருவருக்க வைக்கிறது எம்மை. நானும் ஒரு தமிழச்சி என்ற ரீதியில் என்னையும் இப்படிச் செய் என்கிறது கவிதை. எமது அம்மாவை நிர்வாணமாக்காமல் இறக்கும் வரை பாதுகாக்கவே நான் விரும்புகிறேன்.

சிங்கள சகோதரிகளின் யோனிகளுக்கும் என்றுமே இடுக்கண்தான். பாடசாலை அதிபர், ஆசிரியர், பொலிஸ் அதிகாரி, வீட்டு எஜமான் என்று நிரந்தரம் அவர்களும் தான் பாலியல் வல்லுறவுக்குட்படுகிறார்கள். ஆண் ஆதிக்க கொடுங்கோலுக்கு தமிழச்சியும், சிங்களத்தியும் ஒன்றுதான். ஒரு கிழமைக்குள் கிட்டத்தட்ட பத்து சிங்களப் பெண்களின் அவலங்களை வாசித்து விசனப்பட்டோம் சிங்கள, தமிழ்ப் பெண்கள் காலத்திற்கு ஏற்றவாறு நேரத்திற்குத் தகுந்தவாறு வன்முறைக்குட்படுத்தப்படுவதற்கு வரலாறு தான் சான்று.

அரச கொடுங்கோலுக்கு மன்னம் பெரியும், கோணேஸ்வரியும் ஒன்று தான். இங்கு கண்டிக்கப்பட வேண்டியது அரச ஆதிக்க வெறியையும், ஆண் கொடுங்கோலையுமே. இரண்டும் இணையும் பொழுது இனத்துவமும் பல சமயங்களில் ஒன்றிணைகிறது. ஆகவே நட்சத்திரன் அவர்களே, எனது தெளிவின்மையையும், அறியாமையையும் அம்பலப்படுத்தி விட்டீர்கள் என்று நீங்கள் நினைக்கும் பொழுது எனக்கும் உங்களையும் தெளிவுபடுத்த வேண்டும் என்ற அவா எழுவது நியாயம்தான்.

செல்வி திருச்சந்திரன்
கொழும்பு

## அதிகார பூர்வ...

8→

பொருளாக ஆசியாவில் மாறி வருகிறது. இது ஜனநாயக சூழலில் நடைபெறத்தக்கதொன்று. இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள், ஜனரஞ்சக கலாசாரம் ஏன், எனது படைப்புகள் கூட மனித துன்பத்தில் தான் வாழ்கின்றன. இவை எல்லாம் எமது சமூகத்தை மாற்றத்துள்ளாக்குகின்றன.

தலித்தியக்கம், தேசிய வாதம், இன்வாதம் போன்றவற்றின் எழுச்சி என்பது கூட நீங்கள் வரலாற்றை மீள் கண்டுபிடிப்பு செய்ய முயல்வதன் வெளிப்பாடுகள் தான். இது நாம் எம்மை கேள்விக்குள்ளாக்குவதன் வெளிப்பாடு. இது எல்லாம் கலையில் வெளிப்படுகிறது. ஆசியக்கலை இனி ஒரு போதும் அழகாக' இருக்கப் போவதில்லை. எங்கள் முதற் சந்ததியினரின் படைப்புகள் அழகானவை. எமது நடுத்தர வீடுகளின் வரவேற்பறைகளுக்கு ஏற்றவை. ஆனால் எங்கள் படைப்புகளின் அளவுகள் மாறிவருகின்றன.

ஆசிய நவீனத்துவம் தனது சொந்த வழியில் சென்று கொண்டிருக்கிறது. நீங்கள் இனியும் எனது படைப்புகளை பிக்காசோவினூடோ, பிராக்கினூடோ, தூஷமினூடோ புரிந்து கொள்ள முடியாது. இது முற்றாக சூழலுக்கு அல்லது சந்தர்ப்பத்திற்கு கட்டுப்பட்ட ஒன்று (Context bound) எமக்கு ஏற்கெனவே அறுபது வருட நவீனத்துவ வரலாறு உண்டு. எமது கலை நல்லதோ கெட்டதோ என்பதை எந்த வெளிக்காரணியும் தீர்மானிக்காது. எமது சொந்த வரலாற்றுடன் தொடர்பு படுத்தியே அதைத்தீர்மானிக்க முடியும்.

அடுத்த இதழில் முடியும்..

## மேலிருந்து...

பேணுவதற்கு மொழித் தனித்துவமே விசேட அடிப்படை அம்சமாகக் கொண்டது. அப்போது ஒரு நாட்டில் மாத்திரமல்ல, ஒரு மொழியில் மாத்திரமல்ல, அந்த மொழிக்கு அந்தப் பண்பு இருப்பதன் காரணமாக அது இனவாதமாகப் போவதில்லை. தன்னுடைய தனித்துவம் பற்றிய பிரக்ஞை இல்லாவிடில் அது தன்னைப் பேணிக் கொள்ள முடியாமல் போய் விடும். பேணிக் கொள்கிற அந்த இயல்பூக்க உணர்வுக்கு நீங்கள் என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்? அது ஒரு நியாயபூர்வமான கேள்வி. அந்தப் பேணிக்கொள்கிற ஆர்வம் (Interest) இருக்கக் கூடாதா? அது சிலவேளைகளில் மிகையாகப் போய்விடும் ஆபத்தும் உண்டு. அதனால் மிகைப்பட்ட நடவடிக்கைகள் சாத்தியப்பாடுகள் ஏற்படலாம் என்பதற்காக, இந்த இன்றெஸ்ற்றே வேண்டாம் என்று சொன்னால் பல பிரச்சினைகள் வரும். பணபாடு எனறால என்ன? பண்பாட்டினுடைய தளம் என்றால் என்ன? என்ற பிரச்சினைகள் வரும். ஆனபடியால் தான் நான் நினைக்கிறேன். தங்களுடைய தனித்துவத்தைப் பேணுகின்ற சமூக அரசியல் பிரக்ஞையின் ஒரு வெளிப்பாடு தான் இது. ஆனால் இது இனவாதமாக மாறக் கூடாது. மாறினால் அடிப்படை இலட்சியமே இல்லாமல் போய் விடும். அந்த வகையில் நிச்சயமாக தமிழ் பிரக்ஞை என்கிற சொல் தேவைப் படுகிறது. தமிழ்ப் பிரக்ஞை என்னும் இந்த நிலைப் பாட்டை நாங்கள் என்ன பெயர் சொல்லி அழைப்பது? அரசியல் ரீதியாக தமிழ்த் தேசியம் என்று சொல்வதா அல்லது வேறு ஏதாவது என்று சொல்வதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். பொதுவாக தமிழ்த் தேசியம் என் சொல்கிறோமே தவிர அதற்கு வேறு வகையாகச் சொல்ல முடியாமல் இருக்கிறது. தேசியம் என்ற சொல் ஏதோ சில வரலாற்றுச் சூழல்களில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக இந்த அரசியல் பிரக்ஞையை வேறு என்னவென்று சொல்லப் போகின்றீர்கள் என்பது என்னுடைய கேள்வி? ஆனபடியால், இப்படிச் சொல்வது தமிழ்த் தேசியத்துக்கு இடம் கொடுக்கும். ஆனால் தமிழ் இனவாதத்திற்கு இடம் கொடுக்காது. மற்றது இது 'நிவைவலிசத்திற்கு' இடம் கொடுக்குமா என்பது கேள்வி. மீட்பு இயக்கம் என்று சொல்கிற பொழுது எப்பொழுதும் பழைமையைப் பேணுகின்ற அம்சம் தான் நிவைவலிசத் தின் ஒரு அம்சம். நான் நம்புகின்றேன், இந்த மாதிரியான நிவைவலிசம் அல்ல இது. நவீன காலத்தில் நவீன தேவைகளுடன் ஒட்டிய நவீன சமூகத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக் கின்றதற்கான இயல்பான ஒன்று இது. நான் பார்ப்பது, இரண்டு காரியம் ஒரே நேரத்தில் நடக்கிறது: ஒரே நேரத்தில் உலகம் ஒரு கிராமமாகிறது. அதேநேரத்தில் ஒவ்வொரு மக்களும் தங்கள் தங்களுடைய இனத்துவ அடையாளம் பற்றிய இனக்குழுமத் தனித்துவம் பற்றிய பிரக்ஞை உடையவர்களாக இருக்கிறார்கள். இந்த இரண்டுக்கும் ஒரு இணைப்பு வேண்டும். இது வேண்டும் என்பதற்காக அதை ஒதுக்குவது மல்ல. அது வேண்டும் என்பதற்காக இதை ஒதுக்குவது மல்ல, இது இரண்டையும் நாங்கள் சமன் நிலைப்படுத்த வேண்டும். நான் நம்புகிறேன் இந்த உலகத்தினுடைய எதிர்காலம், 21ம் நூற்றாண்டினுடைய அரசியல் வெற்றி இதில் தான் தங்கப் போகிறது. குளோபல் விலேஜுக்கும் உலகக் கிராமம் - இந்த அடையாளத்துக்கும் என்ன மாதிரியான ஒரு இணைப்பு ஏற்படப் போகிறது? இந்த இணைப்பிலே தான் இந்த வெற்றி தங்கி இருக்கின்றது. எப்பேழுதும் நிவைவலிசம் ஒரு பழமை பேண் தன்மை கொண்டது. கல்தோன்றி மண் தோன்றாத' என்ற வாதத்திற்கு நாங்கள் எவருமே ஒத்துப் போக முடியாது. இன்றைய அரசியல் கோஷம் இன்றைய மக்களின் இன்றைய விமோசனத்திற்காக என்பது தான். ஆனபடியால் தேசியம் பற்றி நீங்கள் கேட்பதற்கும் நான் பதில் கொடுப்பதற்கும் இடையில் ஒரு பிரச்சினை இருக்கின்றது. அடிப்படைப் பிரச்சினை தேசியம் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என்று சொல்லவில்லை. தமது மொழி நிலைப்பட்ட தனித்துவத்தை உணர்த்துகின்ற அரசியல், சமூக நெருக்கடிகளினிடையே தமிழ் பேசும் மக்கள் ஒரு குறிப்பிட்ட பிரக்ஞைக்கு ஆளாகின்றார்கள். அவர்களை அச்சுறுத்தும் நெருக்கடி அரச அதிகாரம், பலம் என்பவற்றி னைப் பின்புலமாகக் கொண்டிருப்பதால் இந்த (மேலிருந்து திணிக்கப்படுகின்ற) பிரக்ஞைக்கு ஓர் அரசியல் வடிவம் தானாகவே ஏற்படுகின் றது. ஆனால், இந்தப் பிரக்ஞை தனது எல்லை பற்றிய வரையறைகளை உணர்ந்திருத்தல் வேண்டும். மற்றவர்கள் நமக்கு அதனைச் செய்கின்றார்கள் என்பதற்காக நாம் நம்முடன் உள்ளவர்களுக்குச் செய்யக் கூடாது. நான் சொல்லும் தமிழ்ப் பிரக்ஞையில், தன்னைத் தானே திருத்திக்கொள்ளும் சுய விமர்சன ஆற்றல் இருக்கின்ற தென்றே கருதுகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka



# வெள்ளவத்தை: தகர்க்கப்பட்ட வீடு

செப்டம்பர் 19ம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வெள்ளவத்தை டபிள்யு.ஏ.சில்வா வீதியில் உள்ள கிரகரிஸ் அவெனியூவில் உள்ள தமிழர் ஒருவருக்குச் சொந்தமான வீடு புல்டோசர் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது.

சிவில் உடையில் வந்த இரண்டு பொலிஸாரும் ஒரு குழுவினருமே புல்டோசர் மூலம் முதலில் வீட்டின் முன்பக்க மதிலைத் தகர்த்துவிட்டு வீட்டிலுள்ளவர்களை வீட்டுக்கு பின்புறம் போய் இருக்கும்படி கூறியுள்ளார்கள்.

இதே நேரம் இந்த வீட்டுக்காரரின் உறவினர் ஒருவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார். அவர் இதை பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து வீட்டின் ஏனைய பகுதிகள் தகர்க்கப்படாமல் காப்பாற்றப்பட்டுள்ளன.

இந்த வீட்டின் உரிமையாளரான கோபால்பிள்ளை ஒரு வர்த்தகர் இவர் வட பகுதிக்கான பொருட்களை அனுப்புவது, பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வது போன்ற வர்த்தக நடவடிக்கைகளில்ஈடுபட்டு வருபவர்.

இவரின் வீடு புல்டோசரின் மூலம் தகர்க்கப்படுவதற்கு முதல் நாள் கல்கிஸை பொலிஸாரினால் இவர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

இவர் இதற்கு முன்னரும் (ஒரு மாதத்திற்கு முன்பு) ஒரு தடவை கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டவராவார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கல்கிஸை பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையொப்பமிட்டும் வந்துள்ளார்.

இரத்மலானையில் புலிகளின் மறைவிடமொன்று முற்றுகையிடப் பட்டதன் பின்னணியில்தான் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் சந்தேகம்பற்றிய விசாரணைகள் எதுவும் முடிய முதல் இவை தொடர்பாக எந்த நீதிமன்ற தீர்ப்பும் வழங்கப்பட முன்னர் பொலிஸ் தாமே தண்டனை வழங்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. தமிழர்கள் என்றாலே தன்னிச்சையாக தாமே தண்டனை கொடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் கிடைத்து விடுகிறது. இதற்கு இன்றைய பொ.ஐ.மு. அரசாங்கத்தினர் ஆதரவும் இருக்கிறது என்று கூறுகின்றார்கள் இந்த அரசாங்க காலத்தில் பொலிஸால் பாதிக்கப்பட்ட தமிழர்கள்.

கைது செய்யப்பட்ட நபர் குற்றவாளியெனில் அவரை தண்டிப்பதற்கு சட்டம் இருக்கிறது. அதைவிடுத்து அவரின் இருப்பிடத்தை புல்டோசர் மூலம் நிர்மூலமாக்குவதென்பது அரசாங்கத்தின் ஏவற்படை மூலமாக செய்யப்படும் அரச பயங்கரவாதமே அன்றி வேறில்லை.

இதற்கு முன்னரும் ஜெம்பட்டா வீதியிலுள்ள ஒரு லொட்ஜ் கிரனைட் இருந்ததாக கூறி கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் புல்டோசர் மூலம் இடித்து நிர்மூலமாக்கப்பட்டது. இது பற்றி இன்றுவரை இந்த அரசாங்கம் எந்தப் பொலிஸாரையும் விசாரித்ததாக தெரியவில்லை.

பொதுவாக பொலிஸாரின் முற்றுகையின் போது ஆயுதங்களும் வெடி மருந்துகளும் தாமாகவே முளைத்து விடுவதுமுண்டு. நாரஹேன்பிட்டியில் தொழில் ஆணையாளர் தர்மலிங்கம் கைது செய்யப்பட்டபோது அவர் தங்கியிருந்த பௌத்த விகாரையில் ஆயுதங்கள் கிண்டியெடுக்கப்பட்டதாக கூறப்பட்டதும், பின்னர் அது பொய்யென தெரிய வந்ததும் தெரிந்ததே. இப்படி பல இடங்களில் ஆயுதங்கள் முளைத்துள்ளது ஒன்றும் புதிய கதை இல்லை. இந்நிலையில் இந்த மாதிரி ஆயுதங்கள், வெடிமருந்துகளை பொலிசாரே போட்டு விட்டு வீடுகளை தகர்க்க மாட்டார்கள் என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை.

தலைநகரிலேயே இப்படியெனில் அரசின் இனவாத யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வட கிழக்கில் எத்தனை வீடுகள் புல்டோசரால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உண்மையில் சமாதானம், இன ஐக்கியம் என்பனவற்றுக்காக இயங்குவதாகக் கூறும் சந்திரிகா அரசாங்கத்தின் உண்மைச்சொரூபத்திற்கு இது ஒரு சிறு சான்று மட்டுமே.

எழில்

# தேவையில்லாத உறுப்பினர்கள்!

உத்தேச அதிகாரப் பரவலாக்கத் திட்டத்தின்படி பொதுமக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் மத்திய அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்புகளும், அதிகாரங்களும் மதிப்புக் குறைப்புக்குட்படும் என அரசியலமைப்புத் தொடர்பான வல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதிகாரத்தைப் பரவலாக்கும் புதிய திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வரைவுப் பிரதியின்படி இதுவரை மத்திய அரசாங்கத்திடம் இருந்த பல உரிமைகளும், அதிகாரங்களும் உத்தேச பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படுவதால், மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் மட்டுபடுத்தப்படுமென அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.


மத்தியஅரசு தலையீடு செய்யக் கூடிய துறைகள் புதிய அதிகாரப் பரவலாக்கத்தினூடாக மிகவும் குறைவடைந்துள்ளமையினால் பாராளுமன்ற உறுப்பினர்களால், தமக்கு வாக்களித்த வாக்களார்களுக்குச் சேவையாற்றுவதில் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரத்தைப் பரவலாக்குகையில் அஞ்சல், தொலைத்தொடர்பு, சுகாதாரம் மற்றும் மகளிர் விவகாரம், பௌத்த சமயம் தொடர்பான விடயங்கள் என்பவை மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்விடயங்களில் மட்டும் பாதிப்பேதுமின்றி நேரடியாகவே தொடர்புபட முடியுமாயினும், வேறு எதுவித விடயத்தினுள்ளும் நேரடியாகத் தலையிட்டு தமது மக்கள் சார்பான அதிகாரங்களையும், சிறப்புரிமைகளையும் பாவித்து சேவையாற்ற முடியாது எனவும் இவ்வல்லுனர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

புதிய பிராந்திய சபை முறையின்படி சுகாதார, சுதேச வைத்திய விவகார உயர் கல்வி, கல்விச் சேவை, விவசாய மற்றும் கமத்தொழில் சேவைகள், பெருந்தெருக்கள் கால் நடை வளர்ப்பு, கைத்தொழில், தொழிநுட்ப அபிவிருத்தி, மீன்பிடி, நீர்வள, மின்சக்தி, போக்குவரத்து, வீதி, நீர் வழங்கல், வீடமைப்பு, உள்ளூராட்சி, கூட்டுறவு சங்கங்கள், சுற்றுலாத்துறை, புனருத்தாரணம், கப்பல், சமூகப் பாதுகாப்பு மாகாணப் பொலிஸ் சட்டமும் சமாதானமும், விளையாட்டு மாகாண அரச சேவைகள் போன்ற துறைகளின் சில அதிகாரங்கள் உத்தேச அரசியலமைப்பு வரைவுப் பிரதியினூடாகப் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும்.

மத்திய அரசுக்கு வழங்கப்படும் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் என்ற பிரிவின் கீழ் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து மத்திய அரசாங்கத்துக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யும் தேவை ஏற்படாது என அமைச்சர் சுட்டிக் காட்டுகின்றார்.

# கிளிநொச்சி: ஃபாதருக்கு நடந்தது என்ன?



வண.பிதா அருள் பாலன்..

தென்னிந்தியத்திருச்சபையின் கோணவில் திருச்சபையைச் சேர்ந்த வணபிதா அருள்பாலன் (47) ஒகஸ்ட் 27 அன்று அவரது திருச்சபை உறுப்பினர்களான கே.ஜோசப் (50), அவரது மகன் மிராண்டா ஜோசப் (17) ஆகியோரையும் அழைத்துக் கொண்டு கோணாவிலிலிருந்துமூன்று கிலோ மீற்றர் தொலைவிலுள்ள முறிப்பு எனுமிடத்திலுள்ள அவர்களது அபிவிருத்தித் திட்டப் பண்ணையைப் பார்வையிடச் சென்றார். பண்ணை அமைந்துள்ள பகுதி சூனிய வலயமாகவே உள்ளது. அவ்வாறு சென்ற மூவரும் அப்பகுதியில் மறைந்திருந்த இராணுவத்தினரால் கைது செய்து அழைத்துச் செல்லப்பட்ட பின் காணாமல் போயுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக அக்கராயன் திருச்சபையைச் சேர்ந்த வணபிதா லோறன்ஸ் செப்டம்பர் முதலாம் திகதி திங்கட் கிழமை மல்லாவியில் அமைந்துள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளார். எறத்தாழ 12 நாட்களுக்குப் பிறகு பண்ணையிலிருந்து 50 யார் தொலைவிலுள்ள புது முறிப்பு எனும் இடத்திலுள்ள கைவிடப்பட்ட வீடொன்றினுள் இம்மூவரது சடலங்களும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவே தமக்கு இத் தகவல் தமக்குக் கிடைத்ததாக தென்னிந்திய திருச்சபையின்யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த வணபிதா ஜெயக்குமார் தெரிவித் துள்ளார்.

வணபிதா உட்பட இம்மூவரும் கொல்லப்பட்டது தொடர்பாக அனைத்து பொதுசனத் தொடர்பு சாதனங்களும் மௌனத்தையே கடைப்பிடித்து வருகின்றன.

இந்த மௌனமும் ஒரு வகையில் நல்லது என்று தான் தோன்றுகிறது. இல்லையேல் வேவு பார்த்த மூன்று புலிகள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற கூற்றுடன் அல்லவா அவை மௌனத்தைக் கலைத்திருக்கும்.

## கொலைகளுக்கு எதிராக வாழ்க்கைக்கு உயிரூட்டுவோம்!

ஒக்டோபர் 02, 03ம் திகதிகளில்

காலை 7.00 முதல் மாலை 7.00 வரை

கொழும்பு- கோட்டை புகையிரத நிலையம் முன்னால்

வீதி நாடகம், பாடல்கள், கலந்துரையாடல் உள்ளிட்ட விசேட நிகழ்ச்சிகளுடன்

**நிறைவு விழா**

ஒக்டோபர் 03ம் திகதி

மாலை 4.00 முதல் 6.00 வரை

**இதயமிருக்கும் மனிதர்களுக்கான அழைப்பு**

## புதிர்ப் போட்டி

மனித உரிமைகள் தினத்தை நினைவுகூருமுகமாக மோர்ஜ் அமைப்பின் சட்டக் கல்விக்கும் உதவிக்குமான பிரிவும், மேல்மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து மனித உரிமைகளோடு தொடர்புடைய புதிர்ப் போட்டி நிகழ்ச்சி ஒன்றினை மேல்மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தவுள்ளது.

முதற்சுற்றுப் போட்டிகள் மாவட்ட மட்டத்திலும் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் மாகாண மட்டத்திலும் நடாத்தப்படும்.

இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகும் 3 பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் மனித உரிமைகள் தினமான மார்கழி மாதம் 10 ஆம் திகதி நடைபெறும்.

பரிசு விபரம்

*மாவட்டப் போட்டிகள்*

முதலாம்பரிசு - 3000 ரூபா
இரண்டாம்பரிசு - 1500 ரூபா
மூன்றாம்பரிசு - 1000 ரூபா

*மாகாணப் போட்டிகள்*

முதலாம்பரிசு - 5000 ரூபா
இரண்டாம்பரிசு - 3000 ரூபா
மூன்றாம்பரிசு - 2000 ரூபா

**கலந்து கொள்ளும் மாணவர்கள் ஆண்டு 10க்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி:**

**25-09-1997**

**இணைப்பாளர்**

**'மோர்ஜ்'**

**இல.4, ஐயரத்ன மாவத்தை, கொழும்பு-05**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்